பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 13 வியாழக்கிழமை (29.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 245

## முள்ளிவாய்க்கால் அவலத்துக்குக் காரணமான

# மேஜர் ஜெனரல் பிரசன்ன டீ சில்வா தூதராக பிரிட்டனுக்கு வந்தால் நிச்சயம் கைதாவார்

## தொழிற்கட்சி எம்.பி காடினர் தெரிவிப்பு


'மக்கள் பொதுக்கூட்டம்' நடைபெற்ற வேளை...

லண்டன், ஜூலை 29

**பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராக மேஜர் ஜெனரல் பிரசன்ன டீ சில்வா நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படும் இவ்வேளையில், அவர் பிரிட்டன் வரும் பட்சத்தில் அவர்மீது போர்க் குற்றம் சுமத்தப்பட்டு அவர் நிச்சயம் கைது செய்யப்படுவார் என்று ஆளும் தொழிற் கட்சியைச் சேர்ந்த பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரான பரிக் காடினர் தெரிவித்தார்.**

லண்டன் பிரண்ட் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தொழிற் கட்சியின் 'மக்கள் பொதுக்கூட்டம்' ஒன்றில் கலந்துகொண்டு மக்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரண் ரவுண் ஹோலில் நடைபெற்ற தொழிற்கட்சியின் மக்கள் பொதுக்கூட்டத்தில் பொதுமக்களின் கேள்வி நேரத்தின் போது பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றில் முக்கியமானவையாக இரண்டு கேள்விகள் அமைந்திருந்தன.

**இரு முக்கிய கேள்விகள்**

அவற்றில் முதலாவது கேள்வி லண்டனில் இருந்து ஜெனிவா நோக்கிய சிவந்தனின் மனிதநேயப் பயணம் தொடர்பானது. அவருக்கான ஆதரவையும் ஒத்துழைப்புகளையும் தொழிற்கட்சி வழங்குமா என்று கேட்கப்பட்டது.

இரண்டாவது கேள்வி பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்குப் புதிதாக இலங்கை அரசினால் நியமிக்கப்படும் தூதர் சம்பந்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் அவலத்துக்குக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான '55 ஆவது டிவிசன் படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன டீ சில்வா (24ஆம் பக்கம் பார்க்க)

## சிவந்தன் தலைமையிலான பாத யாத்திரைக் குழு நேற்று பிரான்ஸில்

கொழும்பு, ஜூலை 29

இலங்கையின் யுத்தக்குற்றம் தொடர்பாக விசாரணை செய்ய சர்வதேச ஆணைக் குழு நியமிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை உட்பட இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை முன்னிறுத்தி லண்டனில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான பாதயாத்திரை நேற்று பிரான்ஸை வந்தடைந்தது.

பிரான்ஸின் கடற்கரைப் பிரதேசமான கலை என்ற இடத்தில் சிறிது நேர ஓய்வுக்குப் பின்னர் பாதயாத்திரை நேற்றுக்காலை ஜெனிவா (24ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தம், நல்லிணக்கக்குழு; அகாஷிக்கு அமைச்சர்கள் பஸில், பீரிஸ் விளக்கம்

கொழும்பு, ஜூலை, 29

அரசமைப்பு திருத்த முயற்சிகள் தொடர்பாக அரசு ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுகள் குறித்து ஜப்பானிய அரசுக்கு அங்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை அரசின் தூதுக்குழு விளக்கியுள்ளது.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் இலங்கைக்கான ஜப்பானின் சமாதானத் தூதுவர் யசூசி அகாஷியை அங்கு நேரில் சந்தித்து உரையாடியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மீள்நிர்மாணம் மற்றும் ஜீவனோபாய வசதிகளை மீள ஏற்படுத்தல், அவசரகால ஒழுங்குவிதிகள் நீக்கம், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு ஆகியன குறித்தும் இலங்கைத் தூதுக்குழுவினர் விரிவாக விளக்கினர் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் போருக்குப் பிந்திய அபிவிருத்திப் பணிகள் குறித்து இப்பேச்சுக்கள் அமைந்தன.

இலங்கையில் அதிகளவு ஜப்பானியர்கள் வசிப்பதால் ஜப்பானிய உணவு வகைகளையும் ஜப்பானிய மொழியையும் இலங்கையில் விருத்தி செய்வதற்கு இந்த பேச்சின் பின்னர் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கைக்கு பெரும் எண்ணிக்கையான ஜப்பானியர்கள் சுற்றுலாவை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-சி)

## வன்னியில் நீண்ட காலம் பணியாற்றிய ஆசிரியர்கள் 232 பேருக்கு இடமாற்றம்

### வெளிமாவட்டங்களில் இருந்து 560 பேர் அங்கு செல்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளில் நீண்டகாலம் கடமையாற்றிய ஆசிரியர்களில் 232 பேர் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் அதே நேரம் யாழ்.மாவட்டம் உட்பட வெளிமாவட்டங்களில் இருந்து 560 ஆசிரியர்கள் வன்னிக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

இவர்களின் பெயர்ப்பட்டியல் வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலை மூன்றாம் தவணைத் தொடக்க முதல் நாள் இவர்கள் புதிய பாடசாலைகளில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவுள்ளனர்.

- இவ்வாறு வடக்குமாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் இருந்தும் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்தும் 560 ஆசிரியர்கள் 3 வருடம் கடமைபுரிய வேண்டும் என்ற (24ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கூடுதல் உணவு நிவாரணம்

### உலக உணவுத் திட்டம் இணக்கம்

கொழும்பு, ஜூலை 29

வடக்கு, கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணத்தை அதிகரிக்க உலக உணவுத் திட்டம் இணக்கம் தெரிவித்துள்ளது என மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

தற்போது மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் அரிசி, பருப்பு, சீனி, மா, மரக்கறி எண்ணெய், வெங்காயம் ஆகியவற்றை உலக உணவுத் திட்டம் வழங்கி வருகின்றது. இப் பொருள்களின் அளவை அதிகரிக்குமாறு (24ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. மாணவரின் ஆர்ப்பாட்டத்தால் தலைநகரில் போக்குவரத்து ஸ்தம்பிதம்

பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக நேற்று கோட்டைப் பகுதியில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. புறக்கோட்டையிலுள்ள ஒல்கொட் மாவத்தை, வாகன நெரிசல் காரணமாக சில மணித்தியாலங்கள் மூடப்பட்டது.

றுஹுணு பல்கலைக்கழக மாணவன் சுகுண பண்டாரவின் மரணத்துக்குக் காரணமான பொலிஸாரைக் கைதுசெய்யக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கோஷங்களை எழுப்பியவாறு கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டம் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆரம்பித்து பொலிஸ் தலைமையகம் நோக்கிச் செல்ல விருந்தது. இருந்தும் பொலிஸாரின் கெடி பிடி காரணமாக கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் தரித்து நிற்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, பல்கலைக்கழக மாணவர்கள் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். (ஒ-சி)

## கூட்டமைப்பு விரும்பும் இடத்தில் சந்திக்க தமிழ்க்கட்சிகளின் அரங்கம் தயாராம்!

கொழும்பு, ஜூலை, 29

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தமிழ்க் கட்சிகள் (தமிழ்க் கட்சிகளின் அரங்கம்) நேற்று கொழும்பில் நான்காவது தடவையாக கூடி இனப்பிரச்சினை தீர்வு மற்றும் நடைமுறை விடயங்கள் குறித்து ஆராய்ந்தன.

இதன் போது தமது கலந்துரையாடலில் ஓர் ஏகமனதான தீர்மானத்தை எட்ட வேண்டும் எனக் கருத்தை அனைத்து தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனைத்து தமிழ்க்கட்சிகளும் முன்னெடுக்கும் இந்த முனைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்கேற்க வேண்டும் என்ற விருப்பத்தை அனைத்துக் கட்சிகளும் வெளியிட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அது விரும்பும் இடத்தில் - நேரத்தில் - காலத்தில் சென்று சந்திப்பதற்கு நேற்று கூடிய கட்சிகள் யாவும் இணக்கத்தை வெளியிட்டன.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்திப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தி அனைத்து கட்சிகளும் ஒரு கோரிக்கை (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீதியோரங்கள் தனியார் காணிகளில் குவித்து வைக்கப்பட்டுள்ள

# பழைய இரும்புக் கழிவுப் பொருள்களை ஒரு வார காலத்திற்குள் அகற்ற வேண்டும்

### தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் மேயர்

யாழ்ப்பாணம், ஜூலை29

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாகவும், நுளம்புப் பெருக்கத்துக்குச் சாதகமாகவும் வீதியோரங்களிலும், தனியார் காணிகளிலும் குவித்து வைக்கப்பட்டுள்ள பாவனைக்குதவாத இரும்புப் பொருள்கள் ஒரு வார காலத்திற்குள் அகற்றப்பட வேண்டும் என்று யாழ்.மாநகர சபை மேயர் திருமதி யோ.பற்குணராஜா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:-

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் பாவனைக்குதவாத கழிவுத் தகரங்கள், இரும்புப் பொருள்கள் வீதியோரங்களிலும் தனியார் காணிகளிலும் கண்டபடி குவித்து வைக்கப்பட்டுள்ளன. இது வாகனப் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக இருப்பது மட்டுமன்றி துளம்புப் பெருக்கத்திற்கும் சாதகமாக உள்ளது.

அண்மையில் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற மாவட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் கண்காணிப்புக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த இரும்புப் பொருள்கள் அனைத்தும் ஒரு வாரகாலத்திற்குள் கல்லுண்டாய் வெளிப் பிரதேசத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

இந்த இரும்புப் பொருள்கள் அகற்றப்படாதவிடத்து 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்பு உற்பத்தித் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - என்று அவர் அறிவித்துள்ளார். (ஒ-6)

## கண்ணீர் அஞ்சலி



எமது சண்டிலிப்பாய்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
**திரு.சி.கந்தசாமி**
அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி நடராசா சிவபாக்கியம்**

அவர்களின் மறைவு குறித்து, அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விக் கோட்டம்,
சண்டிலிப்பாய். (சி-569529) - அதிபர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
சிரேஷ்ட ஆசிரியை
**திருமதி**
**பாக்கியலட்சுமி குமாரதேவன்**
அவர்களின் அன்புக் கணவர்

**நடராசா குமாரதேவன்**

அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம்,
கைதடி. (100982) அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு
வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறச்
சென்று பலனழிக்காத நிலையில் இன்று
உயிரற்ற உடலாக உறங்கிக்
கொண்டிருக்கும் எங்கள் சங்கத்தின்
பொதுமுகாமையாளர்

**நடராசா குமாரதேவன்**
(தெ.மே.ப.நோ.கூ.சங்கம் - கைதடி)

அவர்களின் இறந்த செய்தி கேட்டு நாம் செய்வதறியாது திகைத்து நிற்கின்றோம். குடும்பத்தார் படும் துன்பத்தையும் பார்த்து பதறுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
தெ.மே.ப.நோ.கூ.சங்கம்,கைதடி.
(சி-569543)

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண உள்ளூராட்சி, கூட்டுறவு,
கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூக
சேவைகள் அமைச்சுச் செயலாளர்
திருமதி விஜயலட்சுமி ரமேஸ் அவர்களின்
பாசமிகு வாழ்க்கைத் துணைவர்

**திரு. கணேசலிங்கம் ரமேஸ்**

அவர்களின் திடீர் மறைவால் வடக்கு, கிழக்கு மாகாண முகாமை உதவியாளர் சங்கம் பெரும் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு முகாமை உதவியாளர் சங்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றது.

வடக்கு, கிழக்கு மாகாண முகாமை உதவியாளர் சங்கம்,
உள்ளூராட்சி எழுதுநர் சங்கம்.
(சி/569535) யாழ்ப்பாணம்.

## மன்னாரில் டெங்கு; மூவர் உயிரிழப்பு

மன்னார்,ஜூலை29

மன்னாரில் டெங்கு தீவிரமாகப் பரவுகிறது. கடந்த இரண்டு நாள்களில் மூவர் டெங்கு நோயால் மரணமானார்கள்.

மன்னார் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

கடந்த சில தினங்களாக டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அங்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன. (ஒ-ஐ-80)

## திறனாய்வு நிகழ்வு

கண்டாவளை,ஜூலை29

கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வு நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.பூலோகராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஒ-432)

## யாழ்.கல்வி வலயத்தில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஒ-14)

### பாஸ்போட்டை தவறிவிட்டது

யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்குமிடையே பயணம் செய்யும்போது 16.07.2010 வெள்ளிக்கிழமை உதயரூபன் ஜெனிதா, உதயரூபன் ஆர்த்திகன், உதயரூபன் மதுமிதா மூவரதும் பாஸ்போட்டுக்கள் கைதவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

எம். உதயரூபன்,
உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.
தொ.பே. 0772572282

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை29

இணுவில் பொதுநூலக சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வலி. தெற்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சு.சிவகுமாரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.


## அறிவுத்தேடல் வெளிவந்துள்ளது.

க.பொ.த உயர்தர 2010 வணிகத்துறை மாணவர்களே,
உங்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெறுவதற்கு உதவியாக July மாத அறிவுத்தேடல் வெளிவந்துள்ளது.
இதில் பல புதிய விடயங்களுடன் பொருளியல் மற்றும் வணிகக்கல்வி சார்ந்த முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
கிடைக்கும் இடங்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, DMI A/L Institute
மேலதிக விபரங்களுக்கு [illegible]


## வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்

**திரு. ந. வித்தியாதரன்**
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பழைய மாணவன்)



அவர்கள்
பத்திரிகையாளருக்கான
சிறந்த விருதைப்
பெற்றுக்கொண்டதையிட்டு
பெருமகிழ்வு அடைவதுடன்,
மேலும் பல விருதுகள்
பெற்று வளமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**
**ஆசிரியர் கழகம்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண உள்ளூராட்சி,
கூட்டுறவு, கிராம அபிவிருத்தி,
கைத்தொழில்
சமூக சேவைகள் அமைச்சு
செயலாளர்
திருமதி விஜயலட்சுமி ரமேஸ்
அவர்களின் அன்புக் கணவர்

**கணேசலிங்கம் ரமேஸ்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத் தலைவரின் துயரில் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
(சி-569536) சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

## மரண அறிவித்தல்கள்

### தாமோதிரம்பிள்ளை சிவஞானம் (செட்டியார்)

சுப்பிரமணியவாசம், புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதிரம்பிள்ளை சிவஞானம் (செட்டியார்) நேற்று (28.07.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை தாமோதிரம் - பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதிரம்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை, க.லீலாவதி, இ.சிவலட்சுமி மற்றும் பே.இரத்தினேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆழ்வாப்பிள்ளை நாச்சிப்பிள்ளையின் மைத்துனரும் க.வரதராசா, காலஞ்சென்ற க.கனகராசா, சி.மங்களேஸ்வரி, தி.புவனேஸ்வரி, இ.மகேஸ்வரி, க.சிறிஸ்கந்தராசா, க.வைகுந்தராசா, க.பேரின்பராஜா, வ.மனோரஞ்சிதம், செ.மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற பே.சற்குணன் மற்றும் வே.சூரியகுமார், பே.இந்திரகுமார் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2010) வியாழக்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வதனரூபன் மனோரஞ்சிதம்**
(மருமகள்)

### திருமதி கருணைராஜா யசோதரி



குப்பிளானைப் பிறப்பிடமாகவும், சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணைராஜா யசோதரி நேற்று முன்தினம் (27.07.2010) செவ்வாய்க்கிழமை குப்பிளானில் காலமானார்.

அன்னார் கதிரமலை - வசந்தகோகிலம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், கருணைராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலசோமசுந்தரம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் கனுஷன், ஜனுசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கிரிஜா, சுமங்கலி, ராதிகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவரூபன், கிருபா, ரொபின் மற்றும் தங்கராஜா, சரோஜினிதேவி, லலிதாதேவி, யோகமலர் தவராஜா, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காடாகரம்பை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குப்பிளான் ஏழாலை*
*B.Karunairaja*
*Suigenra IN-22,*
*3007 Bern*
*Switzerland.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உலகின் பார்வையை திருப்பிய அகதிக்கப்பல்

உலகின் பார்வையைத் தன் பக்கம் திருப்பி கடந்த நான்கு மாதங்களாக சர்வதேசக் கடலில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது எம்.வி.சன் சீ கப்பல்.

200 இலங்கை அகதிகளுடன் சென்றுகொண்டிருக்கும் இந்தக் கப்பல் அங்கே நிற்கிறது, இங்கே நிற்கிறது என்று ஊடகங்களின் நேரடி வர்ணனைகள் இடம்பெற்றுவரும் இவ்வேளையில் புலம் பெயர் தமிழர்களும், ஈழத் தமிழர்களும் இதனை ஏக்கத்துடன் அவதானித்துக்கொண்டிருக்கின்ற னர். மனித உரிமை ஆர்வலர்களின் கவனத்தைப் பெரும் அளவில் ஈர்த்துள்ள இந்தக் கப்பல் எந்நேரமும் அமெரிக்க அல்லது கனேடியக் கரையை அடையலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தக் கப்பல் விவகாரத்தை அடுத்து இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்பப்பட்டு வருவதால் கனடாவிலும் அமெரிக்காவிலும் உள்ள மனித உரிமைகள் அமைப்புகள் இந்த விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கப்பல் விவகாரம் தொடர்பான விசாரணையில் பல நாடுகள் பங்களிப்புச் செய்து இக்கப்பலின் பயணத்தைக் கண்காணித்து வருவதுடன், தமிழர்களின் வரலாற்றிலேயே இவ்வாறு ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட ஒரு கப்பல் இவ்வளவு அகதிகளுடன் பயணிப்பது இதுவே முதல் தடவை.

அகதிகள் இப்படிக் கப்பலில் வெளியேறுவது இது முதல் தடவை அல்ல. இப்படி ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அகதிகள் அந்தஸ்துக் கோரியோர் ஆயிரத்துக்கும் அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நாட்டில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அல்லது யுத்தம் முடிவடைந்த பின்பு வெற்றி பெற்ற தரப்பினரால் பழி வாங்கப்படலாம் என்ற அச்சம் ஏற்படும் போது இந்த வெளியேற்றம் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகிறது.

1975ஆம் ஆண்டு வியட்நாம் யுத்தம் முடிவடைந்த பின்பும் மக்கள் அகதிகளாக வெளியேறினார்கள். அப்பொழுது Boat People என்ற சொற்பதம் சர்வதேச அரங்கில் பிரபல்யம் பெற்றிருந்தது. நூயன்வான் தியூவின் அரசு வீழ்ச்சி அடைந்து வியட்நாமின் வியட்கொங் கெரில்லாக்கள் ஆட்சியைக் கைப்பற்றி இரு வியட்நாம்களும் இணைந்த சமயம் ஆயிரக்கணக்கானோர் படகுகளிலும் கப்பல்களிலும் வெளியேறினார்கள்.

அப்பொழுது பல நாடுகள் இந்த அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்கின. ஆனால் இலங்கையில் இருந்து வெளியேறும் அகதிகள் சர்வதேச நாடுகளின் அனுதாபத்தைப் பெறமுடியாது இருப்பது மிகவும் துரதிஷ்டமானது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம், இலங்கை அரசு மீதான யுத்தக் குற்ற விசாரணைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றைச் சாட்டாக வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் குடியேறும் நோக்கத்துடனேயே இப்படியான கப்பல் பயணங்கள் இடம்பெறுகின்றன என்று இலங்கை குற்றஞ்சாட்டுகிறது.

ஆனால் ஏற்கனவே இப்படிப் புறப்பட்ட கப்பல்கள் கவிழ்ந்து உயிர்ச்சேதம் ஏற்பட்ட நிலையிலும் இந்த மக்கள் உயிரைத் துச்சமாக மதித்து ஏன் வெளியேறுகிறார்கள் என்பதை இலங்கை அரசும் சர்வதேசமும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆப்கானிஸ்தானில் தற்பொழுது யுத்தம் நடைபெறுகிறது. இதனால் ஆப்கானிஸ்தான் மக்கள் இப்படிக் கப்பல்களிலும் படகுகளிலும் அகதிகளாக வெளியேறுகின்றனர். இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஒருவருடம் கழிந்துவிட்டது. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் நம்பிக்கை பிறக்கவில்லை. அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய எந்த ஒரு தீர்வு யோசனையையும் முன்வைக்க மாட்டாது என்றே பெரும்பாலான தமிழர்கள் நம்புகின்றனர். இதன் காரணமாக இன்றில்லாவிட்டாலும் இன்னும் ஒரு காலத்தில் நாடு அமைதி இழக்கலாம் என்ற அச்சம் இருந்து வருகிறது.

அகதிகள் வெளியேற்றத்தை அரசு தடுத்து நிறுத்த வேண்டுமானால், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படக்கூடிய அரசமைப்பு சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும். அரசு தனது பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி தீர்வு ஏற்படுத்துமானால் நாட்டில் நிரந்தர அமைதி ஏற்படும். இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் இப்படியான கப்பல் பயணங்களும் நின்றுவிடும்.

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் எதிர்காலத்தில் வாக்களிப்பு நிலையத்திலே வெளியிடப்படும்

## தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து அமைச்சர் குணவர்த்தன தகவல்

கொழும்பு, ஜூலை 29

எதிர்காலத்தில் சகல உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளும் வாக்களிப்பு நிலையங்களிலேயே அறிவிக்கப்படும்.

தேர்தல் சீர்த்திருத்தக் குழுத் தலைவரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் முறைக்கு அறிமுகப்படுத்தப்பட இருக்கும் இந்த புதிய நடைமுறை மற்றும் பல சீர்திருத்தங்கள் தொடர்பாக அரசுக்கும் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கவுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் இரு தரப்பினருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளில் இந்தத் தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பாக உடன்பாடு காணப்பட்டுள்ளதாக குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரி மற்றும் 17ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாகவும் உடன்பாடுகள் ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரி நாடாளுமன்ற உறுப்புரிமை கொண்டவராக இருப்பவராகவும் சபை உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் அளிப்பவராகவும் இருப்பார் என்றார் அமைச்சர் குணவர்த்தன.

தேர்தல் முடிவுகள் தொடர்பாக பிரதி தேர்தல் ஆணையாளர் டபிள்யு.பி.சுமணசிறி கருத்துத் தெரிவிக்கையில் எதிர்கால உள்ளூராட்சித் தேர்தல்களின் போது வட்டாரத்துக்கு வட்டாரம் என்ற அடிப்படையில் முடிவுகளை அறிவிக்கக் கூடியதாக இருக்கும், இறுதிமுடிவு ஒவ்வொரு வட்டாரங்களிலிருந்தும் கிடைக்கும் முடிவுகளை வைத்து கணக்கிட்டு மாவட்ட செயலகத்தின் ஊடாக அறிவிக்க முடியும் - என்றார்.

இரு கட்சிகளுக்கும் இடையில் தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றிய பேச்சுக்கள் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுப் பயணம் முடித்து நாடு திரும்பிய பின்னர் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# செல்வச் சந்நிதி ஆலயப் பெருந்திருவிழா 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 29

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும், 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் காலைத் திருவிழா காலை 8 மணிக்கும், இரவுத் திருவிழா மாலை 4 மணிக்கும் நடைபெறும். (த-204-236)

# கிளிநொச்சி, மானிப்பாயில் சம்பத் வங்கிக் கிளைகள் நாளை திறப்பு

கொழும்பு, ஜூலை 29

சம்பத் வங்கிக் கிளைகள் கிளிநொச்சியிலும் மானிப்பாயிலும் நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

காலை 9 மணிக்கு மானிப்பாயிலும் நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சியிலும் சம்பத் வங்கிக் கிளைகள் திறந்து வைக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் இந்தக்கிளைகளை வைபவரீதியாகத் திறந்து வைக்கிறார். (ஒ-ஐ)

# நல்லிணக்க ஆணைக்குழு தனது முதலாவது பகிரங்க விசாரணையை ஓகஸ்ட் 11 ஆம் திகதி ஆரம்பிக்கும்

கொழும்பு, ஜூலை 29

நல்லிணக்க ஆணைக்குழு அதன் முதலாவது பகிரங்க அமர்வை ஓகஸ்ட் 11ஆம் திகதி கொழும்பிலுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத் திலுள்ள அதன் செயலகத்தில் ஆரம்பிக்கவிருக்கின்றது. இத்தகவலை அந்த ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் நேற்று வெளியிட்டார்.

கற்றபாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு ஓகஸ்ட் 11ஆம் திகதி முதல் 12, 13 ஆம் திகதிகளிலும் மூன்று நாள்கள் தொடர்ந்து தனது அமர்வுகளை மேற்கொள்ளும்.

இந்த அமர்வுகளின்போது 20 பேர் வரை சாட்சியம் அளிப்பதற்கு பட்டியல் இடப்பட்டுள்ளார்கள். ஆனால் முதல் மூன்று நாள்களிலும் ஆறு சாட்சிகளின் சாட்சியங்களே பதியப்பட இருக்கின்றன என்று அந்த அதிகாரி கூறினார்.

எமது முதல் அமர்வுகள் இரகசியமாக இடம்பெற்றன. பொதுப் பாதுகாப்பு தேசிய உணர்ச்சிபூர்வமான விடயங்கள் தொடர்பான விசாரணைகளின் போது பொதுமக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். இரகசி யமாகவே விசாரணைகள் நடைபெறும் என்று ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.எம்.சமரக்கோன் தெரிவித்தார். ஏனைய எல்லா விசாரணைகளுக்கும் பொது மக்களும் ஊடகங்களும் அனுமதிக்கப்படுவர் என்றார் அவர்.

ஓகஸ்ட் மாத இறுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஆணைக்குழு செல்லக்கூடும் என்றும் அங்கு விசாரணைகள் நடைபெறும் என்றும் சமரக்கோன் மேலும் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் சட்ட மா அதிபர் சி.ஆர்.டி. சில்வா கடமையாற்றுகின்றார். குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி ரோகான் டி சில்வா, கருணாரட்ண ஹெங்காவத்த, எச்.எம்.ஜி.எஸ்.பலிகக்கார, எம்.ரி. எம். ஜிப்றி, சி.சண்முகம், மனோராமநாதன் மற்றும் மாக்ஸ்வெல் பரனகம ஆகியவர்களாவர். (ப)

# வாகன வசதி கிடைத்துள்ளமையால் உள்ளூர் தபால் சேவை துரிதகதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். பிரதம தபாலகத்தின் வாகன உதவியுடன் உள்ளூர் தபால்கள் சேகரிக்கும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகப் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் உள்ள தபாலகங்களினால் சேகரிக்கப்படும் சகல தபால்களும் வாகனங்கள் மூலம் உடனுக்குடன் யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்படுகின்றன.

இவை உடனடியாகவே தரம் பிரிக்கப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் இந்த உள்ளூர் தபால்கள் போக்குவரத்துச் சபை பஸ்கள் மூலமே யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-224)

# தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்க இன்று யாழ்ப்பாணத்தில் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.மாவட்ட இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் புதிய தொழில் நுட்பங்களை கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இயந்திர உபகரணங்கள் மற்றும் உற்பத்தி பொருள் கண்காட்சி இன்று காலை 9 மணிமுதல் 3 மணி வரை யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வினை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ்.அலுவலகமும், கம்பஹா மாவட்ட அலுவலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

கம்பஹா மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் பண்டார தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் பேக்கரி உற்பத்திகள், பற்றிக் உற்பத்திகள், நாரிழையிலான உற்பத்திகள், ஆடை உற்பத்திகள், சிமெந்திலான உற்பத்திகள், கடதாசி உற்பத்தி போன்றன இடம்பெறவுள்ளன.

இதேவேளை, கடந்த இரண்டு நாள்களாக இவை தொடர்பான தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் தொழில் முயற்சியில் ஈடுபடவுள்ளோர், முதலீட்டாளர்கள், பொதுமக்கள் பங்கேற்று பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-14-310-311-312)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 14 | 30.07.2010 வெள்ளிக்கிழமை |
| திதி | : சதுர்த்தி பி.ப. 02.51 வரை |
| நட்சத்திரம் | : பூரட்டாதி மு.ப. 07.53 வரை |
| சுபநேரம் | : 06.03 - 07.33 |
| ராகுகாலம் | : 10.33 - 12.03 |

# இலவச ஆயுள்வேத வைத்திய சேவையும் புத்தகக் கண்காட்சியும்

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி பிரதேச சபை வரணி உப பணிமனையினால் இன்று வியாழன் - மந்துவில் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் இலவச ஆயுள்வேத வைத்திய சேவையும் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகக் கண்காட்சியும் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறும்.

வைத்திய சேவையில் ஆயுள்வேத மருந்துவகைகள், எண்ணெய் வகைகள் உட்பட மருந்துகள் வழங்கப்படும். புத்தகக் கண்காட்சியில் சிறுவர்களுக்கான புத்தகங்கள் கூடுதலாக காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் நூலக அங்கத்தவராகவும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவரைக் காணவில்லை

### ஜெகேந்திரன் விஸ்ணுதரன் (விஸ்ணு)

(மலைவேம்படி, அளவெட்டி மேற்கு.)



*1996ஆம் ஆண்டு பிறந்த (14 வயது) இவரை 10.07.2010 அன்று காலையில் இருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து எங்கிருந்தாலும் எம்முடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளு மாறு மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

தந்தை: வை.ஜெகேந்திரன்
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
தொ.பே.: 021 3006648
077 6941682

(101097)

## கண்ணீர் அஞ்சலி

எமது வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளர்
திருமதி விஜயலட்சுமி ரமேஸ் அவர்களின்
அன்புக் கணவர்

### திரு. கணேசலிங்கம் ரமேஸ்

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,*
*சுழிபுரம்.*
(சி/569537)
செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## அஞ்சலிக்கின்றோம்

வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்
திருமதி விஜயலட்சுமியின் அன்புக் கணவர்

### கணேசலிங்கம் ரமேஸ்

*(உதவி பிரதம பொலிஸ் பரிசகர்)*

அவர்களது மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம்.
அன்னாரின் மறைவினால் துயருறுவோருடன் இணைந்து நாமும் துயர் பகிர்ந்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாநகர முதல்வர், மாநகர பிரதி முதல்வர்,*
*கௌரவ அங்கத்தவர்கள்,*
*மாநகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.*
(சி/569540)

## மருத்துவப் பெண்கள் ஆர்ப்பாட்டம்

குடும்பநல மருத்துவ சேவையை ரத்துச் செய்து மருத்துவ தாதியர் சேவையை உருவாக்க அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பு சுகாதார அமைச்சுக்கு முன்னால் குடும்பநல மருத்துவப் பெண் உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் நூற்றுக்கணக்கான குடும்பநல மருத்துவப் பெண் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுப் பகல் இடம்பெற்றது. (ஒ-சி)

### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இணைந்த குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. **தொடர்பு: 077 2972745**

### வீடு வாடகைக்குண்டு

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் வாகனத் தரிப்பிடம் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. **தொடர்பு: 077 3155072**
**077 7767976**

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல தனியார் நிறுவனத்தில் பணிபுரியும், மாதாந்தம் 25,000/- வருமானம் பெறும் யாழ். இந்து கௌரவ குடும்ப மணமகனுக்குப் பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். கிரகபாவம் 72, வயது 31.

**விளம்பர இல. 4049**
மே.பா. உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலி சந்தியில் இயங்கிவரும் குறிஞ்சி பார்மசிக்கு ஆங்கில மருந்து விற்பனையில் நன்கு தேர்ச்சி பெற்ற பெண் பிள்ளை தேவை. விவரங்கள் யாவற்றுக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும். சந்திக்கும் நேரம் மு.ப. 10 மணி தொடக்கம் மதியம் 1 மணிவரை

### கமலக்கண்ணன் திருமண சேவை

### மணமகன் தேவை

1981, 7இல் செவ்வாய், 41½ பாவமுடைய பாமசிற் முடித்த, கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு படித்த நற்குணமுள்ள மணமகன் தேவை. (கனடாவிலும் விரும்பத்தக்கது.)

1975, 12 இல் செவ்வாய், 18 பாவமுடைய, லண்டனில் B.Sc. Hons முடித்த மணமகளுக்கு லண்டனில் Degree முடித்த மணமகன் தேவை.

*தொடர்பு:* 077 6070862, 021 4920266
171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி,
நல்லூர் வடக்கு வீதி, நல்லூர்.

## மரண அறிவித்தல்கள்

### நடராசா குமாரதேவன் (தேவன்)

(பொதுமுகாமையாளர், தெ.மே.ப.நோ.கூ.சங்கம், கைதடி)



மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும், தனங்களப்பை வசிப்பிடமாகவும், கைதடியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நடராசா குமாரதேவன் நேற்று (28.07.2010) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - அமிர்தவல்லி தம்பதியரின் அன்பு மகனும் சண்முகம் - தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும், பாக்கியலட்சுமியின் (ஆசிரியை - கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி., கைதடி குருசாமி வித்தியாலயம்) அன்புக் கணவரும், சசிதா (விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக் கழகம்), காயத்திரி (மாணவி - 4ஆம் வருடம் சட்டத்துறை, யாழ். பல்கலைக்கழகம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஏரம்பமூர்த்தி, காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரி, சோதிஸ்மதி, ஞானாம்பிகை மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் அமிர்தலிங்கம், குகேசன், சபேசன், மகாலட்சுமி, பாலசரஸ்வதி, கணேசலிங்கம், ஞானகௌரி, மகேந்திரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

A.P.C. *வீதி,*
*கைதடி தெற்கு, கைதடி.*
(101100)
*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள்.**

### சுகிர்தராணி தர்மகுலராஜா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தராணி தர்மகுலராஜா நேற்று (28.07.2010) புதன்கிழமை காலை 7 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தர்மகுலராஜாவின் அன்பு மனைவியும் சுகிர்தராஜினி (லண்டன்), ரணேந்திரராஜா (கனடா), பிறேமராஜினி (ஓய்வுபெற்ற ஆசிரியை - மெமேறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்), உமாகாந்தராஜா (ஜேர்மனி), நேசராஜினி (கொழும்பு), நிருபராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற யோகரட்ணம் மற்றும் சத்தியவதி (கொழும்பு), சபாநாதன் (பிறேம் நகைமாடம்), விஜயராணி (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராசா, மரியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'விஸ்ணுபவனம்'*
*இந்துக் கல்லூரி வீதி,*
*மானிப்பாய்.*
(101080)
*தகவல்:*
**சபாநாதன்** *(மருமகன்).*

# மரண அறிவித்தல்

## மூத்ததம்பி சபாரட்ணம்

*('நம்பிக்கை' லொறி உரிமையாளர்)*



வங்கி வீதி, புத்தூர் வடக்கு, ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மூத்ததம்பி சபாரட்ணம் நேற்றுமுன்தினம் (27.07.2010) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - குஞ்சம்மா தம்பதியரின் மகனும், கல்வியங்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவஞானம் - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், கனடாவைச் சேர்ந்த சாந்தி, வவா, கிருபா, தேவன், வேணி, ரூபி, ஜெயம், ஜேர்மனியில் வசிக்கும் கண்ணன், ரவி, கருணா (ஆவரங்கால்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.07.2010) வியாழக்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும்.

அஞ்சலி நிகழ்வு இன்று (29.07.2010) வியாழக்கிழமை வங்கிவீதி, ஆவரங்காலில் உள்ள கருணாகரனின் (மகன்) இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆவரங்கால்,
புத்தூர்.
(101098)
*தகவல்:*
**கருணாகரன்** *(மகன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடி ஊற்றல் மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த வேலணை அரசினர் வைத்தியசாலையின் குடும்ப மருத்துவமாது தர்சிகாவின் சடலம், ஊர்காவற்றுறை நீதிவான் இ.வசந்தசேனன், சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.இரத்தினசிங்கம் முன்னிலையில் தோண்டி எடுக்கப்படுவதனை முதலிரு படங்களிலும், தர்சிகாவின் பெற்றோர், உறவினர் கதறி அழுவதனை மூன்றாம் படத்திலும், தோண்டி எடுக்கப்பட்ட சடலம் சட்ட வைத்திய நிபுணரின் பிரேத பரிசோதனைக்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்குப் பொலித்தீனால் பொதி செய்யப்பட்டு 'சீல்' வைக்கப்படுவதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: உமா)

# மருத்துவ மாது தர்சிகாவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுக் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கைதடி ஊற்றல் மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த வேலணை அரசினர் வைத்தியசாலையின் குடும்ப வைத்திய மாது தர்சிகாவின் சடலம் நேற்று புதன்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிவான் இ.வசந்தசேனன் முன்னிலையிலேயே சடலம் நேற்றுக் காலை 8 மணியளவில் தோண்டி எடுக்கப்பட்டது.

இதன்போது யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.இரத்தினசிங்கம், கொழும்பு மனித உரிமை இல்லத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளான சட்டத்தரணி இ.தம் பையா,பி. குகனேஸ்வரன், சயந்தன், கேசவன், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.சுரேஸ் குமார், கைதடி தெற்கு கிராம அலுவலர் கே.சிவகுமார் உள்ளிட்டோரும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை பொலிஸாரும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

தர்சிகாவின் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், அயலவர்கள் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

சடலம் புதைக்கப்பட்ட போது இருந்த நிலைக்கும் சடலம் தோண்டி எடுக்கும் போது இருந்த நிலைக்கும் ஏதேனும் வேறுபாடுகள் இருக்கிறதா என ஊர்காவற்றுறை நீதிவான் இ.வசந்தசேனன், சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் ஆராய்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து சடலம் மீளவும் கறுப்பு நிறப் பொலித்தீன் பையினால் மூடப்பட்டு 'சீல்' வைக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

புதைக்கப்பட்டிருந்த தர்சிகாவின் சடலத்தைத் தோண்டி எடுத்துக் கொழும்புக்குக் கொண்டு சென்று சட்ட வைத்திய நிபுணரின் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாகவே இது இடம்பெற்றது. (த-14-288)

## சைவப்புலவர் சங்கப் போட்டிகள்

அகில இலங்கைச் சைவப்புலவா சங்கத்தின் பொன் விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவிருக்கின்ற சைவ சமயக் கலைப் போட்டிகளுக்கானவிண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் பேச்சு, சைவ சமய வினாடிவினா, பஞ்சபுராணம் ஓதுதல், கதாப்பிரசங்கம், அபிநயம், சைவசித்தாந்த அறிவுப் போட்டி, இசைநாடகம், வில்லுப்பாட்டு என்பன நடத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகள் வகுப்புப் பிரிவுகள் இன்றித் திறந்த போட்டிகளாக நடத்தப்படடும். ஒரு பாடசாலையில் இருந்து ஒவ்வொரு தனிப் போட்டிக்கு இருவரும், குழுப்போட்டிக்கு ஒவ்வொரு குழுவுமாகப் பங்குபற்ற முடியும். (ஐ-16)

யாழ்ப்பாணச் செய்திகள்

# இடம்பெயர்ந்தோருக்கான ஜூன் மாத நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

11.08.2006க்கு முன்னர் இடம்பெயர்ந்தோருக்கான ஜூன் மாத இலவச உலர் உணவு விநியோகம் நேற்று புதன்கிழமை ஆரம்பமானது.

முத்திரையின் 186 ஏ.பி.எஸ்.புள்ளிக்கு இந்த நிவாரணம் விநியோகிக்கப்படுகிறது.

அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் இந்த நிவாரணத்துக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நிவாரணப் பொருள்களின் அளவு விவரம் வருமாறு:

| | | ஒரு அங்கத்தவர் | | 2அங்கத்தவர் | | 3 அங்கத்தவர் | | 4அங்கத்தவர் | | 5அங்கத்தவர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| அரிசி | 49.25 | 2.300 | 113.28 | 4.950 | 243.79 | 8.250 | 406.31 | 9.150 | 450.64 | 12.000 | 591.00 |
| மாவு | 55.45 | 2.000 | 110.90 | 3.000 | 166.35 | 4.000 | 221.80 | 5.000 | 277.25 | 6.000 | 332.70 |
| சீனி | 87.49 | 1.000 | 87.49 | 2.000 | 174.98 | 2.000 | 174.98 | 2.500 | 218.73 | 3.000 | 262.47 |
| பருப்பு | 121.60 | 0.200 | 24.32 | 0.250 | 30.40 | 0.300 | 36.48 | 0.500 | 60.80 | 0.600 | 72.96 |

# 'சிங்கர்' நிறுவன உயரதிகாரிகள் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்

வலி.வடக்கு,ஜூலை 29

'சிங்கர்' நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

இக்குழுவில் இலங்கை சந்தைப்படுத்தல் முகாமையாளர் நசீர் மஜீத், இலங்கை பிரதம நிறைவேற்று அலுவலர் அசோகா பீரிஸ், ஆசிய பிராந்திய 'சிங்கர்' விற்பனைப் பிரதிநிதி சொலின் வோக்கர் மற்றும் சர்வதேச சந்தைப்படுத்தல் பிரதிநிதி குக்மென் உட்பட மற்றும் பல உயரதிகாரிகளும் அடங்கியிருந்தனர்.

இந்தக் குழுவினர் யாழ்ப்பாணம், சுன்னாகம் உட்பட குடாநாட்டில் உள்ள 'சிங்கர்' நிறுவனக் கிளைகளுக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் தமது சுன்னாகம் கிளையில் 'சிங்கர்' விற்பனைப் பொருள்களின் பயன்பாடுகள் சம்பந்தமான விளக்கங்கள், செயல்முறைகளை வழங்கினார்கள்.

அதன் பின்னர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்குச் சென்ற குழுவினர் அங்கு கல்விகற்கும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 50 மாணவிகளுக்கு தலா மூன்று சீருடைகள் வீதம் வழங்கியதுடன் 40 மாணவர்களுக்கு காலணிகளையும் வழங்கினார்கள். அத்துடன் கல்லூரியின் பயன்பாட்டிற்கென ஒரு கணனியை இவர்கள் அன்பளிப்புச் செய்தனர். (த-86)

# கைதடி சித்த மருத்துவத்துறைக்கு குடிதண்ணீர் வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கைதடி சித்த மருத்துவத்துறை மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை ஆகியவற்றுக்குக் குடிதண்ணீர் வழங்கும் பணியைத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை முன்னெடுக்கவுள்ளது.

நிலத்தடிக் குழாய் வசதி மூலம் இந்தக் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதடி வடக்கில் உள்ள நன்னீர்க் கிணற்றில் இருந்து இந்தக் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

இதற்காக முதற்கட்டப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (த-22?)

# கைதடி முதியோர் இல்ல ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

கைதடி முதியோர் இல்ல ஊழியர்கள் 6 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமெனக் கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்தே சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர், செயலாளர் போன்ற அதிகாரிகளுக்குப் பல தடவைகள் கடிதம் மூலம் சிபார்சுடன் கோரிக்கை விடுத்த வண்ணம் இருக்கிறோம் என கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் '' உதயனுக்கு''த் தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி உதயனில் வெளியான 'கைதடி முதியோர் இல்ல ஊழியர்கள் 6 பேருக்கு நிரந்தர நியமனம் இல்லை' என்ற தலைப்பிலான செய்தி பற்றி விளக்கமளிக்கையிலேயேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது விளக்கத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கைதடி முதியோர் இல்லத்தில் கடமைபுரியும் மேற்படி 6 ஊழியர்களும் சமயா சமய அடிப்படையில் தொழிலாளியாக, சுகாதாரத் தொழிலாளியாக, காவலாளியாக, சமையலாளியாக 2003, 2006, 2007 ஆகிய வருடங்களில் நியமிக்கப்பட்டார்கள். இவர்களின் நியமனத்தின்போது சமூக சேவைப் பணிப்பாளரினால் '' இந்த நியமனம் சமயா சமய அடிப்படையிலான நியமனம். இது அமைய நியமனமோ அல்லது நிரந்தர நியமனமோ கோருவதற்கு உரித்துடைய பதவியில்லை என அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் நிரந்தர ஊழியர்கள் விடுமுறையில் செல்லும் தினங்களில் மாத்திரம் இவர்களுக்கு வேலை வழங்குமாறும் கூறப்பட்டது.

எனினும் நானும் எமது நிர்வாகமும் இந்த ஊழியர்கள் சிலருக்கு அடிப்படைக் கல்வித் தகைமை இல்லாது இருந்தும், அவர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்தே சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர், செயலாளர் போன்றவர்களுக்குப் பல தடவைகள் கோரிக்கை விடுத்த வண்ணம் இருக்கின்றோம். அத்துடன் தற்போது திணைக்களமும் அவர்களுக்கு ஏற்ற நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த மாதம் இவர்களின் விவரங்களைக் கோரியிருந்தோம். குறித்த பணியாளர்களுக்கும் எம் செயற்பாடுகள் குறித்து நன்கு தெரியும்- என்றார். (த-319)

# பொலிஸ் - மக்கள் தின நிகழ்வில் 100 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கில் வாழும் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் முகமாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரி யாலயத்தில் நேற்று நடத்தப்பட்ட பொலிஸ் - மக்கள் தினத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

வடபிராந்தியத்தில் முதன் முறையாக பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் ஆலோசனையின் கீழ் 'மக்களுக்கான சிநேகபூர்வமான, தொழில் ரீதியிலான புகழ்வாய்ந்த பொலிஸ் சேவை ' என்னும் கோட்பாட்டுக்கிணங்க நடத்தப்பட்ட இச் சேவை தொடர்ந்து ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் நடைபெறவுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆரம்ப நாள் நிகழ்வில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி.சில்வா, யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் பிரத்தியேக உதவியாளர் பொலிஸ் அத்தியட்சகர் குவின்ரஸ் ரோமன், யாழ். தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல வவுனியாவிலும் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திபால் தல்பதாது தலைமையில் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான நிகழ்வில் நூறு முறைப்பாடுகளும் 5 விசாரணைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (த-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
## பிராந்திய காரியாலயம்
## கண்டி வீதி, யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்
கேள்வி இல.-UNICEF/N/RM/STAFF/2010/91

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய காரியாலயத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கும் ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேலைத்திட்டங்களுக்கும் தகுதியான ஒப்பந்ததாரர்களூடாக அல்லது கிராம அபிவிருத்திச் சங்கங்களூடாகப் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வேலை விவரம் | தேவையான கால அளவு (மாதம்) | தேவையான எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொழில் நுட்ப உதவியாளர் | நீர்க் குழாய் பதித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகளில் அனுபவம், குழாய்க் கிணறு அமைத்தல் மற்றும் பராமரித்தல் வேலையில் அனுபவம், கட்டட வேலையில் அனுபவம். | 06 | 02 |
| ஆய்வு கூட உதவியாளர் | நீர் மாதிரி சேகரிப்பு, ஆய்வுகூட பரிசோதனை, நீர்த்தர தரவுகள் பராமரிப்பு. | 12 | 01 |
| தொழிலாளி | குழாய் பொருத்துதல், பொருள்கள் ஏற்றி இறக்குதல் மற்றும் அதனுடன் தொடர்பான வேலைகள். | 06 | 07 |

**பொதுவான தகைமைகள்:**

01. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்காக தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தகாரர்கள் சபையால் அறிவிக்கும் தினத்திலிருந்து காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கடமையாற்ற வேண்டும்.
02. மேலதிக மணித்தியாலங்களுக்கு கடமையாற்றும்படி முகாமையாளரோ அல்லது சபையின் உயரதிகாரியோ வேண்டுகோள் விடுத்தால் அதற்கேற்ப கடமையாற்றுதல் வேண்டும். மேலதிகமாக கடமையாற்றும் மணித்தியாலங்களுக்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
03. சேவையை வழங்குபவர் தேவையான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலை உடையவராகவும் இருக்க வேண்டும்.
04. மேற்படி சேவையை வழங்குவதற்கு அனுமதிக்கப்படும் நபர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் நிரந்தர நியமனமோஅல்லது சமயா சமய அடிப்படை நியமனத்திற்கோ உரிமை கோர உரித்தானவர் அல்லர்.
05. மேற்கோரப்பட்டுள்ள சேவைகளுக்கு முன் அனுபவம் விரும்பத்தக்கது.
06. சம்பளம் மாதாந்த அடிப்படையில் வழங்கப்படும்.

**தகைமைகள்**

### 01. தொழில்நுட்ப உதவியாளர்
தொழில்நுட்ப தேசிய சான்றிதழ் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குரிய தகுதியான தகைமை கொண்டிருத்தல் வேண்டும். நேர்முகத்தேர்வு மூலம் தேர்வு மேற்கொள்ளப்படும்.

### 02. ஆய்வுகூட உதவியாளர்
க.பொ.த.(உ/த) பரீட்சையில் இரசாயன வியல்/தாவரவியல்/ விலங்கியல்/பௌதிகவியல் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேலாகப் பெற்றிருத்தல் அவசியம்.

ஆய்வு கூட செய்முறைப்பரீட்சை, நேர்முகத்தேர்வு மூலம் தேர்வு மேற்கொள்ளப்படும்.

### 03. தொழிலாளி
ஆண்டு 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இயந்திர வகை சாதனங்களான மோட்டர் இஞ்சின் மற்றும் ஜெனரேட்டர் வகை சாதனங்கள் திருத்துதலில் முன் அனுபவம் மற்றும் மின்சாரவேலைகளில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நேர்முகத்தேர்வு மூலம் தேர்வு மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திக்தி 29.07.2010 தொடக்கம் 09.08.2010 காலை 10 மணி வரை.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி 09.08.2010 காலை 10.05 மணி.

கேள்விப்பத்திரங்களை தாமாகவே தயாரித்து, பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்துடன் சுயவிவரக்கோவையையும் கடித உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்ட வேலையின் விவரத்தை குறிப்பிட்டு பிராந்திய முகாமையாளர் (யா), பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல. 021 222 3742

பிராந்திய முகாமையாளர் (யா),
பிராந்திய காரியாலயம்,
தே.நீ.வ.வ. சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

29.07.2010

(சி/569516)

## பொதுக் கூட்டம்
யாழ்ப்பாணம், ஜூலை 29

வல்வை அ.மி.த.க.பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில்நடைபெறவுள்ளது. (த-204)

## விளையாட்டு விழா
யாழ்ப்பாணம், ஜூலை 29

வண்ணார்பண்ணை யாழ்.ஞானக் குழந்தை இல்லத்தின் 18ஆவது விளையாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வள்ளுவன் சனசமூக நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை பொறுப்பாசிரியை சத்தியதேவன் வளர்மதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு சர்வதேச லயன்ஸ் கழக 301 பி மாவட்டத் தலைவர் என்.ரி. எஸ்.சுபநாதன் முதன்மை விருந்தினராகவும், சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரும் பாலர் கல்விக் கழகப் தலைவருமான எஸ்.பி.காசிநாதன்சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(ஐ-207)

## சைவப் புலவர்களின் விவரங்களை அனுப்பி வைக்கலாம்
யாழ்ப்பாணம், ஜூலை 29

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் பொன் விழா மலர் வெளியிடப்படவுள்ளது. இந்த மலரில் இதுவரை பட்டம் பெற்ற சைவப் புலவர்களது பெயர் விவரங்கள் வெளியிடப்படவுள்ளன.

எனவே சைவப் புலவர்கள் தங்கள் சுயவிவரம், சாதனைகளையும் எழுதி புகைப்படம் ஒன்றுடன் கீழ் வரும் முகவரிகளில் ஏதாவது ஒன்றுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு செயலாளர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார்.

யாழ்.அலுவலகம் இல.153, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கோ அல்லது கொழும்பு அலுவலகம் இல.16, இரத்னாகர பிளேஸ், தெகிவளை என்ற முகவரிக்கோ அனுப்பி வைக்கு [illegible] (த-319)

# 3 ஆம் ஆண்டு
# நீங்காத நினைவலைகள்



மலர்வு:
09.01.1966

உதிர்வு:
17.07.2007

திதி: திருதியை(29.07.2010)

திருமதி
## ஜெகதீஸ்வரி மகேஸ்வரன்
(யேந்தா)

பிறந்தாய் வளர்ந்தாய்
பெரும் செல்வங்கள் அனைத்தும்
குறைவின்றிப் பெற்றாய்
பெற்றவை அனைத்தும் போதுமென
பிறவி துறந்தாய்- பிரிவுத் துயர்
தந்தெங்கள் நெஞ்சில் நிறைந்தாய்.

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர்,
பாசமிகு பிள்ளைகள், அப்பா,
அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்,

'யேந்தா இல்லம்',
கைதடி வடக்கு, கைதடி.

(101070)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
# நன்றி நவிலலும்



தாயின் மடியில்:
04.12.1947

ஆண்டவன் அடியில்:
29.06.2010

## திருமதி கந்தசாமி மனோன்மணி

### இதயம் கனிந்த நன்றிகள்

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவி அவர்களின் மரணச்செய்திகேட்டு ஓடோடி வந்து பல்வேறு வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நேரிலும் தொலைபேசி, தபால், பத்திரிகை, துண்டுப் பிரசுரங்கள் மூலம் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது உணர்வு பூர்வமான நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

இன்று (29.07.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அவைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] மானிப்பாய்.
தொ.பே: 0776554907

குடும்பத்தினர்.

(101081)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுப் பிரதேச வைத்தியசாலையில் தொடர்ந்துவரும் மருத்துவக் குறைபாடுகள்

## தாம் பெரிதும் அல்லல்படுவதாக மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம் , ஜூலை 29

நெடுந்தீவுப் பிரதேச வைத்தியசாலையில் பல்வேறு வைத்தியக் குறைபாடுகள் காணப்படுவதால் தாம்பெரும் அல்லல்படுவதாக அங்குள்ள மக்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அங்கு விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன் ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நெடுந்தீவிலுள்ள 5 ஆயிரம் மக்களுக்கான ஒரேயொரு பிரதேச வைத்தியசாலையாக இது காணப்படுகின்றது. இங்குள்ள மக்களுக்கு அவசர சேவையை வழங்குவதற்காக ஆஸ்பத்திரியில் உள்ள ஓட்டோ கடந்த மூன்று மாதங்களாகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் நோயாளர்களை ஆஸ்பத்திரியில் இருந்து படகுக்குக் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஓட்டோவை யாழ். நகருக்குக் கொண்டு செல்வதற்குப் போதிய படகு வசதிகளும் இல்லை.

மேலும் வைத்தியசாலையின் சிறுவர் விடுதி கட்டுவதற்குக் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு முன்னர் கல் அரியப்பட்டது. ஆனால் இதுவரை கட்டடம் கட்டுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வைத்தியசாலைக்கு இதுவரை தாதிமார் நியமிக்கப்படவில்லை. அத்துடன் எழுதுவினைஞரும் இல்லை. பல் கிளினிக் கட்டடம் மற்றும் அதற்கான உபகரணங்கள் இருக்கின்ற போதும் இதுவரை பல் வைத்தியர் நியமனம் செய்யப்படவில்லை. ஆகக் குறைந்தது வாரம் ஒரு முறையாவது பல் வைத்தியர் வந்து நோயாளர்களைப் பார்த்து விட்டு செல்லும் படியான வசதிகளையாவது செய்து தரவேண்டும்.

வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட சூரிய மின்கலம் தற்போது பழுதடைந்துள்ளது. இப் பிரதேசத்தில் மின்வெட்டு மிக நீண்ட நேர அமுலில் இருப்பதாலும் டீசல் பெற்றுக் கொள்வது மிகச் சிரமமாக இருப்பதாலும் அங்குள்ள மின்பிறப்பாக்கியை எந்நேரமும் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் சூரிய மின்கலத்தினை உடனடியாகத் திருத்தி அமைத்து தந்தால் வைத்தியசாலையின் மின்தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்ய முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகத் தம்மால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு தெரிவித்தனர். (த-319)

# ஆனைக்கோட்டை நல்லெண்ணெய்க்கு தென்பகுதி மக்களிடத்தில் வரவேற்பு

நவாலி, ஜூலை 29

குடாநாட்டில் ஆனைக்கோட்டை நல்லெண்ணெய்க்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது.

நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் இங்கு செக்கில் எண்ணெய் இட்டு அதனை லாண்ட்மாஸ்டரின் உதவியுடனும் காளை மாடுகளின் உதவியுடனும் எண்ணெயை வடித்தெடுத்து கலப்படமின்றி விற்பனை செய்கின்றனர்.

இதனால் தென்பகுதி மக்கள் இங்குள்ள எண்ணெய் விற்பனை நிலையங்களின் முன்பாக வாகனங்களை நிறுத்தி செக்கில் ஆட்டிய எண்ணெயா? எனக் கேட்டு அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்.

அத்துடன் எள்ளுப் பாகையும் விருப்பத்துடன் பெற்றுச் செல்வதைக் காண முடிகிறது. (த-100)

# ஆனைக்கோட்டை - நவாலி வீதி மோசமாகச் சேதமுற்ற நிலையில்

நவாலி, ஜூலை 29

ஆனைக்கோட்டை - நவாலி பிரதான வீதி குன்றும் குழியுமாக உள்ளதால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தற்போது இவ்வீதியில் போக்குவரத்து முன் எப்போதுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது. வீதியிலுள்ள கிடங்குகளை விலத்தி ஓரமாகச் செல்வதால் பல விபத்துக்களும் ஏற்பட வாய்ப்பேற்பட்டுள்ளது.

ஆதலால் சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியைத் திருத்தியமைக்க உடன் ஆவன செய்ய முன்வரவேண்டுமென்று மக்கள் பலரும் கேட்டுள்ளனர். (த-100)

# வடக்கின் அபிவிருத்திப் பிரதேசங்கள் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடமாகாணத்திற்குட்பட்ட முக்கிய அபிவிருத்திப் பிரதேசங்கள் சுற்றுலாத் துறை அமைச்சின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அரசாங்க அதிபர்களையும் துரிதமாகச் செயலாற்றுமாறு பணித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் - நாயாத்துவெளி பிரதேசமும்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் - ஒட்டிசுட்டான் பிரதேசமும்,

யாழ். மாவட்டத்தில் - அராலி, மருதங்கேணி, அம்பன், சாட்டி, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உல்லாசப் பயணத்துறை என்ற அபிவிருத்தியின் கீழ் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு உட்கட்டுமான அபிவிருத்திகள் இடம்பெறவுள்ளன. (த-302)

## சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு இடம் பெறும்.

பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம் பெறும் (த- 302)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரணி, இயற்றாலை பெரியகாளி கோயில் சங்காபிஷேக நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு யாகபூசை, சங்குபூசை என்பன நடைபெற்று முற்பகல் 10.30 மணிக்கு திரவிய அபிஷேகம் நடைபெறும். (204)

# வைத்தியசாலை சிற்றூழியர்கள் சப்பாத்து அணிய வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சகல சிற்றூழியர்களும் காலணி (சப்பாத்து) அணிய வேண்டும் என்று சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு கொண்டுவரப்படுகின்றது.

இந்தப் புதிய நடைமுறையின் கீழ் சகல பணியாளர்களும் தத்தம் சீருடைகளுடன் காலணி (சப்பாத்து) அணிந்தே பணியாற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மதுப்பிரியர்களின் தங்குமிடமாகியுள்ள ஆனைக்கோட்டை சனசமூக நிலையம்



நவாலி, ஜூலை 29

ஆனைக்கோட்டை கலை ஒளி சனசமூக நிலையம் தற்போது மதுப்பிரியர்களின் தங்குமிடமாகவும் கட்டாக்காலி ஆடு, மாடு, நாய்கள் என்பன படுத்துறங்கும் இடமாகவும் மாறியுள்ளது.

நீண்டகாலமாகச் செயற்படாமல் இருக்கும் இந்த நிலையத்தின் வெளி, உள்கதவுகள் திறந்த நிலையில் உள்ளன. பிரதான வீதியோரக் காணியில் இது அமைந்துள்ளதால் பாதுகாப்பு வேலிகளின்றி திறந்தவெளி அரங்காகக் காட்சியளிக்கின்றது.

சிறந்த முறையில் இயங்கி வந்த இந்நிலையம் தற்போது செயற்படாமல் வெறிச்சோடிக் கிடப்பதால் இப்பகுதி மக்கள் பத்திரிகைகள், நூல்கள் என்பவற்றைப் படிப்பதற்கு பல யார் தூரத்திலுள்ள நூல் நிலையங்களை நாடிச் செல்வதாகத் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் மீளவும் இந்த நிலையத்தைச் செயற்பட வைத்து மக்களின் அறிவைப் பெருக்க முன்வரவேண்டுமென்று மேலும் தெரிவிக்கின்றனர். (த-100)

# சித்த வைத்திய நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 29

வைத்திய கலாநிதி செல்லத்துரை பரமசிவம்பிள்ளை எழுதிய "பாரம்பரிய சித்த வைத்திய அணுகுமுறையும்-அனுபவங்களும்'' ஆய்வு நூல் (வாதரோகம்- சுளுக்கு) வெளியீட்டு விழா எதிர் வரும்முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமைமுற்பகல் 10மணிக்குஇடம்பெறும்.

கைதடி சித்த மருத்துவத்துறை தலைவர் டாக்டர் சிவஞானமணி பஞ்சராசா தலைமையில் விழா இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன், வடமாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் டாக்டர் சி. துரைரத்தினம், கைதடி சித்த மருத்துவத்துறை பேராசிரியர் சு.பவானி, யாழ்.பல்கலைக்கழக தத்துவத்துறை தலைவர் பேராசிரியர் க. சிவானந்தமூர்த்தி, கைதடி சித்த போதனா வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி சிவசண்முகராஜா பிரேமா,முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர்பொன். இராமநாதன், சுன்னாகம் சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரி அதிபர்டாக்டர் திருமதி க. பரமசிவம் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆய்வுரையினை வடக்கு- கிழக்கு மாகாணசுதேசமருத்துவமுன்னாள்பணிப்பாளர் டாக்டர் பூ.உரோ மகேஷ்வரர் நிகழ்த்துவார். (த-302)



நெடுந்தீவு பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன்,சி.சிறிதரன் ஆகியோர் விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

அவர்கள் வைத்தியசாலைக்கு விஜயம் செய்வதை முதல் படத்திலும், வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். செல்வநாயகத்துடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும், நோயாளர் ஒருவரைப் பார்வையிடுவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: டிலீப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறானது — விவாத மேடை — சரியானது

## எமது இளையோரிடத்தே பெருகியுள்ள 'பேஸ்புக்' பாவனை

### தவறானது

''பேஸ்புக்'' பாவனை தவறானது. எங்களு டைய பாரம்பரிய கலாச்சாரத்திற்கு இது உத வாது. அண்மையில் வெளி யான தகவலின் படி இலங்கை யின் 50 க்கும் மேற்பட்ட பேஸ்புக் சார்ந்த முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பாவனையாளர் தமது தனிப்பட்ட விடயங்களை புகைப் படங்களை பேஸ்புக் கில் போடுவ தால் பின் விளைவு களை தாமே அனு பவிப்பது புதிதான விடயம் அல்ல. பாவனையாளர்கள் புகைப்படங்களை பதி விறக்கம் செய்து தவறான முறையில் பயன்படுத்து வதால் பிரச்சினைகளுக்கு மற்றவர்களை முகம்கொடுக் கச் செய்வதுடன் தாமும் ஆளாகின்றனர். இளைஞர் யுவதிகள் தமது பருவ வயது தேவைகளை பூர்த்தி செய்வதற்கான சாதனமாகக் கூட இதைப் பயன்படுத்துவது மிக வேதனைக் குரியது. 'மன் ஏச்' இல் இவர்கள் தமது விளையாட்டுப் புத் தியால் தம் வாழ்க்கையை தாமே பாழாக்கிக்கொள்வது காணக்கூடியதாக உள்ளதல்லவா? இது சரியானதா?

சுடர், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி.




### சரியானது

பேஸ்புக் பாவனையில் தீங்கு என்று சொன்ன விடயம் எப்படி தீங்கு ஆக முடியும்? என்ற கேள் வியுடன் அதற்கு பதில் அளிக்கவே நான் இங்கு களமிறங்குகின் றேன்.

முதலில் கல்வியை பற்றி பார்ப்போம். பேஸ்புக் பாவ னையால் மாணவர்களின் படிப்பு கெடுகின்றது என்று கூறமுடியாது. ஏனென்றால் இது நாங்கள் ஓய்வாக இருக் கும் போது பாவிக்க கூடிய விடயம். எமது மன உணர்வை பகிர்ந்து கொள்ளும் இடம். பாடசாலை முடிந்தால் ரியூசன் என்று இருக்கும் எம்மவரிடத்தே தமது ஓய்வு நேரத்தில் 'பேஸ்புக்' இல் தம்மை ஈடுபடுத்திகொள்ளலாம். எந்த விடயமும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சுதான். எனவே நாம் தான் பார்த்து செயற்படவேண்டும். தப்பான படங்களை இடுபவர்கள் பற்றி பேஸ்புக் முறைப்பாடுகள் செய்து அவரது Account ஐ Block செய்யவும்முடியும்.

சிலர் பொய்யான தகவல்களை பரிமாறி கெட்ட நட்புக்கு வழிவகுக்கிறது என்கின்றனர். பேஸ்புக் என்பது முதலில் எமது தொலைந்த உறவுகளை தேடி கண்டுபிடிக்கவே பயன்பட் டது. தற்போது எமது உள உணர்வுகளை பகிர்ந்து கொள் ளும் ஊடகமாக விளங்குகின்றது. நீங்கள் உங்களுக்கு தேவையானவர்களுடன் மட்டும் பேஸ்புக்கில் பழகுங்கள். நீங்களும் உங்கள் பிரத்யேக தகவல்களை அளிக்காது விட லாம் தானே? உங்களுக்கு கெட்டவர் என தோன்றினால் அவருடன் பேஸ்புக்கில் தொடர்பாடலை நிறுத்தலாம் தானே? எவ்வாறாயினும் நல்லது நினைப்பவர்கள் எவற்றையும் நன் மைக்கே பயன்படுத்துவார்கள். என்னை பொறுத்தவரையில் பேஸ்புக் என்பது எமக்கு நன்மையை அளிக்கும் சாதனமே.

**செந்தில் குமரன், யாழ்ப்பாணம்.**

"விவாத மேடைக்கு" விவாதங்களை அனுப்பிய அனைவருக்கும் நன்றிகளும், பாராட்டுக்களும். தொடர்ந்தும் விவாத மேடைக்கு உங் கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். வாக்கு எண்ணிக்கையின் முடிவின் படி எந்த அணி வெற்றிபெற்றது என்பதனையும் சிறந்த ஆக்கமாக தேர்ந்தெடுக்கப்பட்ட விவாதத்தை அனுப்பியவரின் பெயரையும் அடுத்தவார இளவல்கள் வட்டத்தில் எதிர்பாருங்கள்.

## விவாதமேடை

பஞ்சாபி அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது

சரியானது — தவறானது

*இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே ''பஞ்சாபி (சுடிதார்)'' அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது சரியானதா? தவறானதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் ஐவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.*

# இளவல்கள் வட்டம்

## 'க்ளோஸ் - ஃபிரெண்ட்' வேணுமா?

அன்றுதொட்டு இன்றுவரை மனிதனின் இயல்பு மாறவேயில்லை. உணவும், நீரும் மனிதனின் உடலுக்கு எந்தளவு முக்கியமோ அந் தளவுக்கு மனிதனின் மனநிலைக்கு நட்பு மிக முக்கியமானதாகவே இருந்துவருகின்றது ஆனால் நட்பென்ற இந்த அடிப்படைத் தேவை பலருக்கும் பூர்த்தியாவதில்லை. எங்கும் மக்கள் தனிமையில் தவிக்கிறார்கள். இன்றைய வாழ்க்கை சூழலும் கூட நேரத்தையும் சக்தியையும் உறிஞ்சிவிடுகிறது. 17ஆம் நூற்றாண்டில் கிராமவாசி ஒரு வருடத்திலோ தன்னுடைய வாழ்நாள் காலத்திலோ எத்தனை பேருடன் அறிமுகமாகி இருந்தாரோ அதைவிட அதிகமானவர் களிடம் இன்றைய நகரவாசி ஒரே வாரத்தில் அறிமுகமாகிறார். ஒருவர் நூற்றுக்கணக்கான ஆள்களைச் சந்திப்பதால் நெருங்கிய நட்பை வளர்த்துக் கொள்ளும் அளவுக்கு தனிப் பட்ட கவனத்தை செலுத்தி யாருடன் பழகுவதும் கடின மாக இருக்கலாம்.

சமீப காலத்தில் அதிக பர பரப்பில்லாமல் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்த இடர்களில் கூட சமுதாய சூழல் படு வேகமாக மாறிக்கொண்டு இருக்கிறது.

(தொடரும்)



## முதுமை

என் இமைகள்
மூடமறுக்கிறது
அந்த முதிய
உள்ளத்தின்
அநாதரவைக்
கண்டதால்

அந்த மாளிகை
வாயிலில்
படுத்துறங்கும்
ஐந்தறிவு ஜீவனின்
இனியவாழ்வு
ஆறறிவு மானிட
உள்ளம் உந்தனுக்கு
கிடைக்குமோ
தெரியவில்லையே
அந்த உணவகவாயிலில்
நவீனயுகம்
விரட்டியதால்
அந்த ஆதார
வைத்தியசாலை
தெருவோரம்
இளைப்பாறுகிறதோ
அந்த மாளிகையில்
இளைப்பாறிய
முதுமை உள்ளம்
உள்ளம் தான்
உறங்கினும்
உணர்வுகள்
உறங்காது

மிதிலா விக்னேஸ்வரன்,
கரவெட்டி,
யாழ்ப்பாணம்.

கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

''பஞ்சாபி (சுடிதார்)'' அணிந்து ஆலயங்களுக்கு சென்று வழிபடுவது

சரியானது | தவறானது

பெயர் :-.................................................

முகவரி :-.................................................

:-.................................................

அடையாள அட்டை இல:.................................................

உங்கள் தீர்ப்புகளை 26.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே [illegible]

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்* **'இளவல்கள் வட்டம்'** *என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-.................................................

முகவரி :-.................................................

:-.................................................

.......................... திகதி .......................... கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## பெரியோர்களையும் வாழ வைத்த சொல் அம்புகள்

தற்புகழ்ச்சி எப்பொழுது முற்றுப் பெறுகிறதோ
அப்பொழுதே பெருந்தன்மை வெளிப்பட தொடங்குகிறது.

-யங்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரிக்கை

## கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

மட்டக்களப்பு, ஜூலை 29

கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களின் தொழிற் சங்கம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பாற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் 2004, 2005 வருட காலப்பகுதியில் மாகாண கல்விச் செயலாளரின் அனுமதியுடன் போட்டிப் பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டன. இவற்றின் மூலமாக தெரிவு செய்யப்பட்டே இந்த ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

இந்த நியமனங்கள் வருடாந்தம் புதிப்பிக்கப்பட்டு வந்தன. இந்த ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களுக்கு மணித்தியாலத்துக்கு 50 ரூபா வீதம், 2 மணித்தியாலத்துக்கு நூறு ரூபா, நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்தது.

எனினும் இந்த வருடத்தில் ஏழு மாதங்கள் கடந்துவிட்டன. இந்நிலையிலும் இவர்களுக்கு 2010 ஆம் ஆண்டுக்கான சேவை நீடிக்கப்படவில்லை. அதேவேளை இந்த வருடத்தில் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவுமில்லை. எனினும் இந்த ஆங்கில ஆசிரியர்கள் தொடர்ந்தும் சேவையாற்றி வருகின்றனர்.

இந்தத் தகவல்களை உட்படுத்தி இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கிழக்கு மாகாண ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்கள் தொழிற்சங்கம், ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த வருடம் சேவை நீடிப்பும், கொடுப்பனவும் எங்களுக்கு வழங்கப்படவில்லை. எனினும் நாம் நியமிக்கப்பட்ட பாடசாலைகளிலேயே சேவையைத் தொடர்ந்து வருகிறோம்.

ஒரு மணித்தியாலத்துக்கு 125 ரூபாவும் 2 மணித்தியாலங்களுக்கு 250 ரூபாவும் வழங்கப்படும் எனக் கிழக்கு மாகாண கல்வியமைச்சு அறிவித்தல் விடுத்தது.

இதேவேளை கடந்த காலங்களில் எம்மைப் போல் ஒப்பந்த அடிப்படையில் 180 நாள்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய இருபகுதியினருக்கு மாத்திரமே நிரந்தர நிமயமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் கடந்த 'ஆறு வருடங்களாக' சேவையாற்றிவரும் ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை.

கிழக்கு மாகாண பாடசாலைகளில் 400 இற்கு மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கின்றன. இந்நிலையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 57 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்படுவதில் ஏன் தாமதப் போக்கு கடைப்பிடிக்கப்படுகிறது?

மஹிந்த சிந்தனையின் கீழ் ''யொவுன் திரிய' (இளைஞர் ஊக்குவிப்புர திட்டதிற்கமைய அரச பாடசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றும் அனைவருக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உறுதி மொழியும் கடைப்பிடிக்கப்படவில்லை.

தற்பொழுது சகல அரச திணைக்களங்களிலும் 180 நாள்கள் தொடர்ச்சியாக சேவை புரிந்த அனைவருக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என சுற்று நிருபத்தின் வாயிலாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், 6 வருட காலமாக சேவையிலிலுள்ள நாங்கள் இத்திட்டத்தில் உள்ளீர்க்கப்படவில்லை.

எனவே கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களின் கல்வி விருத்தியை நோக்காகக் கொண்டு கிழக்கு மாகாண ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான நியமனங்களை காலதாமதமின்றி வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம். - இவ்வாறு மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 'மூச்சு' சஞ்சிகை வெளியீடு

காத்தான்குடி, ஜூலை 29

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் 'மூச்சு' இலக்கிய சஞ்சிகை வெளியீட்டு விழா, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மருத்துவபீட மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பிரசாந்த் இதற்குத் தலைமை வகித்தார். கிழக்கு பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி கே.பிரேம்குமார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மருத்துவ பீடாதிபதி டாக்டர் கே.ஈ. கருணாகரன், போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டொக்டர் கே.முருகானந்தம் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.யோகராசா விமர்சன உரை நிகழ்த்தினார்.

கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றில் மருத்துவபீடம் வெளியிடும் முதலாவது சஞ்சிகை இதுவாகும். வருடாந்தம் இச்சஞ்சிகை வெளிவரும் எனப் பீடாதிபதி கருணாகரன் தெரிவித்துள்ளார். (ளி)




# நெல்சிப் திட்டத்தை முன்னெடுக்க கல்முனையில் குழு அமைப்பு

கல்முனை, ஜூலை 29

கல்முனை மாநகர சபையில் மாநகராட்சி முதல்வர் அல்ஹாஜ் எஸ். இஸட். எம்.மஷூர் மௌலானா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் நெல்சிப் திட்டத்தை முன்னெடுப்பதற்காகத் திட்டமிடல் குழுவொன்று அமைக்கப்பட்டது.

முதல்வர் மஷூர் மௌலானா, பிரதி முதல்வர் எம்.பஸீர், எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றி மகேந்திரன், மாநகர சபை உறுப்பினர்களான ஏ.எம்.றியாஸ், ஏ.அமிர்தலிங்கம், எம்.தௌபிக், எம்.நிஸார், ஏ.எம். றக்கீப் ஆகியோர் இக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது தவிர மற்றுமிரு குழுக்களும் அமைக்கப்படும் என்றும் முதல்வர் மஷூர் மௌலானா தெரிவித்துள்ளார். மாநகர சபை அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர் அடங்கிய குழுவொன்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றும் மேலதிக குழுக்களாக அமைக்கப்படும் என்றும் முதல்வர் விளக்கியுள்ளார்.

தலா எட்டுப் பேர் அடங்கிய இம் மூன்று குழுக்களும் இணைந்தே கல்முனை மாநகர சபைப் பிரதேசத்தில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்களைத் தயாரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ளி)

# பேராதனையில் பல்கலை ஆவணக்குழு

கண்டி, ஜூலை 29

பேராதனை பல்கலைக்கழக வரலாற்றை ஆவணப்படுத்தும் முகமாக ஆவணக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பீடங்கள், விளையாட்டு, கலை, கலாசாரம், திணைக்களங்கள், நிலையங்கள் ரீதியாக இந்த ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்படவுள்ளது.

இறுதியில் பல்கலைக்கழக பொருள் காட்சி நிலையத்தில் ஆவணங்கள் கண் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பேராதனை பல்கலைக்கழக வரலாறு இதுவரை ஆவணப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# கூட்டு ஒப்பந்தம் என்ற ஒன்று இல்லாவிடின் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்பட்டிருப்பார்களாம்

## இ.தொ.கா. ஊடகப் பேச்சாளர் ஜெகதீஸ்வரன் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 29

''பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான கூட்டு ஒப்பந்தமானது தோட்ட நிர்வாகங்களை நிர்ப்பந்திக்கின்றது. இல்லையேல் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக்கப்பட்டு பழிவாங்கப்பட்டிருப்பார்கள். இந்தக்கூட்டு உடன்படிக்கையானது தொழிலாளர்களின் சக்தி வாய்ந்த ஓர் ஆயுதம். இதனை இழந்து விட்டால் தொழிலாளர்கள் பல வழிகளிலும் குறிப்பாக சம்பள விடயத்தில் வஞ்சிக்கப்பட்டு விடுவார்கள்''

- இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான எஸ். ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

'மீள்பரிசீலனை செய்யக்கூடிய வகையில் கூட்டு ஒப்பந்தம் நிருத்தி அமைக்கப்பட வேண்டும்' -என்ற தலைப்பில் மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் க.சுப்பிரமணியம் விடுத்திருந்த ஊடகச் செய்திக்கு ஆட்சேபனை தெரிவிக்கு முகமாகவே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பெருந்தோட்ட மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையைச் சுமுகமாக நடத்துவதற்கு ஏதுவான சம்பள உயர்வை இ.தொ.காவும், அதனோடு இணைந்த கூட்டு ஒப்பந்தம்சார் தொழிற் சங்கங்களும் பெற்றுக் கொடுத்துள்ளன.

தொழிலாளி ஒருவர் 25 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்வாராக இருந்தால் 10,025 ரூபாவைச் சம்பளமாகப் பெறும் வாய்ப்பு உண்டு. குடும்பங்களில் மூன்று பேர் தொழில் செய்பவர்களாக இருந்தால் மாதம் ஒன்றுக்கு 30,000 ரூபாவைப் பெறலாம்.

அத்தியாவசிப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படலாம். தேயிலை விற்பனையில் உயர்ச்சி - வீழ்ச்சி ஏற்படலாம். இவை சமயாசமய நெருக்கடிகளே தவிர வேறொன்றுமில்லை.

இதற்காக தோட்டத் தொழிலாளர்கள் ஒருவேளை உணவுகூட ஒழுங்காக உண்ண முடியாத நிலையில் உள்ளார்கள் என்று சிலர் கூறுவது தம்மையும் தமது சமூகத்தையும் மேலும் இழிவு படுத்தும் செயலாகும்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் சாதுரியத்தாலும், அணுகு முறையாலுமே தொழிலாளர்களின் ஒட்டுமொத்த பலம் தோட்ட நிர்வாகங்களுக்குத் தெரிகின்றது.

இந்த பலத்திற்கு அஞ்சியே முதலாளிமார் சம்மேளனமும், தோட்டக் கம்பனிகளும் சம்பள உயர்வுகளை வழங்க முன்வருகின்றன. இது தொழிலாளர்களுக்கு ஒரு பிடிமானமாகும் - இப்படி ஜெகதீஸ்வரன் தெரிவித்தார். (ளி)

# வாக்காளர் படிவம் பூர்த்திசெய்ய முப்பது நாள் அவகாசம் தேவை

## நுவரெலியா மாவட்டச் செயலரிடம் கோரிக்கை

நுவரெலியா, ஜூலை 29

வாக்காளர் மீளாய்வு விண்ணப்பப் படிவங்கள் மலையகப் பகுதிகளுக்கு மிகவும் தாமதமாகவே விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனவே, அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு தோட்டத் தொலாளர்களுக்கு சுமார் முப்பது நாள் அவகாசம் வழங்கப்பட வேண்டும் - என ஜ.தொ.காவின் மத்திய மாகாணசபை உறுப்பினர் முரளிரகுநாதன் நுவரெலியா மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வருடம்தோறும் வழமையாக ஜூலை மாதம் முதல் வாரத்தில் வாக்காளர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படும். தோட்டத் தொழிலாளர்களும் அவற்றை ஜூலை இறுதிக்குள் பூர்த்தி செய்து தமது கிராமசேவையாளர்களிடம் ஒப்படைத்துவிடுவர்.

எனினும், இம்முறை ஜூலை மாதத்தில் இருவாரங்கள் கடந்த பின்னரே வாக்காளர் மீளாய்வு விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் தொழிலாளர்கள் பலத்த சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மலையகத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையானவர்கள் தூர இடங்களில் தங்கியிருந்து தொழில் புரிகின்றனர். இவ்வாறு வெளியிடங்களில் உள்ளவர்களைப் பதிவு செய்வதற்கு சத்தியக் கடதாசி பெறப்படவேண்டும். அத்துடன் தூர இடங்களில் தங்கியிருப்பவர்கள் அங்கிருந்து வந்தே தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே, இவ்வாறான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு நுவரெலியா மாவட்டச் செயலாளர் தோட்டத் தொழிலாளர்களுக்கு முப்பது நாள் கால அவகாசத்தை வழங்கவேண்டும் - இப்படி முரளி ரகுநதான் மேலும் தெரிவித்தார். (ளி)




# சப்ரகமுவ மாகாணத்தில் முன்பள்ளிகள் அபிவிருத்தி

மாவனல்லை, ஜூலை 29

சப்ரகமுவ மாகாண ஆரம்பப் பாடசாலைகளின் அபிவிருத்தி நிமித்தம் இவ் வருடம் இரண்டு கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இம்மாகாணத்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகள் பலவும் நன்மையடையவுள்ளன.

முன்னைய வருடங்களை விடவும் இவ் வருடத்தில் நூறு ஆரம்பப் பாடசாலைகளுக்கான புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் பிரஸ்தாப பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை நியமிக்கவும் சப்ரகமுவ மாகாணசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, நகரப்புறப் பாடசாலைகளுக்குள்ள வளங்களைப் போன்று கிராமப்புறப் பாடசாலைகளிலும் வசதிகள், வளங்களை ஏற்படுத்தவும் மாகாண சபை ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அறிவும்

ஒரு அம்மாவுக்கு அவர்கள் வீட்டுக்காரர் மேல் அளவுகடந்த அன்பு. அந்த அன்பை அவர்கள் காட்டுகிற விதம் எப்படித் தெரியுமா? கோப்பி போடும் போது சர்க்கரையை கை நிறைய அள்ளி அதிலே போட்டுக் கொடுப்பார்கள். அந்த அப்பாவி மனுஷனும் அதை அதிகம் விரும்பிச் சாப்பிடுவார். வெளியிலேயும் அதை அதிகம் பொருமையாகச் சொல்லுவார். ''என் மனைவிக்கு வர வர என்மேலே அன்பு அதிகமாக உள்ளது'' என்பார். எப்படி சொல்கிறீர்கள் என்று கேட்டால், ''முன்னாடியெல்லாம் இரண்டு கைப்பிடி சர்க்கரை கோப்பியிலே போடுவார்கள் இப்ப இரண்டு கைப்பிடி சர்க்கரை கோப்பியிலே மூன்று கைப்பிடி அளவுக்கு போடுகிறார்கள்! அப்படி என்றால் அன்பு வரவர அதிகமாகி விட்டது என்றுதானே அர்த்தம்?'' அப்படியென்பார்.

அந்த அம்மாவிடம் அன்பு அதிகமாக இருக்கிறது. உண்மையோ, இல்லையோ, இவரிடம் அறிவு குறைவு என்கிறது உண்மை! அதிலே சந்தேகம் வேண்டியதில்லை! அன்பு மட்டும் ஒருத்தரிடம் இருந்தாலும் பிரயோசனம் இல்லை! அறிவு மட்டும் ஒருத்தரிடம் இருந்தாலும் பிரயோசனம் இல்லை! மகிழ்ச்சியான வாழ்வுக்கு அதிகம் முக்கியமாகத் தேவைப்படுவது இரண்டு!

ஒன்று அன்பு, இன்னொன்று அறிவு. இந்த இரண்டிலே ஒன்றுமே இல்லை என்றால் கூட மகிழ்ச்சி போய்விடும் என்கிறார் தத்துவமேதை பெட்ரண்ட் ரஸ்ஸல். அதை விளக்குவதற்கு அவர் பெரிய உதாரணம் எல்லாம் கொடுக்கிறார். இரண்டாவது உலக யுத்தம் நடந்த சமயத்திலே பல நாடுகளிலே ஏராளமான இராணுவத் தளபாடங்கள் எல்லாம் தயார் பண்ணினார்கள். வெடிமருந்து தொழிற்சாலைகளெல்லாம் உருவாக்கி நவீன போர்க் கருவிகளெல்லாம் தயார் பண்ணினார்கள். இதுக்கெல்லாம் எது காரணம்? அறிவு தான் காரணம்!

அவர்களிடம் இருந்த தொழில்நுட்ப அறிவுதான் இவ்வளவும் தயாராவதற்குக் காரணம். இருந்தும் இதெல்லாம் எதற்கு உபயோகிக்கப்பட்டது? உலகத்துக்கு கெடுதல் பண்ணுவதற்குத் தான் உபயோகிக்கப்பட்டது. யுத்தத்தை ஆரம்பித்த ஜேர்மனியர்களும் சரி மற்ற நாட்டுக்காரர்களும் சரி; தாங்க முடியாத கஷ்டங்களை அனுபவித்தார்கள்!

இதுக்கு என்ன காரணம்? அன்பு என்கிறது இல்லாமல் போனது தான் காரணம். அறிவு ஆயுதங்களைத் தயார் பண்ணியது அன்பு இல்லாததினாலே அது அவர்களுக்கே இடைஞ்சலாகப் போனது! அன்பு சேராத வெறும் அறிவு மட்டும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியவில்லையே! அது மாதிரித்தான் அறிவு சேராத அன்பினாலேயும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடிய வில்லையே! அதே மாதிரித்தான் அறிவு சேராத அன்பினாலேயும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியாமல் ஆபத்தை உண்டாக்கிவிடும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலே இந்தியாவிலேயும் பக்கத்து நாடுகளிலேயும் பயங்கரமான பிளேக் நோய் பரவியது. அது பரவியதற்குக் காரணம் அன்புதான். எப்படித் தெரியுமா?

உறவினரும் - நண்பர்களும் நோயாளிகளைக் கட்டி தழுவித் தங்கள் அன்பைத் தெரிவித்ததனாலே நோய் வேகமாகப் பரவுவதற்கு சாதகமாகப் போனது. அறிவு சேராத அன்பே இந்நிலைமை. இதிலிருந்து தெரிந்திருக் வேண்டியது என்னவென்றால் ''அறிவு இல்லாத அன்பும் அன்பு இல்லாத அறிவும் ஆபத்து'' நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் இரண்டும் கலந்திருக்க வேண்டும்.

ஒரு குடும்பத்திலே மனைவிக்கு உடம்பு சரியில்லை. கணவன் காலையில் எழுந்து முதல் தடவையாக கோப்பி போட்டு மனைவியிடம் கொண்டு போய்க் கொடுக்க மனைவி நீங்கள் சாப்பிடுங்கள் என்றால் எனக்கு வேண்டாம் நீரே சாப்பிடும் என்றார். நீங்கள் என்மேலே எவ்வளவு அன்பு வைத்திருங்கீறிர்கள் என அதற்கு அவர் எனக்கு அன்பு உள்ளதோடு அறிவும் உள்ளது. அதனால் தானே நான் தயார் பண்ணின கோப்பியை உன்னை அருந்த சொன்னேன் என விளக்கம் கொடுத்தார்.

கோ.சுவாமிநாதன்.

# இந்தத் தராசுகளை தூர எறியுங்கள்

மூன்று பேர் ஒன்றாக நின்று சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். வீட்டுக்கு நேரமாகுது என்று முதல் நபர் புறப்பட்டுப் போனார். உடனே இரண்டாவது நபர் இவ்வளவு நேரமும் உத்தமன் மாதிரி கதையளந்திட்டுப் போறன் என்று அவனைப் பார்த்து மூன்றாவது நபரிடம் கேட்டார். அவர் தனக்கு தெரியல என்று நழுவிவிட்டார்.

பேசும் போதே கண்ணைப்பார்த்தியா வாயெல்லாம் தேனாய்ப் பேசுறான் நானும் அதே தான் நினைச்சேன் என்றபடி மூன்றாவது நபர் விடை பெற்றுக் கொண்டார்.

கொஞ்ச நேரம் நடத்து விட்டு இரண்டாவது நபரைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே அயோக்கியன் அவனைக் குறை சொல்கிறானே இவன் ரொம்ப நல்லவனோ? என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டார். இரண்டாவது நபரோ திரும்பிக் கூடப் பார்க்காமல் உன் பேச்சிலேயே தெரியுதே நீ உள்ளே ஒன்று வெளியில் ஒன்று பேசுகிறவன் என்று கணக்குப் போட்டுக் கொண்டே நடையைக் கட்டினார்.

எப்போதும் எதையாவது எவரை யாவது எடைபோட்டுத் தீர்மானிக்கிற இயல்பை விட்டு விடுவது அவசியம். இயேசுவின் வாழ்வில் நடந்த புகழ்மிக்க சம்பவம்.

உடலை விற்று வாழும் ஒருத்தியைக் கல்லால் எறிந்து கொல்ல முயன்றது ஊர். இந்தப் பெண்ணை அடிக்காதீர்கள் என்று இயேசு சொன்னால் அவர் பழைய வேத நெறிகளுக்கு முற்றிலும் எதிரானவர் அடியுங்கள் என்று சொன்னால் இத்தனை காலமும் போதித்த கருணை, இரக்கம், மன்னிப்பு போன்ற எல்லாமே பொய்முழக்கம் என்று அப்போதும் இயேசுவைப் பழி சுமத்த முடியும் என்று சந்தோசப்பட்டனர்.

அடித்துக் கொல்வதா? கூடாதா? போன்ற கேள்வியை வீசியது சமூகம் இயேசு சொன்னார். அடியுங்கள் ஆனால் இதுவரை உடலாலும் மனதாலும் ஒரு பாவமும் செய்யாதவன் எவனோ அவன் கல்லெறியட்டும் என்றார்.

அப்படி எவனும் இல்லாததால் கூட்டம் கலைய ஆரம்பித்தது. நடுங்கியபடி நின்ற பெண் இயேசுவின் காலடியில் விழுந்து என்னைத் தண்டியுங்கள் என்று கதறினாள்.

உன்னைத் தண்டிக்க நான் யார்? இது என் வேலை இல்லை. அது தேவனுக்குரியது. இடையில் நான் புகுந்து கொள்வது அவசியமற்றது என்றார்.

சுகி.சிவம்

# குறை ஒன்றுமில்லாத கோவிந்தன்

மலயத்துவசன் என்ற பெயருடைய மன்னன் மதுரையை ஆண்டான். எல்லாச் சிறப்பும் பெற்ற மன்னனுக்கு மனத்துள் பெருங்குறை. அவனுக்குப் பிள்ளை இல்லை.

கவலையை மறக்க யாகம் செய்தான். 99 யாகம் செய்து முடித்து நூறாவது யாகத்திற்கு திட்டம் வகுத்தான்.

ராஜசூய வேள்வி நூறு செய்தவர்கள் இந்திர பதவி பெறுவர் என்ற அச்சத்தால் இந்திரன் பதறியபடி ஓடிவந்தான்.

பாண்டியன் யாகம் செய்ததன் பயனாக மூன்று வயது குழந்தையாய் அம்பிகை தோன்றினாள்.

எல்லோரும் மகிழ்ந்தனர். மலயத்துவசன் தவிர... ஏன்? நெருப்பில் பூத்த தாமரையாக விளங்கும் அங்கயற்கண்ணி மூன்று திரு மார்புகள் அமைய வெளி வந்தாள். மன்னவனுக்கு அவமானமாக இருக்காதா?

குழந்தை இல்லை என்று நெடுங்காலம் வருந்தி யாகம் செய்தால் அது பெண் மகளாக அல்லவா கிடைத்திருக்கு. ஆட்சிக்கு வாரிசு இல்லாமல் இப்படி பெண்ணாய் பிறந்தது வருத்தமாக இருக்கிறது. எது கிடைத்ததோ அதில் திருப்தி அடையாமல் கடவுளே பிள்ளையாகப் பெற்றும் அரசனால் அதைப் பெரிதாக நினைக்க முடியவில்லை என்று திருவிளையாடலில் புராணத்தில் பரஞ்சோதியர் பாடுகிறார்.

நெடுந்தூரம் பயணம் செய்வதற்காக பேருந்துக்காகக் காத்து நின்றார். கூட்டம் அதிகமாகப் போனதால் இவர் நின்ற நிலையத்தில் பேருந்து நிற்கவில்லை. கடிகாரம் நகரநகர கவலை அதிகமானது. பேருந்து ஒன்று வர பெட்டியுடன் ஓடிப் போய் ஏறினார். வண்டி நகர்ந்தது.

அவர் கண்கள் பஸ் முழுவதும் நோட்டம் விட்டது. உட்கார இடம் கிடைக்குமா என்று கடைசி இருக்கை வரை நகர்ந்து போய் நின்றார். அதில் ஆறு பேர் இருந்தார்கள். இரண்டு மூன்று நிறுத்தங்கள் போனதும் ஒருவர் இறங்கினார். அதில் தான் இருந்து கொண்டார்.

கடைசி இருக்கை தம்மீது இருந்தவர்களை தூக்கித் தூக்கிப் போட்டது. மீண்டும் முன்பக்க இருக்கை கிடைக்குமா என்று விழித்து இருந்தார்.

வங்கியிலிருந்து பணம் எடுத்துக் கொண்டு ஒருவர் வந்தார். வரும் போது ஒரு ரூபாய் கட்டு ஒன்று வழியில் விழுந்து விட்டது. அவர் கவனிக்கவில்லை. விழுந்த வேகத்தில் ஒரு ரூபாய் மட்டும் காற்றில் பறந்து கொஞ்சம் தள்ளி வந்து விட்டது. அந்த வழியாக வந்த ஒருவர் அதனை எடுத்துக் கொண்டார். ரொம்ப சந்தோசம் கடலையை வாங்கிக் கொறித்தபடி நடையைக் கட்டினார்.

கொஞ்சம் கழித்து இன்னொரு வர்... அந்த வழியில் வரும் போது அந்தப் பணத்தைப் பார்த்து 99 ரூபாய் இருக்கிறதே ஒரு ரூபாய் குறைகிறதே என்று அதனை அங்கும் இங்கும் உற்றுப் பார்த்தார். அவருக்கு 99 ரூபாய் கிடைத்தது சந்தோசம் இல்லை. அந்த ஒரு ரூபாய் கிடைக்காதது தான் கவலை.

அதற்குள் வங்கியிலிருந்து பணம் எடுத்துக் கொண்டு போனவர் வீடு போய் பையைத் திறந்து பார்த்தார். ஒரு கட்டுப் பணம் குறைவது தெரிந்தது. உடனே வந்த வழியெல்லாம் தேடினார்.

99 ரூபாய் கட்டை வைத்திருந்தவரிடம் பணத்தைப் பறித்து எண்ணிப் பார்த்தார் எங்கே ஒரு ரூபாய் குறைகிறதே என்று அதட்ட தன் கையில் இருந்த ஒரு ரூபாயைக் கொடுத்து விட்டு நடையைக் கட்டினார்.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்

தொகுப்பு : ஞானஆதவன்

அமைதியான அமைவிடம். ஆடம்பரம் இல்லாத இரண்டு பக்கமும் விறாந்தையைக் கொண்ட பெரிய வீடு. எங்கு நோக்கினும் ஆன்மீகத்தின் அடையாளச் சின்னங்கள். வடக்குப்பக்க விறாந்தைக்கு முன்னால் பாதங்களும் தண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டு பின்னணியில் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமியின் படம் (சுவரில்) உள்ள அழகிய சிறிய ஆலயம். ஆலயத்துக்கு முன்னால் வட்டமாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தடாகத்தில் வெண்தாமரையில் வீற்றிருக்கும் கலைமகளின் தத்துரூபமான சிலை. தெற்குப்புற விறாந்தையில் கதிரை மேசை. எங்கு நோக்கினிலும் ஆன்மீகத்தின் அடையாளங்கள், அழகான சுவாமிப்படங்கள். மாலை வேளையிலும், விடுமுறை நாள்களிலும் வறிய மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ்மொழிப் போதனைகள். அவற்றோடு பஜனை, மாலைகட்டுதல் மற்றும் ஆத்மீகம்சார் போதனைகள். இவைதான் கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தின் வெளிப்பார்வை. கோட்டத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் தனது 72ஆவது வயதிலும் தளராத மன உறுதியோடு மேற்கொண்டு வருகின்றார் திருமதி சிவலோசனா கனகரத்தினம்.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்துக்கு முன்பாக யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இருந்து பிரிந்து விடுதிக்கு சமாந்தரமாக தெற்கு நோக்கிச் செல்லும் வீதிதான் கோப்பாய் பழம்றோட். இந்த வீதி இருபாலைச் சந்தியில் மீண்டும் யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியைச் சந்திக்கின்றது. பழம் றோட்டில் நாவலர் பாடாசாலையில் இருந்து 700 மீற்றர் தூரத்தில் வீதிக்குக் கிழக்குப் புறத்தில் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் அமைந்துள்ளது. வீதியில் இருந்து நோக்கும்போதே ஆன்மீக அடையாளங்கள் தெரியும். கோட்டத்தின் சிறிய கேற்றின் வளைவில் விபூதியின் திரிபுண்டர அடையாளம், இந்து மதத்தையும் ஆன்மீகத்தையும் வெளிக்காட்டி அழைப்பதைக் காணலாம். ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி என அழைக்கப்படும் ஹவாய் சுவாமியின் முதன்மைச் சீடர்களில் ஒருவனாய் ஹவாயில் இருந்து தொண்டாற்றும் தொண்டுநாத சுவாமிகள். தொண்டுநாத சுவாமிகள் தாய்தான் கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தை தற்பொழுது நிர்வகித்துவரும் சிவலோசனி (வயது - 72). இவர் முன்பு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியை. தொண்டுநாத சுவாமிகளின் தந்தையார் பெயர் கனகரத்தினம். இவர்களின் 12 பரப்புக் காணியில் அமைந்துள்ளது சுப்பிரமுனிய கோட்டம்.

குடும்பத்தின் குல விளக்காக பிறந்த ஒரே ஒருமகன்தான் இரமேஸ்குமார் (தொண்டுநாத சுவாமிகள்) தீட்ஸாநாமம். 1962ஆம் ஆண்டு பிறந்த இரமேஸ்குமார் 1979ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோப்பாயில் சிறுவர் முன்னேற்றக்கழகம் ஒன்றை நிறுவி, சிறுவர்களுக்கான நல்லொழுக்கம், கல்வி வளர்ச்சி, இறை நம்பிக்கை என்பவற்றை ஊட்டுவதில் ஈடுபட்டுவந்தார். பின்னர் மாமனாருடன் மலேசியாவுக்குச் செல்வதற்காக கொழும்புக்கு வந்து இராமகிருஷ்ணன் மிசன் விடுதியில் (வெள்ளவத்தையில்) தங்கியிருந்த காலப்பகுதியில் இராமகிருஷ்ணமிசன் சுவாமிகளுடன் உரையாடிய வேளைகளில் ஆத்மீக பணியில் மேலதிக ஈடுபாடு ஏற்பட்டது.

ஹவாய் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி இலங்கைக்கு வந்திருந்த வேளையில் அவரை கோப்பாய்க்கு வரவழைத்து சிறுவர் முன்னேற்றக் கழகத்தின் நிகழ்வில் கலந்துகொள்ள வைத்த இரமேஸ்குமாரை ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி வாகனத்தில் ஏறி திரும்பிச் செல்லும் போது காரில் இருந்தபடியே கட்டியணைத்து நயன தீட்சை வழங்கி விடைபெற்றுச் சென்றார்.... *(தொடரும்)*




# உரும்பிராய் இந்துக் கல்லூரி




வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வண் ஏ.பி பாடசாலைகளில் ஒன்று உரும்பிராய் இந்துக் கல்லூரி. யாழ்ப்பாணம், பலாலி வீதியில் உரும்பிராய் சந்தியைக் கடந்து வடக்கு நோக்கிச் செல்லும்போது பிரதான வீதிக்கு மேற்குப் புறமாக வீதியோரத்தில் அமைந்துள்ளது. தற்பொழுது தரம் 6 இல் இருந்து தரம் 13வரை உள்ள கல்லூரியில் 532 மாணவர்கள் வரையில் கல்வி பயில்கின்றனர். சிரேஷ்ட, இடைநிலைப் பிரிவில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு பிரிவிலும் 154 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். கல்விக்கான வளங்களும் கவிநிலையும் நிரம்பப் பெற்ற ஆரோக்கியமான சூழல் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு பொருத்தமான வகுப்பறை வசதிகள் நிரம்பப்பெற்ற கல்லூரியின் அதிபராக அ.ஈஸ்வரநாதன் பணி புரிகின்றார். 30 ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்.

1911ஆம் ஆண்டு சித்திரை மாதம் 03ஆம் திகதி ஸ்தாபிதம் செய்யப்பட்டது. கல்லூரியை ஸ்தாபித்த வைத்திய கலாநிதி பு.வல்லிபுரம் ஆரம்பநாள் அன்று சுருட்டு சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருந்த 05 சிறுவர்களை சேர்த்து கல்லூரிக்கான வித்தியாரம்பத்தை நடத்தியதாகக் கூறப்படுகின்றது. கல்லூரியின் ஸ்தாபிதகால அதிபராக சின்னையா அவர்கள் கடமையாற்றியுள்ளார்.

உரும்பிராய்ச் சந்திக்கு அண்மையில் உள்ள கிறீஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் கிறீஸ்தவ குருமாரால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பாடசாலை செயற்பட்டு வந்தது. அதை அடுத்து சைவப்பிள்ளைகள் சைவசமயம் கலந்த சூழலில் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணத்தினால் உரும்பிராய்ப் பகுதியில் வாழ்ந்த பெரியோர்களின் கருத்தொற்றுமையால் செல்லப்பா என்பவரின் வீட்டு விறாந்தையில் 05 மாணவர்களுடன் ஆரம்பமானது. இந்த நிலையில் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வேலுப்பிள்ளை பாடசாலைக்கென 10 பரப்புக் காணியை வழங்கி நிரந்தர கட்டடம் நிறுவுவதற்கு உதவினார். குறித்த காணியில் உரும்பிராய் 'இந்துக் கலவன் பாடசாலை' என்ற பெயரில் ஓலைக்கொட்டிலில் செயற்பட்டு வந்தது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நேரமும் பாடசாலை நிறுவியவர்களின் அயராத முயற்சியாலும் அதே ஆண்டு இறுதியில் 70 மாணவர்கள் பாடசாலையில் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கியதாகவும் பாடசாலைக்கு மாணவர்களை சேர்த்துக் கொடுப்பதற்கும் பாடசாலைக்கான வள வசதிகளையும் மற்றும் உதவிகளையும் வழங்குவதிலும் வைத்தியர் வல்லிபுரம் மற்றும் அமிர்தலிங்கம், அம்பலவாணர் உள்ளிட்ட பெரியோர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பாடசாலையின் வரலாற்றில் தனியிடம் பெறுகின்றது.

இதேகாலப் பகுதியில் சைவப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை கருத்தில்கொண்டு கிராமங்கள்தோறும் சைவப்பாடசாலைகளை ஆரம்பிக்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஒரு சில வருடங்களில் பாடசாலையின் பரிபாலனம் இந்துக் கல்லூரிச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1915ஆம் ஆண்டு பாடசாலையின் தமிழ்ப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைமை ஆசிரியராக நீர்வேலியைச் சேர்ந்த பண்டிதர் வேலுப்பிள்ளை பணியாற்றினார். இந்தத் தமிழ் பிரிவில் அரிவரி தொடக்கம் மூன்றாம் வகுப்புவரை தமிழ்மொழி மூலம் ஆரம்பக்கல்வி போதிக்கப்பட்டு வந்தது. மூன்றாம் வகுப்பில் சித்தியடைந்ததும் ஆங்கில பாடசாலையில் முதலாம் வகுப்பில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதி முன்னோடிப் பரீட்சை - 2010, ஜூலை

## கேம்பிரிட்ஜ் கல்வி நிலையம், கண்டி.

**உயிரியல்** Two Hours

SPECIAL GUIDE FOR 2010 A/L SCIENCE STUDENTS

## பகுதி I

01. பின்வருவனவற்றுள் அதி நீண்ட தொடர் காபன் சங்கிலியை உடைய சேர்வை எது?
1) செலுலோசு. 2) மாப்பொருள்.
3) கிளைக்கோஜன். 4) பொஸ்போலிப்பிட்டு.
5) DNA

02. தாவரக் கலன்கட்டு ஒன்று கீழே தரப்பட்டுள்ள எந்த ஒரு உயிர்ப் பதார்த்த ஆட்சி நிரை மட்டத்திற்கு உரியதாகும்?
1) கலம். 2) இழையம்.
3) அங்கம். 4) அங்கத்தொகுதி.
5) அங்கி.

03. உயிரியல் மாமூலக்கூறுகள் தொடர்பில் தவறான கூற்று எது?
1) அவை யாவும் உயிர்ப் பல்பகுதியங்களாகும்.
2) சார்மூலக்கூற்றுத் திணிவு 104 - 1010 உடைய சேவைகளாகும்.
3) குளோரோபில், ஈமோகுளோபின் என்பன மாமூலக்கூறுகளுள் முக்கியமான இரண்டாகும்.
4) இவற்றின் தொகுப்பில் ATP அவசியப்படுகின்றது.
5) சில ஓமோன்கள் மாமூலக்கூறுகளாகும்.

04. நொதியங்கள் பற்றிய சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) நொதியங்கள் யாவும் சைற்றோசொல்லில் இறைபோசோம்களில் தொகுக்கப்படுகின்றன.
2) நொதிய மூலக்கூறுகள் யாவும் தொழிற்படுவதற்கு ஏதேனும் ஒரு துணைக் காரணியை வேண்டி நிற்கின்றன.
3) நொதிய மூலக்கூறுகள் அவை தாக்கும் கீழ்ப்படை மூலக்கூறுகளிலும் பார்க்கச் சிறியவை.
4) கலமென்சவ்வில் பல்வேறுபட்ட நொதியங்கள் காணப்படும்.
5) நொதியங்கள் எப்பொழுதும் அவை உற்பத்தியாகும் இடத்திலேயே தொழிற்படுகின்றன.

05. இரண்டு கலங்களை அவற்றின் கலவன்கூட்டினால் ஒன்றோடு ஒன்றை இணைத்து வைப்பது,
1) நடுமென்றட்டு. 2) முதலுருவிணைப்பு.
3) தெசுமோசோம். 4) இடைவெளிச் சந்திப்பு.
5) இருக்கச்சந்திப்பு.

06. பின்வரும் விலங்குகளுள் எதன் சில உறுப்பினர்கள் மாத்திரம் ஆதாரத்தில் நிலையாக நாட்டப்பட்டிருக்கும்?
1) *Hydra* 2) கடல் முள்ளி.
3) *Obelia.* 4) கடல் லில்லி.
5) யானையின் தந்த ஓடு.

07. சில விலங்குகள் காண்பிக்கும் இலிங்க ஈருருத் தோற்றம் பின்வரும் எதை சிறப்பாகச் சித்திரிக்கின்றது?
1) இனப்பல்வகைமை. 2) பிறப்புரிமைப் பல்வகைமை.
3) பொய்க்கோலம் புணல். 4) தொடர்ச்சியான மாறல்.
5) இலிங்கமிணைந்த இயல்பு.

08. மீன்களில் காணப்படும் பின்வரும் இசைவாக்கங்களுள் எது நீந்துவதற்கான ஓர் இசைவாக்கம் அன்று?
1) கதிருருவான உடல். 2) பூக்கள்
3) சோடிச் செட்டைகள். 4) சீதச்சுரப்பையுடைய தோல்.
5) முதுகுப்புறச் செட்டை.

09. இலங்கை முதலை இனங்கள் யாவும் பின்வரும் எதுவாக வர்ணிக்கப்படலாம்?
1) மையக்கல் இனம். 2) எச்ச இனம்.
3) கலாசார இனம். 4) உள்நாட்டினம்.
5) சின்னத்துக்குரிய இனம்.

10. பின்வரும் உள்நிலைக் காப்பு நிலையங்களுள் எது உள்நாட்டு பறவை இனங்களின் பல்வகைமையை உயர்வாகக் கொண்டிருக்கும்?
1) குமண தேசியப்பூங்கா. 2) யால சரணாலயம்.
3) உடவளவ தேசியப்பூங்கா. 4) வில்பத்து புகலரண்.
5) கல்லோயா வனவொதுக்கம்.

11. வேர்மூடி தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
1) ஒரு வித்திலைத் தாவர வேர்களைவிட இருவித்திலைத் தாவர வேர்களில் அவை நன்கு விருத்தியடைந்துள்ளன.
2) அவற்றில் கொல்கிச் சிக்கல் நன்கு சிறத்தலடைந்திருக்கும்.
3) அவை இறந்த கலங்களினால் மாத்திரம் ஆக்கப்பட்டவை.
4) அவற்றின் கலங்கள் இலிக்னின் ஏற்றப்பட்டவை.
5) அவை பிரியிழையத்திற்குரியவை.

12. Poganatum இனது இலிங்கமுறை இனப்பெருக்கம் பின்வரும் படிமுறைகளைக் கொண்டுள்ளது.
I. நுகம் முளையமாக விருத்தியடைதல்.
II. ஆண்புணரிகளும் பெண்புணரிகளும் உற்பத்தியாதல்.
III. வித்தி முளைத்து இழைமுதல்கள் தோன்றுதல்.
IV. கருக்கட்டல்.
V. வித்தியாக்கம்.
Poganatum இனது இலிங்கமுறை இனப்பெருக்கப் படிமுறைகளின் சரியான ஒழுங்கைக் குறிப்பது பின்வருவனவற்றுள் எது?
1) III, IV, II, V, I 2) II, IV, I, V, III
3) I, II, III, IV, V 4) II, IV, II, V, I
5) III, IV, I, II, IV

13. தேங்காயின் மட்டை (கோது) பூவின் எப்பகுதியில் இருந்து வருவிக்கப்படுகின்றது?
1) சூலகச்சுவர். 2) சூல்வித்தின் கவசம்.
3) பூவின் ஏந்தி. 4) பூக்காம்பு.
5) பூவுறை (Perianth)

14. கஸ்பாரிக் கீலங்கள் தொடர்பான சரியான கூற்று எது?
1) வேரின் அகத்தோலில் ஆரைச்சுவரில் காணப்படுகின்ற இலிக்னினால் ஆன தடிப்புகள் ஆகும்.
2) மண்ணில் இருந்து வேரின் காழை அடையும் கனியுப்பு அயன்களைத் தேர்ந்து புகவிடுகின்றது.
3) சுடான் சாயத்தினால் நிறமேற்றப்படுவதில்லை.
4) வித்துமூடியுளி வேரின் எல்லா அகத்தோற் கலங்களிலும் காணப்படும்.
5) கனியுப்பு, அயன்களைப் புகவிடும்; ஆனால், நீரைப் புகவிடாது.

15. பின்வரும் நிலைமைகளுள் எதில் ஆவியுயிப்பு இழிவாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்?
1) அதிக இலைவாய்கள் உள்ள $25^0C$ இல் அமைதியான சூழலில் உள்ள ஒரு சராசரி இலையில்.
2) அதிக இலைவாய்கள் உள்ள $25^0C$ இல் காற்றுள்ள சூழலில் உள்ள ஒரு சராசரி இலையில்.
3) குறைவான இலைவாய்கள் உள்ள $25^0C$ இல் காற்றுள்ள சூழலில் உள்ள ஒரு சராசரி இலையில்.
4) குறைவான இலைவாய்கள் உள்ள $25^0C$ இல் அமைதியான சூழலில் உள்ள ஒரு சராசரி இலையில்.
5) குறைவான இலைவாய்கள் உள்ள $30^0C$ இல் காற்றுள்ள சூழலில் உள்ள ஒரு சராசரி இலையில்.


16. கல்சியம் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் எது தவறானது?
1) விலங்குகளிலும் தாவரங்களிலும் மாபோசணை மூலகம் ஒன்றாகும்.
2) சில நொதியங்களின் துணைக்காரணி ஒன்றாகும்.
3) தாவரக் கலச்சுவரின் முக்கிய ஒரு கூறாகும்.
4) பூச்சி வெளிவன்கூட்டில் ஒரு கூறாகும்.
5) குடற் சடைமுளைகளில் அகத்துறிஞ்சப்படுவதற்கு உயிர்ச்சத்து D ஐ வேண்டி நிற்கின்றது.

17. திருப்ப அசைவுகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?
1) அவற்றின் திசை தூண்டலின் திசையினால் வசப்படுத்தப்படுகின்றது.
2) அவை சில தாவரம் அல்லாத அங்கிகளிலும் அவதானிக்கப்பட்டுள்ளன.
3) அவற்றின் திசையைத் தீர்மானிப்பதில் ஒட்சின் ஒரு முக்கிய காரணியாகும்.
4) மீமோசா சீறிலைகள் பரிசத்திருப்பத்திற்கு உரியவை.
5) புவியீர்ப்பின் விசை சில திருப்பவசைவுகள் மீது செல்வாக்குச் செலுத்துகிறது.

18. தாவரங்களினால் அனயன் வடிவில் மாத்திரம் உள்ளெடுக்கப்படுவதாக அறியப்பட்டுள்ள ஒரு மூலகம் பின்வருவனவற்றுள் எது?
1) காபன். 2) ஒட்சிசன்.
3) நைதரசன். 4) மொலிப்தினம்.
5) மங்கனசு.

19. தாவரக் கலங்கள் பெரிதாக வளர்வதைத் தூண்டும் வளர்ச்சிப் பதாத்தம் எது?
1) ஜிபரலின். 2) ஒட்சின்.
3) சைற்றோகைனின். 4) எதிலின்.
5) ABA

20. தாவர ஓமோன் கண்டுபிடிப்புத் தொடர்பாக நிகழ்த்தப்பட்ட ஒரு பரிசோதனை கீழேயுள்ள படத்தினால் சித்திரிக்கப்படுகின்றது. இங்கு ஒற்று மடலிலை அந்தம் மைக்கா தகட்டினால் நிலைக்குத்தாகப் பிரிக்கப்பட்டு ஏகார் குற்றி மீது ஏற்றப்பட்டுள்ளது. ஒரு திசையில் ஒளி வழங்கப்பட்ட பின்னர் A, B ஆகிய ஏகார் குற்றிகள் வெட்டப்பட்ட நாற்றில் இருட்டறையில் சரிவாக வைக்கப்பட்டுள்ளன.




இப்பரிசோதனையின் ஏற்றுக்கொள்ளக்கூடிய மிகப்பொருத்தமான அவதானம் பின்வருவனவற்றுள் எது?
1) A வலது பக்கமாக வளைவதோடு B இடது பக்கமாக வளையும் .
2) A இடது பக்கமாக வளைவதோடு B வலது பக்கமாக வளையும்.
3) A இடது பக்கமாக வளைவதோடு B நேராக நீட்சியடையும்.
4) A, B ஆகிய இரண்டும் ஒரே கோணத்தில் இடது பக்கமாக வளையும்.
5) B ஐ விட கூடிய கோணத்தில் A இடது பக்கமாக வளையும்.

21. இறுதியான மூன்று மாதத்தில் காணப்படும் மனித முதிர்மூலவுருவின் சிறப்பம்சம் ஒன்று என கருதமுடியாதது,
1) மண்டையோடு அரைகுறையாகவே என்பாக்கப்பட்டிருக்கும்.
2) தலை / உடல் விகிதம் திருத்தமாக அமைந்திருக்கும்.
3) தலை பூராகவும் அடர்த்தியான மயிர் காணப்படும்.
4) விதைகள் இன்னமும் விதைப்பைகளுள் இறங்கியிருப்பதில்லை.
5) நுரையீரல்கள் அமினியன் பாய்பொருளினால் நிரம்பியிருக்கும்.

22. மனித உணவுக் கால்வாயில் குடல்வளரி ஒன்று காணப்படுவது,
1) களத்தில். 2) இரைப்பையில்.
3) முன்சிறுகுடலில். 4) சுருட்குடலில்.
5) பெருங்குடலில்.

23. மனிதனின் விந்தில் பின்வருவனவற்றுள் எது காணப்படுவதில்லை?
1) கோளவுருவான தலை. 2) நீண்ட வால்.
3) கலவன்கூடு. 4) மையமூர்த்தம்.
5) இலைஸோசோம்.

(13 ஆம் பக்கம் பார்க்க)

யாழ், கொழும்பு, கண்டி பிரபல ஆசிரியர்களின் இறுதி மாதிரி வினாத்தாள்கள் இன்றுமுதல் வெளிவருகின்றன.

நேரடித் தொடர்புகளுக்கு:
ஆசிரியர்,
S.H.A.மௌலானா BSc,
கேம்பிரிட்ஜ் கல்விநிலையம்,கண்டி.
தொ.பே.இல: 077-3299706

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரியல், பகுதி I: தொடர்ச்சி......

24. நரம்புக்கலங்கள் தொடர்பான சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) கணத்தாக்கத்தைக் கடத்தாதபோது அச்சிழைமென்சவ்வு முனைவழிக்கப்படுகிறது.
2) தாக்க அழுத்தம் பேணப்படுதலுக்குச் சக்தி செலவிடப்பட வேண்டும்.
3) ஓய்வு நிலைமைகளில் அச்சிழைமென்சவ்வு சோடியம் அயன்களிலும் பார்க்க பொட்டாசியம் அயன்களைக் கூடுதலாக உட்புகவிடும்.
4) நரம்புக் கணத்தாக்கங்களைக் கடத்துவதற்கு மயலின் இன்றியமையாதது.
5) முனைவழிவின்போது அச்சிழைமென்சவ்வுக்கூடாக நரம்புக் கலத்தினுள் சோடியம் அயன்கள் அதிக அளவில் வெளிநோக்கி அசையும்.

* 25ஆம், 26ஆம் வினாக்கள் கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. அட்டவணையின் முதலாம் நிரலில் மனிதனின் உட்காதின் மூன்று பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிரலில் இப்பகுதிகளின் முக்கிய தொழில்களும், மூன்றாம் நிரலில் உட்காதில் இப்பகுதிகளின் அமைவிடங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

| பகுதிகள் | முக்கிய தொழில்கள் | அமைவிடம் |
|---|---|---|
| A - தொட்டி | P - கேட்டல் வாங்கியாக | X - தலைவாயில் |
| B - Corti யின் அங்கம் | Q - தலை அசைவை உணர்த்தல் | Y - குடுவையுரு |
| C - பொட்டு | R - ஈர்ப்பு வாங்கியாக | Z - நத்தைச் சுருள் |

25. A, B, C என்னும் பகுதிகளின் பிரதான தொழில்களின் சரியான தொடரி,
1) P, Q, R 2) Q, R, P 3) R, P, Q
4) Q, P, R 5) P, R, Q

26. உட்காதில் A, B, C என்னும் பகுதிகளின் அமைவிடங்களின் சரியான தொடரி,
1) P, Q, R 2) Q, R, P 3) R, P, Q
4) Q, P, R 5) P, R, Q

27. மனிதனின் பிரசவத்தில் பின்வருவனவற்றுள் எது உதவுவதில்லை?
1) ஒக்சிடோசின். 2) அழுத்தத்தசை. 3) HPLH
4) Prostaglandin 5) ATP

28. மனிதனின் கழுத்து முள்ளந்தண்டென்பு ஒன்றை நெஞ்சறை முள்ளந்தண்டென்பு ஒன்றில் இருந்து இலகுவாக வேறுபிரித்து அறிவதற்கு உதவும் இயல்பு,
1) இரட்டித்த நரம்புமுள். 2) நாடிக்கால்வாய்.
3) பல்லுருமுளை. 4) பிடரென்புக்குமிழ்களுக்கான முகப்புகள்.
5) ஒடுக்கப்பட்ட மையத்தி.

29. மின்னிதய வரையம் (E.C.G) தொடபான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?
1) உடல்மீது பொருத்தப்படும் மின்வாய்கள் மற்றும் அலைவுகாட்டி உபகரணம் என்பவற்றின் துணையுடன் இதனைப் பெறலாம்.
2) ஓர் இதயவட்டம் முக்கிய ஐந்து மின்அலைகளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.
3) QRS அலைகள் இதயவறைத் தசைகளில் ஏற்படும் மின்முனைவழிவைக் குறித்து நிற்கின்றன.
4) T அலையானது நீடிக்கும் நேரம் P அலை நீடிக்கும் நேரத்திலும் அதிகமாகும்.
5) E.C.G மின்னலைகளின் கோலம் இதயத்தின் என்டோகாடியத்தின் தொழிற்பாட்டை அறிய உதவுகின்றது.

30. தலசீமியா பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
1) மனிதனில் காணப்படும் இலிங்கமிணைந்த இயல்பு ஒன்றாகும்.
2) கருவினுள் தன்னிறமூர்த்தம் ஒன்று மேலதிகமாக இருப்பதனால் ஏற்படுகிறது.
3) இதனால் செங்குழியங்களின் ஆயுட்காலம் குறைகின்றது.
4) பெண்களைவிட ஆண்களில் அதிகம் வெளிக்காட்டப்படும்.
5) ஒரு வகை நுளம்பினால் காவப்படுகின்றது.

31. மில்லர், யூரேயி தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
1) அவர்களுடைய பரிசோதனைகள் பெற்ற இயல்புகளின் தலைமுறையுரிமைக் கொள்கைக்கு ஆதாரமாக அமைந்தன.
2) அவர்களுடைய பரிசோதனைகள் வாழ்க்கையின் தன்னிச்சைக் கொள்கையைத் தவறென நிரூபித்தன.
3) அவர்கள் அசேதனப் பொருளிலிருந்து சேதனப் பொருள் தோன்றலாம் என்பதை நிறுவுவதற்குப் பரிசோதனைகளை நடத்தினர்.
4) அவர்கள் இயற்கைத் தேர்வுக் கொள்கையை ஆதரிப்பதற்குரிய சான்றுகளை அறியப்பெற்றனர்.
5) உயிரினம் விண்வெளியிலிருந்து புவிக்கு வந்துள்ளதென அவர்கள் நம்பினர்.

32. மூலக்கூற்றுப் பிறப்புரிமையியல் துறையில் உபயோகப்படும் ஜெல் மின்னயனம் தொடர்பில் தவறான கூற்று எது?
1) இதில் நேரோட்ட மின் பிரயோகிக்கப்பட்டு ஜெல் DNA துண்டங்கள் பிரிக்கப்படுகின்றன.
2) இங்கு ஏகாரோசு கொண்டு ஜெல் தயாரிக்கப்படுகின்றது.
3) நேரேற்றமுள்ள DNA துண்டங்கள் இங்கு அனோட்டில் இருந்து கதோட்டை நோக்கி அசைகின்றன.
4) ஜெல் மீது தோன்றும் DNA படிவம் இங்கு நைற்றோசெலுலோசு தாளினால் ஒற்றியெடுக்கக்கூடியதாக இருக்கும்.
5) DNA விரலடையாளத் தொழில்நுட்பத்தில் இப்படிமுறை இன்றியமையாத ஒன்றாகும்.

33. இரட்டைப்பல்லின நுகமுள்ள பிறப்புரிமை அமைப்பை உடைய தாவரம் ஒன்றின் தன்மகரந்தச் சேர்க்கையின் விளைவாகக் கிடைக்கக்கூடிய தோற்ற அமைப்பு விகிதங்கள் சில பின்வருமாறு காணப்படலாம்.
A - 90 : 30 : 30 : 10
B - 90 : 40 : 30
C - 90 : 70
D - 130 : 30
E - 30 : 10
இவற்றுள் எவை இரு பரம்பரையலகுகளின் இடைத்தாக்கத்தின் விளைவாகத் தோன்றியிருக்கலாம்?
1) A, B மாத்திரம். 2) B, C மாத்திரம்.
3) D, E மாத்திரம். 4) B, C, D மாத்திரம்.
5) C, D, E மாத்திரம்.

34. நைதரசன் வட்டத்தில் பின்வரும் செயன்முறைகளுள் எச்செயன்முறைக்கு மூலக்கூற்று ஒட்சிசன் இருத்தல் அவசியம்?
1) உயிரியல் நைதரசன் நிலைநாட்டல்.
2) நைத்திரேற்றாக்கல். 3) நைதரசனிறக்கம் .
4) அமோனியாவாக்கல். 5) அழுகல்.

35. உயிரின மண்டலத்தில் மிகப்பெரிய காபன் சேமிப்பகம் காணப்படுவது,
1) சமுத்திரத்தில். 2) வளிமண்டத்தில்.
3) நன்னீர்த் தேக்கங்களில். 4) தரையில்.
5) எரிமலைகளில்.

36. கடந்த மாதங்களில் கொழும்பு நகரத்தில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு முக்கிய காரணியாக விளங்குவது,
1) உயிரியல் ஒருங்களுக்குட்படாத பதார்த்தங்களின் மிதமிஞ்சிய பயன்பாடு.
2) வங்காள விரிகுடாவில் தோன்றிய ''லைலா'' என்னும் சூறாவளி.
3) சட்டவிரோதமாக வீதியோர நடைபாதைகளில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக கட்டடங்கள்.
4) களனி கங்கையில் நிகழ்த்தப்பட்டுவரும் மணல் அகழ்வு.
5) மனித சனநெரிசல் உயர்வாகக் காணப்பட்டமை.

37. தோல் பதனிடும் கைத்தொழிற்சாலை வெளிப்பாய்வுகளால் மாசடைந்த தேக்கம் ஒன்றில் வாழும் பின்வரும் அங்கிகளுள் எது அதிகம் அச்சுறுத்தலுக்குள்ளாகிறது?
1) முதலைகள். 2) வாற்பேய்கள்.
3) தாவரப்பிளாந்தன். 4) விலங்குப்பிளாந்தன்.
5) இந்தியக் கெண்டைகள்.

38. வளிமண்டலத்தின் கீழேதரப்பட்டுள்ள படைகளுள் எதில் வளியின் மிக உயர் அமுக்கம் ஒன்று நிலவுகிறது?
1) வெப்பமண்டலம். 2) படைமண்டலம்.
3) அயனமண்டலம். 4) மாறல் மண்டலம்.
5) இடைமண்டலம்.

39. மனித நாகரிக காலக்கட்டங்கள் மூன்றின் சரியான வரிசைக்கிரமம் பின்வருவனவற்றுள் எது?
1) சேகரிப்பான் வேட்டைக்காரன் காலம் → விலங்கு வேளாண்மை → விவசாயம்.
2) சேகரிப்பான் வேட்டைக்காரன் காலம் → விவசாயம் → விலங்கு வேளாண்மை.
3) விலங்கு வேளாண்மை → சேகரிப்பான் வேட்டைக்காரன் காலம் → விவசாயம்.
4) விவசாயம் → விலங்கு வேளாண்மை → சேகரிப்பான் வேட்டைக்காரன் காலம்.
5) விவசாயம் → சேகரிப்பான் வேட்டைக்காரன் காலம் → விலங்கு வேளாண்மை.

* 40-41 வினாக்கள் பின்வரும் நுண்ணங்கிச் சாதிகளில் தங்கியுள்ளன?
1) *Streptococcus* 2) *Corynebacterium*
3) *Xanthomonas* 4) *Bacillus*
5) *Raizobium*

40. இலற்றிக்கமில உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ஒரு சாதி எது?

41. நவீன விவசாயத்தில் உயிரியல் வளமாக்கியாகப் பயன்படுத்தப்படும் ஒரு சாதி எது?

42. ஒரு கோளவுருவான பக்றீரியாக் கலம் ஒன்றுக்கொன்று செங்குத்தான இரு தளங்களில் பிரிவடைவதனால் உருவாகும் சமுதாயம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
1) Sarcina 2) Tetracoccus
3) Streptococcus 4) Staphylococcus
5) Diplococcus

43. பின்வரும் பக்றீரியாக்களுள் எது அகவித்தி உருவாக்கும் ஆற்றலுடையது?
1) *Clostridium botulinum*
2) *Escherichia coli*
3) *Mycobacterium tuberculosis*
4) *Vibrio cholarae* 5) *Shigella dysentariae*

44. இன்ரபெரோன்,
1) இரும்பை தொழிற்பாடற்றதாக மாற்றும் ஒருவகைப் புரதமாகும்.
2) மனித உமிழ்நீரில் காணப்படும்.
3) மனிதனின் குருதியில் காணப்படும் ஒருவகைப் புரதமாகும்.
4) மனிதனில் தனித்திறன் உள்ள எதிர்ப்புப் பொறிமுறையை வழங்கும்.
5) பக்றீரியாக்களின் வளர்ச்சியை நிரோதிக்கும்.

45. உறிஞ்சும் வாயுறுப்புக்களை உடைய நிறையுடலிகளையும், வெட்டும் வாயுறுப்புக்களையும் உடைய குடம்பிகளையும் கொண்டிருக்கும் பீடை எது?
1) நெல் ஈ. 2) கபிலத் தாவரத் தத்தி.
3) தென்னை மயிர்கொட்டி. 4) தென்னோலை சுரங்கமறுப்பான்.
5) சிவப்பு வீவில்.

46. மனிதனில் நோயை ஏற்படுத்தும் பலகல அக ஒட்டுண்ணி ஒன்று,
1) ஈரல் தட்டையன். 2) மைற்று.
3) உண்ணி. 4) பிளாஸ்மோடியம்.
5) என்ரமீபா.

47. உள்நாட்டுத் தேக்கங்களில் குளத்தின் அடியிலும் நீர் நிரலிலும் காணப்படும் ஒரு மீனினம்,
1) *Cyprinus carpio* 2) *Cirrhinus mrigala*
3) *Catla catla*
4) *Oreochromis mossambicus*
5) *Oreochromis niloticus*

48. இழைய வளர்ப்புக்காகப் பயன்படுத்துவதற்குப் பின்வருவனவற்றுள் மிகவும் பொருத்தமற்ற தாவரப் பாகமாவது,
1) புடைக்கலவிழையம். 2) அங்குரவுச்சிப் பிரியிழையம்.
3) கக்கவரும்புகள். 4) முளையம்.
5) உரியவிழையம்.

49. மனிதர்களில் உணவின்றிய நிலையில் குருதி மொத்த கொலஸ்திரோல் அளவு துணியப்பட்டு அவற்றின் அதிர்வெண்கள் வரைபுபடுத்தப்பட்டன. அதிர்வெண்கள் செவ்வன் பரம்பலைக் காட்டியதோடு உயர்வுப் பெறுமானம் 240 ஆகவும், நியம விலகல் 16 ஆகவும் அமைந்திருந்தது. இம்மாறல் தொடரின் ஆகாரத்தின் கிட்டிய பெறுமானம் பின்வரும் எதுவாக இருக்கலாம்?
1) 400 2) 190 3) 120 4) 12 5) 5

50. சுயாதீனப் படிகள் மூன்று தொடர்பான கைவர்க்கச் சோதனை ஒன்றின்போது துணியப்பட்ட கைவர்க்கப் பெறுமானம் 1.33 ஆக இருந்தது. அவதானித்த அதிர்வெண்கள் எதிர்பார்க்கப்பட்ட அதிர்வெண்களுடன் பொருந்துவதாக இருப்பின் 5% பொருண்மை மட்டத்தில் குறிப்பிட்ட வகுப்புக்கான கை வர்க்க அட்டவணைக்குரிய $X^2$ பெறுமானமும் வகுப்புக்களின் எண்ணிக்கையும் முறையே திருத்தமாகக் காட்டப்பட்டிருப்பது பின்வருவனவற்றுள் எதனில்?
1) அட்டவணைக்குரிய $X^2$ பெறுமானம் 1.35, வகுப்புக்களின் எண்ணிக்கை 2.
2) அட்டவணைக்குரிய $X^2$ பெறுமானம் 1.45, வகுப்புக்களின் எண்ணிக்கை 4.
3) அட்டவணைக்குரிய $X^2$ பெறுமானம் 1.24, வகுப்புக்களின் எண்ணிக்கை 4.
4) அட்டவணைக்குரிய $X^2$ பெறுமானம் 1.24, வகுப்புக்களின் எண்ணிக்கை 2.
5) அட்டவணைக்குரிய $X^2$ பெறுமானம் 1.45, வகுப்புக்களின் எண்ணிக்கை 2.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்

பழைய நண்பர் ஒருவர் மூலம் புதியவர்களின் நட்பு கிடைக்கும். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். அரசியல் தொடர்புடையவர்கள் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பெண்கள் குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். அடைமானமாக வைத்த பொருள்களை மீட்கலாம். விருப்பமான உணவுகளைச் சாப்பிடுவீர்கள்.

### இடபம்

சோர்வு, சோம்பல் விலகி புத்துணர்ச்சியுடன் செயற்படும் நாள். உறவினர்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திப்பீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள்.

### மிதுனம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். வெளியூர்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்களை கேட்கலாம். மற்றவர்களிடம் ஏமாறாமல் இருக்க எதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம். நோய் உபாதைகளால் உற்சாகம் குறையலாம்.

### கடகம்

பணவிரயங்களால் பற்றாக்குறை ஏற்படும். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உதாசீனம் செய்வது கண்டு எரிச்சல் அடைவீர்கள். பெண்கள் குடும்ப பெரியவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். கடுமையாகப் பாடுபட்டும் ஒரு விடயத்தில் பலன் கிடைக்காமல் போகலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். மன அமைதி கெடும்.

### சிங்கம்

மகிழ்ச்சி, உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். சிரமங்கள் இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல் அடுக்கடுக்காக பல வேலைகளை செய்வீர்கள். நண்பர்கள் மூலம் முக்கியமான வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். வெளியிடங்களுக்கும் செல்லும் உறவினர் ஒருவருடன் நீங்களும் துணைக்குச் செல்லலாம்.

### கன்னி

உங்களின் திட்டங்களுக்கு குடும்பத்தினர் உறுதுணையாக இருப்பர். தடை, தாமதங்கள் விலகி எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். பொதுநலப் பணியாளர்களுக்கு செல்வாக்கு கூடும். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். எங்காவது வெளியில் செல்லும் போது வாகன வசதி கிடைத்து சந்தோஷம் பெறுவீர்கள்.

### துலாம்

திட்டமிட்ட வேலைகள் சிறிது இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு, சந்தோஷம் அதிகரிக்கும். வியாபாரிகள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராமல் முக்கிய நபர் ஒருவரைச் சந்திக்க நேரிடலாம்.

### விருச்சிகம்

பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணும் நாள். சில காரியங்கள் முடியாமல் அதிருப்தி ஏற்பட்டு ஆதங்கம் அடையலாம். பெண்கள் வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம்.

### தனுசு

உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நண்பர்களுடன் கொண்டாட்டங் களில் பங்கேற்கலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறை வேறும். பணவரவைப் பெறலாம்.

### மகரம்

குடும்பக் கவலைகள் அதிகரிக்கும். தொடங்கிய ஒரு வேலையை மற்றொரு வேலை காரணமாக பாதியில் விட்டு விடுவீர்கள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவர். ஆசைப்பட்ட சில பொருள்களை கடனுக்கு வாங்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

### கும்பம்

உங்களின் கடந்த கால செயற்பாடு ஒன்றைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். நடக்குமோ நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நடந்து விடலாம். ஒரு விடயத்தைப்பற்றிபெரிய அளவில் மனக் கோட்டை கட்டுவீர்கள்.

### மீனம்

மற்றவர்களுக்காக சில காரியங்களைச் செய்வீர்கள். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைவீர்கள். வீட்டிற்கு வரும் சிலரை உபசரிக்கக் கூட நேரமில்லாமல் முக்கிய வேலைகளைச் செய்வீர்கள். நீண்ட நாள்களாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திப்பீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.

## கட்சியின் ஒற்றுமைக்காகவே சிறிகோத்த முன் தீக்குளிப்பு

**செய்தியாளர் மாநாட்டில் கரு**

கொழும்பு, ஜூலை 29

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே ரியன்சி அல்கம தனது உயிரைத் தியாகம் செய்துள்ளார் என ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு ஐ.தே.க. தலைமையகமான சிறிகோத்த முன்பாக ரியன்சி அல்கம தீக்குளித்து ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் சிகிச்சை பய னின்றி அவர் மரணமானார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

ரியன்சி அல்கம ஐ.தே.கட்சியின் நீண்ட நாள் உறுப்பினர். எதுவித பதவியையும் எதிர்பார்க்காத இவர் கட்சிக்காகத் தனது பணத்தைச் செலவிடுவார். இறுதியாக என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது கட்சியின் ஐக்கியம் மிகவும் முக்கியம். அனைவருடனும் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லவேண்டும். இதற்காக எனது உயிரை வேண்டுமானாலும் தியாகம் செய்வேன் எனக் கூறினார்.

எல்லாம் நன்மையாகவே நடைபெறும். எதற்கும் அவசரப்படக்கூடாது என நான் பதில் அளித்தேன்-என்றார்.

அவரின் இறுதிக்கிரியைகள் நேற்று அவரது சொந்த ஊரான வெலிகமவில் நடைபெற்றன. (சி)




யாழ்ப்பாணம், ஜூலை 29

வண்.வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி வசந்தமண்டபப் பூசையுடன் ஐங்கரப் பெருமான் உள்வீதி வலம் வருவார்.(204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 29

சங்கானை காளிஅம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்திருவிழா எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (204-29)

## 10 கோரிக்கைகளை முன்வைத்து யாழ். நகரில் சனியன்று கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறை, வாழ்க்கைச் செலவை அதிகரிக்காதே, சம்பள உயர்வை உடன் வழங்கு போன்ற பத்துக் கோரிக்கை களை வலியுறுத்தி புதிய ஜனநாயக மாக் சிய லெனினிசக் கட்சியின் பொதுக்கூட் டம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும்.

இந்த நிகழ்வு யாழ். ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர்களான சட்டத்தரணி இ.தம்மையா, வெ.மகேந்தரன், சட்டத்தரணி சோ.தேவராஜா, க.தணிகாசலம், ச.பன்னீர்செல்வம், கா.கதிர்காமநாதன் மற்றும் சமூக நீதிக்கான வெகுஜன இயக்கம் சார்பாக மு.தியாக[illegible] ஆகியோர் உ[illegible] (ஒ-323)

## ஆண்டவன் அரவணைப்பில் ஆண்டு ஒன்று

### செல்வி. அமலின் குயிலினி மங்களதாஸ்

துளிராய் 1986.04.05

விதையாய் 2009.07.29



*எங்கள் அன்புச் செல்வமே!*
*எமையெல்லாம் தவிக்க விட்டு*
*எங்கே சென்றாயம்மா?*
*கண்களில் ஊற்றெடுக்கும்*
*கண்ணீரில் உந்தன்*
*கனிந்த முகம் தோன்றிவரக்*
*கண்விழிக்கின்றோமம்மா...!*

*இருபத்து மூன்று வயதில்,*
*உனை கொடிய நோயால்*
*விதியமைக்க விம்மியழும்*
*காலம் எமக்கு வருமென்று,*
*சிறு கனவு கூட*
*மனத்திரையில் வீழ்ந்ததில்லை...!*

*நீ வானுலகம் சென்றிடினும்*
*உன் ஆனந்தச் சிரிப்பும், பேச்சும்,*
*ஆவலுடன் நீ செய்த சேவைகளும்,*
*நீ நடந்த பாதையெல்லாம்*
*நின் நினைவை ஊட்டுதம்மா,*
*உன் நினைவில் வாழும்*
*எமக்கு ஒரு தரிசனம் தரமாட்டாயா...?*

இவர் ஆண்டவருடன் மகிழ்ந்திருக்கவேண்டி, றக்கா வீதி புனித திரேசாள் ஆலயத்தில் இன்று (2010-07-29) மு.ப-11.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இ. மங்களதாஸ்
இல.5, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் கண்ணீர் மல்கும்
உறவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தால் சகலருக்கும்:

# மௌனம் கலைப்போமா?

## வாழ்வைத் திறம்பட நடத்துவதற்கு உதவியாக குழந்தைகளின் கல்வி அமைந்திட வேண்டும்

*(நேற்றைய தொடர்ச்சி)*

ஆயினும் யதார்த்தத்தில் இவர்களின் ஆரம்ப எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போய்விடுகின்றன. தற்போதைய சூழலில் பல பெற்றோர்கள் சட்டரீதியாகவே இவ்வாறான பிரச்சினைகளை அணுகுகின்றனர். எமது நாட்டிலுள்ள சட்டம் 18 வயதிற்குக் குறைவான பெண்களைத் திருமணம் செய்ய அனுமதிக்காது. அத்துடன் சட்டமானது 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள் உடலுறவு கொள்ளச் சம்மதம் அளிக்க முடியாது (அதற்கான மனப்பக்குவம் அவர்களுக்கு இல்லை) என்றும் கூறுகின்றது.

எனவே சட்ட நடவடிக்கைகளின்படி ஓடிப்போனவர்கள் (அவர்கள் இருவரும் அல்லது ஒருவர் 18வயதிற்கு குறைவாக இருக்கும் பொழுது) கைதுசெய்யப்படுவார்கள். பின்பு, தேவையான மருத்துவச் சோதனைகள் (உடலுறவு கொண்டதற்கான சாத்தியக்கூறுகள், காயங்கள் போன்றவற்றை அவதானித்தல்) செய்யப்பட்டு அறிக்கை பெறப்படும். அதன் பின்பு பெண்பிள்ளையின் வயது; குடும்பத்தவரின் ஆதரவு; சம்பந்தப்பட்ட ஆண் தொடர்பான நிலைமைகள் போன்றவற்றைக் கவனத்திலெடுத்து பெண்பிள்ளையின் எதிர்காலம் தொடர்பான தீர்ப்புகள் வழங்கப்படும்.

*"சரி அம்மா, நீங்கள் சொல்லுறியள் உங்கடை பிள்ளைகள் தங்கடை தங்கச்சியை வீட்டை கூட்டிவர வேண்டாமென்று சொன்னவை எண்டு. நீங்கள் அவையளைக் கொஞ்சம் சமாதானப்படுத்தி... இல்லை கொஞ்சம் சொல்லுறதைக் கேளுங்கோ!... சரியம்மா. இது ஒரு விபத்து எண்டு எடுங்கோவன். ரோட்டாலே போகேக்கை அடிபட்டுப் போனால் அதுக்காக வீட்டை விட்டுக் கலைக்கிறதே?... ஓம் ரெண்டும் வேறைதான். ஆனால் அதிலை ஒரு பொதுத்தன்மையும் இருக்குதம்மா..."*

இவ்வாறான ஒரு செயலின் பின்பு, வீட்டில் ஏற்றுக்கொள்ளப்படாத, அனுமதிக்கப்படாத பெண்பிள்ளைகள் பாடு திண்டாட்டம்தான். அத்துடன் எமது சமூகத்திலுள்ள பல இல்லங்கள் இவ்வாறான வரலாற்றையுடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள விரும்புவதில்லை. சேர்த்துக்கொள்ளச் சம்மதிக்கும் நிறுவனங்களும் இவர்களை "நடத்தை கெட்டவர்களாகவே" "ஓடுகாலிகளாகவே" பார்த்து, அதற்குரிய தன்மையில் பராமரிப்பதுவும் வேதனைக்குரியது.

முக்கியமாக இவ்வாறான வேளைகளில் இடம்பெறும் உடலுறவுகளில் பாதுகாப்புத் தொடர்பான அக்கறைகள் செலுத்தப்படுவதேயில்லை. எனவே சில பிள்ளைகள் துரதிஷ்டவசமாக கர்ப்பந்தரிக்க நேரிடுகின்றது. இது நிலைமைகளை மேலும் சிக்கலாக்கி விடுகின்றது.

கர்ப்பமான பிள்ளையின் நிலைமை பரிதாபந்தான். அவ்வாறான பிள்ளைகளின் கர்ப்பத்தைக் கலைப்பதற்கு சட்டபூர்வமான வழிமுறைகள் எவையுமில்லை. சட்டபூர்வமற்ற, தகுதியற்ற வழிமுறைகள் எப்போதும் ஆபத்தானவை. அவை குற்றமாகக் கொள்ளப்படுவதுடன் மரணத்தையும் ஏற்படுத்தி விடுகின்றன. கர்ப்பமான பிள்ளைகளை ஏற்றுக்கொள்வதற்குப் பல பெற்றோர் தயங்குவார்கள். தமது அயலவர்க்கு இது தெரிந்து அதனால் அவமானம் ஏற்படும் என அவர்கள் எண்ணுவார்கள். தமது பிள்ளையை எங்கேயாவது மறைத்து வைத்து, கர்ப்ப காலம் நிறைவுறுகையில் குழந்தையைப் பெற்று, அதனை யாருக்காவது தானமாகக் கொடுப்போம் என்றும் அவர்கள் யோசிப்பார்கள்.

**உளவியல் சிறப்புக் கட்டுரை**

இவையாவும் மிகுந்த கலக்கத்தையும், அலைச்சலையும், மனக்கிலேசத்தையும் ஏற்படுத்தக்கூடியன. இவ்வாறான வேளைகளில் சம்பந்தப்பட்ட பிள்ளைகளைவிட அவர்களின் பெற்றோர் மிக அதிகளவில் மனம் பாதிப்புற்று; அலுத்துக் களைத்துப் போவதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு ஓடிப்போன சிறுபிள்ளைகளின் வாழ்வு அவர்கள் நினைத்தபடி அவர்களது கனவுப் பாதையிலேயே தொடர்ந்து செல்வதில்லை. சம்பந்தப்பட்ட ஆண்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் சட்டப் பிரச்சினைகள் வந்ததுடன் மெதுவாக பெண்பிள்ளை மீதும், அந்தக் குடும்பத்தின்மீதும் கோபிப்பது போலக் கோபித்து இந்தப் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கவே (பிசகை வெட்ட) முயலுவார்கள். அந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஆணை எவ்வாறாவது ஊரைவிட்டோ அல்லது நாட்டை விட்டோ வெளியேற்ற முயலுவார்கள். இது எதிர்பார்க்கப்படக்கூடியதே.

பல பிள்ளைகள் எங்களுடன் கதைக்கின்ற பொழுது தாங்கள் தமது கல்வியைத் தொடர விரும்புவதாகவே கூறுவார்கள். ஆயினும் இவ்வாறு நடந்துகொண்ட பிள்ளைகளை மீள இணைத்துக்கொள்வதனைப் பல பாடசாலைகள் விரும்புவதேயில்லை. அந்தப் பிள்ளை ஏன் இவ்வாறு நடந்துகொண்டது? என்றோ, அந்தப் பிள்ளையை நல்ல, சரியான, யதார்த்த பூர்வமான தீர்மானங்களை எடுக்கக்கூடிய வகையில் ஏன் பாடசாலையினால் உருவாக்க முடியவில்லை? என்றோ பாடசாலைகள் சிந்திப்பதில்லை. அந்தப் பிள்ளை தனது அனுபவத்திலிருந்து மீண்டு; கல்வியைத் தொடர்ந்து; பிள்ளைகளுக்குக் கிடைக்கவேண்டிய விடயங்களைத் தொடர்ந்து பெற்றுத் தனது இயல்பான வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டு செல்வதனைப் பாடசாலைகள் அனுமதிப்பதேயில்லை.

*"டொக்டர், நீங்கள் சொல்லுறமாதிரி, அந்தப் பிள்ளையை மீண்டும் பாடசாலைக்குச் சேர்த்தால், மற்றப் பிள்ளைகளும் அதைப் பார்த்துக் கெட்டுப் போவினம்......... என்ன கதைக்கிறியள் டொக்டர். ஒரு ரீச்சர் பிறக்னென்றாய் வாறதும், பிள்ளை வண்டியோட வாறதும் ஒண்டே!!!"*

எங்களது சமூகத்தில் இருக்கும் ஒழுக்கம் சம்பந்தமான அசாத்தியமான தூய்மை வாதமும், கற்புத் தொடர்பான போலியான படிமங்களும் பாடசாலைகளை மனிதாபிமானத்தோடு, பிள்ளைகள் நலன் நோக்கிச் சிந்திப்பதனைத் தடுத்து விடுகின்றன.

அப்போ இந்தப் பிள்ளைகளின் வாழ்வு என்னவாகும்? வார்த்தைச் சுருக்கமாகச் சொன்னால் சீரழியும். பிள்ளைகள் மட்டுமா சீரழிவார்கள்? பெற்றோர் சீரழிவர். சமூகமும் சீரழியும்.

எந்தப் பெற்றோரும் தம்பிள்ளைகள் கெட்டு நொந்து போவதை விரும்புவதில்லை. "யோதாரி விழுவான்", "குறுக்கால போவான்" என்று எல்லாம் பிள்ளைகளைப் பேசுவது வெறுமனே கோபத்தினது வெளிப்பாடேயொழிய, அச்சொற்கள் குறித்து நிற்கும் அர்த்தத்தைக் குறித்து அல்ல. தமது பிள்ளைக்கு இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் பொழுது அந்தப் பெற்றோர் கதிகலங்கிப் போவர். தமது பிள்ளை வளர்ப்பில் என்ன குறைபாடு நிகழ்ந்துவிட்டது? என்று ஏங்கித் தவிப்பர். தமது பிள்ளையின் நடத்தையானது அந்தப் பிள்ளையை மட்டுமல்லாது முழுக்குடும்பத்திற்குமே மிகவும் கேடாகிப் போனதையெண்ணி வருந்துவர். சில விடங்களில் பெற்றோர் தமக்குள் சண்டைபிடிப்பார்கள். மாறிமாறிக் குற்றம் சுமத்துவார்கள். சில பெற்றோர் பொருத்தமற்ற நடவடிக்கைகள் மூலம் இந்தப் பிரச்சினையைக் கையாள்வர். வேறு சிலர் தம்முள் அமிழ்ந்து மனநோயாளியாகி விடுகின்றனர்.

ஒரு சமூகம் இவ்வாறான நடத்தைகளைச் சகித்துக்கொள்ளும் பொழுது அச்சமூகத்தில் இதுபோன்ற நடத்தைகள் அதிகரித்துச் செல்லும் வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்வாறான நடத்தைகள் அதிகரிக்கும் பொழுது, அச்சமூகத்தில் இதுவரை இருந்த ஒழுக்க விழுமியங்கள் ஆட்டங்கண்டுவிடும். 'ஒன்றில் தொட்டு ஒன்று' என்றவாறு அவை பல்கிப் பெருகிவிடும். இறுதியில் அவை ஒரு சமூகத்தினுடைய இருப்பையும் அடையாளத்தையும் கேள்விக்குறியாக்கிவிடும்.

### இனி என்ன நிகழ வேண்டும்?

நாங்கள் அனைவரும் இங்கே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் அதிகரித்துச் செல்வதனை மறுப்பு நிலையிலிருந்து விலகி ஏற்றுக்கொள்வதுடன், இந்தப் பிரச்சினையின் பல்பரிமாணத் தன்மையையும் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு பல்பரிமாணத்தன்மை இருப்பதனால், இந்தப் பிரச்சினையை அணுகுவதிலும் பல்வேறு தரப்பினரும் அர்ப்பணிப்புடன் ஈடுபட வேண்டியிருக்கிறது.

### பிள்ளைகள்:

இந்தக் கட்டுரை கதைக்க விரும்பும் விடயத்தின் கதாநாயகர்களே இந்தப் பிள்ளைகள்தான். ஆயினும் சிலவேளைகளில் இவர்கள் அவல நாயகர்களாகி விடுகின்றார்கள்.

பிள்ளைகள் எப்பொழுதுமே தமக்குரிய வழிகாட்டியாக ஒரு வளர்ந்தவரைத் தெரிந்து கொண்டு அந்த வளர்ந்தவருடன் தம்முடைய எல்லாப் பிரச்சினைகளையும், சிக்கல்களையும், சந்தேகங்களையும் கலந்துரையாடும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறான வழிகாட்டிகள் (ஆலோசகர்) அவர்களது பெற்றோரில் ஒருவராகவோ, உறவினராகவோ, ஆசிரியராகவோ, ஊர்ப் பெரியவராகவோ அல்லது தெரிந்த ஒருவராகவோ இருக்கலாம். அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் பிள்ளைகளின் உணர்வைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும், விடுப்பார்வம் குறைந்தவர்களாகவும், இரகசியம் காக்கும் தன்மையுடையவர்களாகவும் இருத்தல் அவசியமானது. அவ்வாறான ஒரு வளர்ந்தவருடன் பிள்ளைகள் தொடர்பாடும்பொழுது, வளர்ந்தவர்களின் அனுபவங்களும், பிள்ளைகளின் இலட்சியமயமான சிந்தனைகளும் பரிமாறப்பட்டு யதார்த்தத்துடன் இயைந்த ஒரு சமநிலைப் பார்வை பெறப்படும். இது பிள்ளைகளுக்கு மிகவும் தேவையானது.

பிள்ளைகள் தங்களது உணர்வுகளைத் தாங்களே சரிபார்த்துக்கொள்ளும் ஒரு சுயமதிப்பீட்டு முறையினைக் கொண்டிருக்க வேண்டும். நான் உணர்ச்சிவசப்படுகிறேனா? நான் குழம்புகிறேனா? நான் அதிகம் பொய் சொல்கிறேனா? எனது இலக்கு திசை மாறிப் போகின்றதா? போன்ற சுயவிமர்சனப்பாங்கான கேள்விகள் சுயஆய்வைத் தூண்டி, உளச் சமநிலையை ஏற்படுத்த வல்லன. முக்கியமாக, தமது எல்லைகள் எவை என்பதனைத் தெளிவாகத் தீர்மானித்து, பின்பு அந்த எல்லைகளைத் தாண்டாமல் இருக்கும் உறுதியான மனநிலையைப் பிள்ளைகள் பெறவேண்டும்.

நண்பர்களாக இருப்போர் மிகுந்த பொறுப்புணர்வுடன் ஆலோசனைகளைக் கூற வேண்டும். 'முகப்பாத்தி பார்ப்பம்' என்ற எண்ணத்தோடோ "சேர்த்து வைக்கிறோம்" என்ற பெருமையோடோ இன்னுமொருவரினதும் அவரது குடும்பத்தவரினதும் வாழ்வை நாங்கள் சீரழிக்கக் கூடாது.

பரீட்சித்துப் பார்த்தல் என்பதுவும், முயன்று தவறிக் கற்றல் என்பதுவும் பிள்ளைகளின் இயல்புதான். ஆயினும் எல்லாவற்றிற்கும் அவை பொருந்தமாட்டாது. சில விடயங்கள் 'வால்வு' போன்றவை. அங்கு ஒரு வழி மட்டுமே. போகலாம் ஆனால் திரும்பி வர இயலாது. இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

### பாதிக்கப்பட்ட பிள்ளைகள்:

பாதிக்கப்பட்ட பிள்ளைகள் பொதுவாக ஒரு கையறு நிலையில் இருப்பார்கள். எனினும் இவர்கள் தமக்கு என்ன நேர்ந்துவிட்டது என்பதனை விளங்கிக்கொள்ள முயல வேண்டும். தன்னுடைய பொறுப்பு என்ன? தன்னுடைய உரிமைகள் எவை? என்பது சம்பந்தமாகத் தெளிவுற வேண்டும். முக்கியமாக இனி, இதற்குப் பிறகு தாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என்பது சம்பந்தமான விருப்புகளை உறுதியாகக் கூறவேண்டும். தங்களுக்கு நடந்ததைப் பற்றி யார் யாருடன் கதைக்க வேண்டும்? யார் யாருடன் கதைக்கத் தேவையில்லை என்பது பற்றி விளக்கம் பெறவேண்டும்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைகளை வலுவூட்டுவதில் அவர்களுடன் பணியாற்றும் எல்லாவிதமான சேவையாளரும் உதவிட வேண்டும். அத்துடன் ஒரு முறை பாதிக்கப்பட்ட பிள்ளைகள் இனி வருங்காலத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்குரிய அறிவையும் திறனையும் பெற்றுக்கொள்வதனையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### கல்வி:

பிள்ளைகள் தாங்கள் விழித்திருக்கும் நேரத்தில் பாதி நேரத்தை கல்விக்கூடங்களிலேயே செலவழிக்கிறார்கள். கல்வியானது மாணவரை தமது வாழ்வைத் திறம்பட நடத்தக்கூடிய மனிதர்களாக உருவாக்குவதனை தனது இலக்காகக் கொண்டுள்ளது என்று சொல்லப்படுகின்றது. கல்வியூடாக மாணவர்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் மிகப் பெரும்பான்மையான இளைய வயதினர் கல்வி கற்கும் எமது சமுதாயத்திலும், அவர்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையே என்பதை அவதானிக்கின்ற பொழுது வேதனையாக இருக்கிறது.

இலங்கையினுடைய கல்வித் திட்டத்திலும் பாடவிதானங்களிலும், பிள்ளைகளுக்குத் தேவைப்படுகின்ற, உபயோகப்படக்கூடிய பல விடயங்கள் அவர்களின் வயதுக்கேற்ற விதத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி; பாலியல்பு பற்றி; கர்ப்பமடைதல் பற்றி; கர்ப்பந் தரித்தலைத் தடுப்பது பற்றி; பால்வினை நோய்கள் பற்றி எல்லாம் பாடவிதானங்களில் இருக்கின்றன. ஆயினும் பரீட்சையை மையப்படுத்திய கற்பித்தல் செயற்பாடுகளில் இவை முக்கியத்துவம் இழந்து போய்விடுகின்றன. வளருகின்ற பிள்ளைகளுக்குத் தேவைப்படுகின்ற மிக அவசியமான விடயங்கள் கற்பிக்கப்படாமல், ஆராயப்படாமல், கலந்துரையாடப்படாமல் போகின்றன.

*"நான் யோசிக்கேல்லை... உடலுறவு கொண்டால் கர்ப்பந் தரிப்பன் எண்டு எனக்குத் தெரியாது... தெரிஞ்சிருந்தால் நான் தவிர்த்திருப்பன்..."*.

இவ்வாறு கூறிய பிள்ளை ஒரு உயர்தரம் படிக்கும் மாணவி. 'மொக்கு' அல்ல. ஆனால் படிக்க வேண்டியதைப் படிக்காதுவிட்ட ஒரு பேதை.

கல்விப் புலத்தின் தூண்களாக இருக்கின்ற ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குத் தேவையானவற்றைப் புகட்டுகின்ற தாற்பரியமுடைய, தற்றுணிவு மிக்க, பொறுப்பான ஆசிரியர்களாக இருக்க வேண்டியது அவசியம். பாடவிதானத்தை முறையாகக் கற்பிக்கின்ற அதே வேளையில், காலத்தின் தேவை கருதியும், மாறி வருகின்ற புறச்சூழலின் தன்மை கருதியும் தேவையான பல விடயங்களையும் சேர்த்துக் கற்பிக்கும் மிகப் பொறுப்பானவர்களாக அவர்கள் மாற வேண்டும்.

அதற்கு மேலாக பிள்ளைகள் தங்களுக்கு வருகின்ற 'எல்லாவிதமான' சந்தேகங்களையும் தயக்கமின்றிக் கேட்டுத் தெளிவு பெறக் கூடிய ஒரு 'வெளியை'யும், 'வாய்ப்பை'யும் ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறந்த ஆசிரியர்கள் சிறந்த பெற்றோராகவும் இருக்க வேண்டும்; இருப்பார்கள்.

### கல்வி நிறுவனங்கள்:

கல்வி நிறுவனங்கள் மாறி வருகின்ற உலகச் சூழலுக்கேற்ப தம்முடைய மனப்பாங்குகளையும் மாற்றிக்கொள்ள வேண்டும். தமது மாணவர்கள் வழி தவறிப்போகின்ற பொழுது, அவை நல்ல மேய்ப்பர்களாக, அம்மாணவர்களை அணைத்துத் தம்வழி கொண்டு செல்ல வேண்டும்.

டெங்கு நோய் வந்த ஒரு மாணவி போல்; வீதி விபத்தில் அகப்பட்டுக் காலுடைந்து கைத்தடியுடன் வரும் ஒரு மாணவி போல், "ஓடிப் போய்த் திரும்பி வந்த" மாணவியும் தனது கல்வியைத் தொடர, எதிர்காலத்தின் பிரகாசத்தைத் தேட வாய்ப்பளிக்க வேண்டும். உலக முன்னேற்றத்திற்கு ஈடுகட்டும் வகையில் கல்வியை அபிவிருத்தி செய்ய விழைகின்ற நாம் அதிலே இருமை நிலை கொள்ளக் கூடாது.

வெளிநாடுகள் போல் ஒவ்வொரு வகுப்பறையிலும் கணினியும், இணையத்தள வசதியும் இருக்க விரும்புவது யதார்த்தம் என்றால், அதே நாடுகள் போல எமது தேசத்திலும் மிக இளைய வயதிலேயே பாலியல் நடத்தைகளின் அதிகரிப்பு ஏற்படும் என்ற யதார்த்தையும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அதற்கான தகுந்த, சரியான, சாலப் பொருத்தமான எதிர்வினைகளைக் காட்ட வேண்டும்.

சா.சிவயோகன்
உளமருத்துவர்

"எங்கடை காலத்தில் இப்பிடியில்லை" என்று புலம்புவது காலமாகிப் போய்விட்ட ஒரு சந்ததி இடைவெளியையே குறிக்கும். இன்னும் ஒரு படி மேலே போய் பாடசாலைகள் பாலியல் கல்வியைப் போதிப்பதும், பாதுகாப்பான பாலுறவுக்கு இளவயதினரைத் தயார்ப்படுத்துவதும் தேவையாகும். பாடசாலை நிர்வாகமும், அதிலே செல்வாக்குச் செலுத்துகின்ற உள்ளூர், புலம்பெயர் சக்திகளும் இவற்றைக் கரிசனையோடு ஆராய வேண்டும்.

பாதிக்கப்பட்ட ஒரு பிள்ளையின் படிப்பிற்கான வாய்ப்பை மறுப்பதுவோ? அந்தப் பிள்ளையை 'ஒழுக்கம் கெட்டவள்' என்று முத்திரை குத்துவதோ? இரக்கமின்றி வேறு பாடசாலைக்கு மாற்றுவதோ எந்தவகையிலும் நியாயமில்லாத செயற்பாடுகளே. ஒரு பாடசாலையில் 'ஒழுக்கம் தவறிய' பிள்ளை இன்னுமொரு பாடசாலையில் 'ஒழுங்காக' இருக்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத சமன்பாடாகும். எந்தப் பாடசாலையில் இருக்கும் பொழுது பிரச்சினை ஏற்பட்டதோ, அதே பாடசாலைச் சூழலில் அந்தப் பிள்ளையை ஆதரவுடன் அணுகி, நேர்வழி காட்டுவதே தார்மிகம். அதனை நாங்கள் மறந்துவிடலாகாது. ஒரு பிள்ளை சொல்வழி கேட்கவில்லையென்றோ, தவறு செய்துவிட்டது என்றோ வேறு தாய் தகப்பனிடம் சேர்ப்பதில்லை.

(16ஆம்பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு 'சிங்கர்' நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழுவினர் விஜயம் மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் 'சிங்கர்' நிறுவனத்தின் விற்பனைப் பொருள்கள் தொடர்பான விளக்கங்களையும் செயல்முறைகளையும் பொதுமக்களுக்குக் காண்பிப்பதை முதல் இரு படங்களிலும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்குச் சென்ற 'சிங்கர்' நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் நசீர் மஜீத் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவி ஒருவருக்கு சீருடை வழங்குவதை மூன்றாவது படத்திலும், இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.
*(படங்கள்: நேசன்)*

# இத்தால் சகலருக்கும்...

*(15ஆம் பக்கத் தொடர்ச்சி)*

**பெற்றோர்:**

பெற்றோர்கள் எப்பொழுதும் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் மறந்து விடலாகாது. அவர்கள் தமது பிள்ளைகளை, அவர்கள் வளர்கின்ற பொழுதும், தொடர்ந்தும் புரிந்து கொள்ள முயல வேண்டும். இவ்வாறான புரிந்துகொள்ளலுக்கு அந்தப் பிள்ளைகளுடன் தொடர்ந்து தொடர்பாடக்கூடிய ஒரு 'வெளியை' வைத்திருக்க வேண்டும். பிள்ளைகளின் உலகம், கற்பனைகள், விருப்பு வெறுப்புகளைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பதோடு, தேவையானவிடங்களில் எல்லாம் பிள்ளைகள் புரிந்துகொள்ளக்கூடியவகையில் சரியான, யதார்த்தத்திற்குப் பொருத்தமான கருத்துகளையும் கூறி வைக்க வேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆசைகள், விருப்பங்களை மதித்து அவற்றைப் பூர்த்திசெய்ய விழையும் அதே வேளை, அவை உண்மையில் அவசியந்தானா என்பதனையும் பார்த்துக்கொள்ள வேண்டும். அதேபோல் தமது பிள்ளைகள் பயன்படுத்தும் நவீன தொழில்நுட்பங்களைப் பற்றிப் பெற்றோரும் அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் நல்லது.

*"அவள் தன்ர போனில ஏதோ செய்து கொண்டிருக்கிறாள். எனக்கெண்டால் ஒன்றெண்டும் விளங்காது"*

என்கிற வெகுளித்தனமான பெற்றோர் மிக அதிகளவான ஆபத்துகளைத் தமது பிள்ளை மூலம் சந்திக்க நேரிடும்.

*"'கொம்பியூட்டர்' வேணுமெண்டு ஒற்றைக்காலிலை நிண்டான். ஒரு 'லப்ரொப்' வாங்கிக் கொடுத்தம். இப்ப அவன் 'கொம்பியூட்டர் கேம்' ஓடதான் மினக்கடுறான். அப்பிடியில்லையென்றால் 'சி.டி' பார்ப்பான்;".*

இது 9ம் வகுப்பில் கற்கின்ற ஒரு சிறு பையனுடைய பெற்றோரின் அங்கலாய்ப்பு. இந்த வகையான பிள்ளை வளர்ப்புகள் பற்றி மறுபார்வை செய்வது அவசியம்.

துரதிஷ்டவசமாக பிள்ளைகளை எவ்வாறு நல்லவிதமாக வளர்க்கலாம்? என்பது பற்றி யாரும், யாருக்குமே கற்பிப்பதில்லை. அவை பல சந்தர்ப்பங்களில் முயன்று தவறுதல் முறையினூடாகவே செயற்படுத்தப்படுகின்றன. அதனால் 'தவறுகின்ற' சந்தர்ப்பங்களில் எல்லாம் தாக்கங்கள் அதிகமாகி விடுகின்றன. பெற்றார்கள் தமது பிள்ளைகள் பற்றித் தங்களுக்குள் கதைப்பதுவும், கலந்து பேசித் தீர்மானங்களையெடுப்பதுவும் தேவையானது. இயலுமானவரை தந்தை, தாய் இருவரும் பிள்ளைகளுடன் கூட இருப்பது சிறந்தது.

சமுதாயத்தில் உள்ள பெற்றோர்கள் தங்களுக்குள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும், ஒருவருடைய அனுபவத்திலிருந்து மற்றவர்கள் கற்றுக்கொள்வதும் அவசியமானது. தேவையற்ற மறைப்புகளை விட்டுவிட்டு, வசை பாடல்களை நிறுத்திவிட்டு, திறந்த மனதுடன் பிரச்சினைகளை அணுகி, அவற்றைப் புரிந்து கொண்டு, பொருத்தமான தீர்வுகளைக் காண உதவ வேண்டும்.

**சிறுவர்களுக்கான அமைப்புகள்:**

சிறுவர்களுக்கான அமைப்புகள் பொதுவாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளை இலககாகக்கொண்டு இயங்குவதனைக் காணலாம். ஆனாலும் இந்த அமைப்புகள் சிறுவர்களுக்கு வரக்கூடிய பாதிப்புகளைக் குறைக்கும் வண்ணமும் தொழிற்பட வேண்டும்.

அரச அதிகாரம் உடைய மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்களும், உலகளாவிய மட்டத்தில் செல்வாக்குடைய அமைப்புகளும் 'வருமுன் காத்தல்' தொடர்பாகச் சிந்திப்பதும், செயற்படுவதும் முக்கியமானது. சிறுவர்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் தனிநபர்களும், அமைப்புகளும், நிறுவனங்களும் புதிய பார்வைகளை உள்வாங்கி; தகுந்த வழிகளில் திருத்தத்திற்குள்ளாவதனையும் இவ்வமைப்புகள் உறுதிசெய்ய வேண்டும்.

அத்தோடு இவ்வாறான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் இனிமேலும் அவ்வாறான ஆபத்துகள் வராது காப்பதற்குரிய வலுவூட்டும் வகுப்புகளும் தொடர் நிகழ்வுகளும் அவசியமானது. புனர்வாழ்வளிக்கும் தத்துவங்களை அடிப்படையாக் கொண்ட 'நம்பிக்கை இல்லங்களும் தேவைப்படுகின்றன.

**சட்டம் ஒழுங்கு மற்றும் நீதித்துறை:**

பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நீதி கிடைப்பதனையும், தொடர் பராமரிப்புக் கிடைப்பதனையும், புனர்வாழ்வு கிடைப்பதனையும் சிறுவர் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு மற்றும் நீதித்துறைசார் அமைப்புகள் உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு வீட்டைவிட்டு வெளியேறுவதற்கும், பாதுகாப்பில்லாது உறவு கொள்வதற்கும் பின்னால் பலருடைய பங்களிப்பு அல்லது பொறுப்பற்ற தன்மை காணப்படுகிறது என்பதனை இந்நிறுவனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். வெறுமனே தனியாள் சார்ந்து இந்நிலையை நோக்கி, அந்தத் தனியாளுக்கு தண்டனை கொடுப்பது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையமாட்டாது.

சில வேளைகளில் பாதிக்கப்பட்ட பெண பிள்ளை வீட்டையிழந்துளு தான் படித்த பாடசாலையிழந்துளு 'ஒழுக்கங் கெட்ட' பிள்ளையாக 'சீர்திருத்த' இல்லங்களுக்குப் போகும் அதேவேளை, அதில் சம்பந்தப்பட்ட 'ஆண்மகன்' பிணையில் வெளிவந்து சுதந்திரமாக நடமாடித் தனது வாழ்வைக் கொண்டு போவதனையும் காணலாம். இது மிகவும் வேதனையானது. இது பற்றி நாம் மேலும் படைப்பாக்கத் திறனோடு சிந்திக்க வேண்டியது அவசியமானது.

**ஊடகங்கள்:**

ஊடகங்கள் இந்த விடயத்தை மிகவும் பொறுப்புணர்வுடன் கையாள வேண்டும். அதிட்டவசமாக யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகைகள் இந்த விடயத்தை மிகவும் கவனமாகவே கையாளுவது அவதானிக்கப்படுகிறது. பாராட்டுகள் உரித்தாகுக. இதுபோன்று ஏனைய ஊடகங்களும் பொறுப்புணர்வுடன் இந்த விடயத்தைக் கையாள வேண்டும்.

இலக்கியங்களில் வருகின்ற, கதைகளில் வருகின்ற, ஊடகங்களில் வருகின்ற செய்திகள் தொடர்பான மருட்கை நீககம் அவசியமானது. இலக்கியச் சுவைக்காகச் சொல்லப்படும் விடயங்கள் நிஜ வாழ்க்கைக்குச் சாத்தியப்படமாட்டாது. தற்காலத்தில் மிகத் தாக்க வலிமையோடு இருக்கின்ற சினிமா மற்றும் தொலைக் காட்சி மூலம் தெரிவிக்கப்படும் கருத்துகளை மருட்கை நீக்கம் செய்ய வேண்டியது அவசியம். நண்பர்கள் ஒன்றுசேர்ந்து கட்டிளமைப் பருவப் பிள்ளைகள் சேர்ந்து வாழ்வதற்கு உதவுவதனைக் காட்டும் பல சினிமாக்கள் பின்பு அந்த வாழ்க்கையில் பிரச்சினைகள் வருகின்றபொழுது உதவிக்கு வர ஒருவரும் இல்லாமல் போவதனைக் காட்ட விரும்புவதில்லை. இவ்வகையான அறிவூட்டல்கள் அவசியமானவை.

**சமூகம்:**

என்னதான் ஆணாதிக்கச் சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்தாலும், சமூகம் இவ்வாறான நடத்தைகளை ஊக்குவிக்கவோ, சகித்துக்கொள்ளவோ கூடாது. இவ்வாறான நடத்தைகளுக்கான தகுந்த எதிர்வினையைச் சமூகம் காட்ட வேண்டும். "யாருடைய பிள்ளைக்கோ ஏதோ நடக்கிறது" என்கிறவிதமான அணுகுமுறை பாதகமானது. அந்த 'யாரோ' 'நாமாக' மாறுவதற்குக் காலம் எடுக்காது.

முக்கியமானது என்னவென்றால், பாதிக்கப்பட்ட பிள்ளையையே தொடர்ந்தும் பாதிப்படையச் செய்வதற்கான தீர்மானங்களை எடுப்பதற்குச் சமூகம் இடம் கொடுக்கக்கூடாது. "வீட்டை வரவேண்டாம்;" "எங்கடை பள்ளிக்கூடத்திலே இனி இடமில்லை" "உப்பிடியான பிள்ளைகளை நாங்கள் எங்கடை இல்லத்திற்கு எடுக்கிறதில்லை" போன்ற தீர்மானங்களின் நியாயத்தன்மை பற்றிச் சமூகம் கேள்வியெழுப்ப வேண்டும். ஒரு சமூகம் அதீத கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு, சடுதியான 'சுதந்திரத்தை' அனுபவிக்கின்ற பொழுது, அங்கு பல்வேறுவிதமான நடத்தைப் பிறழ்வுகளும், ஒழுக்க விழுமியங்களின் சிதறல்களும், சீர்கேடுகளும் நடப்பதற்கு வாய்ப்புகளிருக்கின்றன. இவ்வாறான நிலைமைகளில் 'நடப்பது நடக்கட்டும்' என்ற நிலையிலிருந்து விடுபட்டு, சமூகமானது அவற்றை வெவ்வேறு மட்டங்களில் கூட்டாக எதிர்கொள்ள வேண்டியது அவசியமானது. உடைந்துபோன சமூகக் கட்டுமானங்களை மீளக் கட்டியெழுப்புவது சுலபமானது. ஆனால் சமூகப் பெறுமானங்கள் சிதைந்துபோனால் அவற்றை மீளப் பெறுவது இயலாததாகிவிடும்.

சமூகப் பெறுமானங்களையும், வாழ்க்கையின் இயல்புகளையும் நிலைநிறுத்துவதிலும், விளங்கிக் கொள்வதிலும் மதங்கள் நிறையப் பங்குவகிக்கலாம். மதங்களில் கூறப்பட்டிருக்கும் நல்ல கருத்துகளும், கடவுளரால் எழுதப்பட்ட எல்லா விடயங்களும் காலத்திற்குப் பொருத்தமான வகையில், தற்கால உதாரணங்களோடும், உவமான உவமேயங்களோடும் மறுவாசிப்புச் செய்யப்பட வேண்டும். அதன் மூலம் தான் மதங்களின் மூலம் கூற விழைந்த வாழ்க்கைத் தத்துவங்களை இருபத்தோராம் நூற்றாண்டு மனிதர்களிடையே பரவலாக்க முடியும்.

**முடிவுரை:**

"அம்மாட்டை என்னைக் கூட்டிக் கொண்டு போகச் சொல்லுங்கோ... நான் படிக்கப் போறன்... இனிமேல் இப்பிடிச் செய்யமாட்டேன்... கவனமாயிருப்பேன்...".

ஒரு பிள்ளை யாருடனாவது ஓடிப் போவதற்கும், உறவுகொள்வதற்கும், அதனால் வரும் சிக்கல்களுக்கும் அந்தப் பிள்ளை மட்டும் பொறுப்பாக மாட்டாது. அப்படி அந்தப் பிள்ளையை மட்டும் பொறுப்பாக்குவது என்பது அதில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளும் தமது பொறுப்புணர்விலிருந்து தப்பித்துக்கொள்ளும் ஒரு பொறிமுறையாகவே பார்க்கப்பட வேண்டும். பிரச்சினைப்பட்ட பிள்ளைகளை ஆதரவோடு அணுகி, அவர்களின் பாதிப்புகளைக் குறைத்து, தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் உதவுவதே நம் எல்லோருடைய கடமையுமாகும். மௌனம் கலைப்போமா?


மஹஜன சம்பத
மஹாஜன சம்பத
Mahajana Sampatha
27.07.2010
அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2271

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெரும் பரிசு | 0 | 5 | 0 | 6 | 0 | 1 | 2 | ரூபா.14,608,225/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 5 | 0 | 6 | 0 | 1 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 0 | 6 | 0 | 1 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 6 | 0 | 1 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 133 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 1 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1341 |
| 5 பரிசுகள் | | | | | | 1 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 13299 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 131603 |
| 7 பரிசுகள் | | 5 | 0 | 6 | 0 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 5 | 0 | 6 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 138 |
| 9 பரிசுகள் | | 5 | 0 | 6 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1308 |
| 10 பரிசுகள் | | 5 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13198 |
| 11 பரிசுகள் | 0 | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52076 |

Rs. 13,941,480.00
Rs. 14,876,549.00
தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்மடுக்குளத்தில் பெரும் வெடிப்பு; சீராக்காவிட்டால் வரட்சி ஏற்படும் அபாயம்

## மழைக்கு முன் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

கண்டாவளை , ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதான நீர்ப்பாசனக் குளமான கல்மடுக்குளத்தின் அணைக்கட்டில் ஏற்பட்டுள்ள பெரும் உடைப்பை எதிர்வரும் மழைக்காலத்திற்கு முன்பாக சீராக்காவிடின் கண்டாவளைப் பிரதேசம் அடுத்த ஆண்டு கடும் வரட்சியான பிரதேசமாக மாறும் எனப் பொதுமக்களும் விவசாயிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த கால யுத்தத்தின் இறுதிப் பகுதியில் கல்மடுக் குளத்தின் அணைக்கட்டு பெரும் உடைப்பை சந்திக்க நேரிட்டது.

இந்த அணைக்கட்டு இன்னமும் சீர் செய்யப்படவில்லை. கண்டாவளைப் பிரதேசத்தில் தற்போது நிலவும் வரட்சிக்கு இந்த அணைக்கட்டு உடைந்ததே பிரதான காரணியாகும்.

கல்மடுக்குளத்தின் மூலம் பெரியகுளம் கண்டாவளை, வில்லுக்குளம், புளியம்பொக்கனை, நெத்தலி ஆறு போன்ற இடங்களில் உள்ள சிறு குளங்களுக்கு நீர் வழங்குவதால் அப்பிரதேசங்கள் செழிப்பாகக் காணப்படுகின்றன.

தற்போது கல்மடுக்குளத்தில் சொட்டு நீரைக் கூட தேக்க முடியாத நிலை உள்ளதால் இப்பிரதேசங்களில் கடும் வரட்சி நிலவுகின்றது.

இக்குளத்தின் அணைக்கட்டு உடனடியாக சீர்செய்யப்பட்டு அடுத்த ஆண்டு ஏற்பட இருக்கும் கடும் வரட்சியையும் இக் குளத்தினை நம்பி காலபோக, சிறுபோக நெற்செய்கை பண்ணும் விவசாயிகளையும் காப்பாற்றுமாறு இப்பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ-432)

# கொக்காவில் தொலைத்தொடர்புக் கோபுரம் ஒரு மாதத்தில் செயற்பட ஆரம்பிக்கும்

கிளிநொச்சி , ஜூலை 29

ஏ-9 வீதிக்கு அண்மையில் கொக்கா வில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் பாரிய தொலைத்தொடர்புக் கோபுர நிர்மாணப் பணிகள் இன்னும் ஒரு மாத காலத்தில் பூர்த்தியடையும் என அதன் நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான பொறியியல லாளர் ஆர்.டி.சி. பெரேரா தெரிவித்தார்.

172 மீற்றர் உயரத்தில் அமைக்கப் படவுள்ள இக்கோபுரத்தில் 160 மீற்றர் உய ரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் 12 மீற்றர் பகுதி மூன்று வாரங்களுக்குள் நிர்மாணிக்கப்பட்டுவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.இந்நிர்மாணப் பணி கள் வேகமான காற்றினாலும் இடையிடையே பெய்த மழையினாலும் சற்று கால தாமதம் ஆகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்படும் இக்கோபுரத்தின் மூலம் அரச தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் வன்னிப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் நிர்மாணப் பணிகள் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. (ஐ- 405)

# உலர் உணவுக்கான முத்திரை விநியோகம்

கிளிநொச்சி , ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் ஜூன் மாதம் 21 ஆம் திகதிக்கு பின்னர் மீள்குடியேறிய மக்களுக்கான உலக உணவுத் திட்ட உலர் உணவுக்கான முத்திரைகள் கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை இதனைப் பெறாதவர்கள் விரைவாகப் பெற்றுக்கொள்ளுமாறும் இவர்களுக்கான உலர் உணவு விநியோகம் அடுத்த வாரமளவில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-405)




# மன்னாரில் உப்புக் கலந்த உவர் நீர் விநியோகிக்கப்படுவதாக முறைப்பாடு

மன்னார் , ஜூலை 29

மன்னார் நகரிற்கு கடந்த பல தினங்களாக உப்புக் கலந்த உவர் நீரே விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இந்நீர் மஞ்சள் நிறத்தில் சுகாதார மற்றதாக உள்ளதாகக் குடிதண்ணீர்ப் பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மன்னாரில் கொடிய வரட்சி நிலவுவது என்னவோ உண்மைதான். இருந்த போதிலும் ஆழ் குளங்களிலிருந்து நல்ல நீரே விநியோகிக்கப்பட்டு வந்தது.

தற்போது எவ்வித முன் அறிவித்தலுமின்றி உப்புக் கலந்த உவர் நீர் விநியோகிக்கப்பட்டு வருவதோடு குடிக்க முடியாத அளவிற்கு நீர் உள்ளது. இதுபற்றி எந்தவித விவரங்களும் ஊடகங்களுக்கு வழங்காமல் தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்படுகின்றன.

இரகசியத் தகவலின்படி நீர் இறைக்கும் பாரிய இயந்திரம் ஒன்று பழுதடைந்த நிலையில் உள்ளதாக அறிய முடிகின்றது.(ஐ-80)

# கிளிநொச்சி பொதுச்சந்தை நடைமுறை குறித்து விசேட ஆணையாளரின் அறிவுறுத்தல்கள்

கண்டாவளை , ஜூலை 29

கிளிநொச்சி பொதுச்சந்தையில் உரிய பொருள்களை உரிய இடத்தில் மட்டுமே விற்பனை செய்ய முடியும் என கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் வர்த்தகர்களை அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி பொதுச்சந்தையில் உள்ள கடைத்தொகுதிகளை புடைவை வியாபாரம் , மரக்கறி வியாபாரம், வெற்றிலை வியாபாரம், பல்பொருள் வாணிபம் எனப் பல்வேறு பிரிவுகளாக வகுத்துள்ளோம்.

வெற்றிலை வியாபாரக் கடையில் பல்பொருள் வாணிபப் பொருள்களை விற்கமுடியாது. அவ்வாறு விற்றால் அவருடைய வியாபார உரிமம் ரத்துச் செய்யப்படும்.

அண்மைக்காலமாக வெற்றிலைக் கடையில் தேங்காய் எண்ணெய் , பிஸ்கட் போன்ற பொருள்கள் விற்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறான பொருள்களையே விற்பதற்கு தடை விதித்துள்ளோம்.

எனவே வர்த்தகர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி கிளிநொச்சி பொதுச்சந்தை சிறப்பாக நடைபெற நிர்வாகத்திற்கு ஒத்துழைக்குமாறு கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-432)

# மலேரியா, டெங்கு ஒழிப்புக்காக ஐந்து மாவட்டங்களிலும் செயற்றிட்டம்

## மன்னாரில் கூடிய தொண்டு அமைப்புக்கள் தீர்மானம்

மன்னார் , ஜூலை 29

சர்வோதய சிரமதானச் சங்கமும், மலேரியாத் தடை இயக்கமும் ஒன்றிணைந்து வடமாகாணத்தில் மலேரியா மற்றும் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான முன்னோடித் திட்டம் ஒன்றை அமுல்படுத்தும் முகமாக , மன்னார் சர்வோதய மத்திய நிலையத்தில் கூடி ஆராய்ந்தன.

இக்கூட்டத்தில் சர்வோதயத்தின் வடமாகாண இணைப்பாளர்கள் மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் சார்பில் அதன் பொறுப்பதிகாரி திலீபன், மன்னார் மாவட்டப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி நிரஞ்சன் , வவுனியா மாவட்டப் பொதுச் சுகாதாரப் பணிப்பாளர் இருவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முதற் கட்டமாக வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் தலா ஐயாயிரம் மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலைகள் விநியோகிக்க முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் கிராமிய , பிரதேச, மாவட்ட மட்டத்தில் தொடர் விழிப்புணர்வுக் கருத்தாடல்களை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மன்னார் சர்வோதய மத்திய நிலைய இணைப்பாளர் எஸ். யுகேந்திரன் "உதயனு"க்குத் தகவல் தெரிவித்தார். (ஐ-80)

# கிளிநொச்சி மத்திய கல்லூரி சொந்த இடத்தில் கொட்டகைகளில்

கிளிநொச்சி , ஜூலை 29

கிளிநொச்சி மத்திய கல்லூரி தற்போது கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கி வருகின்றது. கடந்த 19 ஆம் திகதியில் இருந்து முழுமையாக தற்காலிகக் கொட்டகைகளில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதற்கு முன்னர் இக் கல்லூரி கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பகல்வி நிறுவன வளாகத்தில் கூரைகளற்ற கட்டடங்களில் தறப்பாள் இடப்பட்டும், மரநிழல்களிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வந்தது.

கடந்த மாதம் இக்கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மைதானத்தில் அமைக்கப்பட்ட இரு தற்காலிகக் கொட்டகைகளிலும் முழுமைபெறாத ஒரு கட்டடத்திலும் இயங்கத் தொடங்கியது.

தற்போது இக்கல்லூரியின் இடைநிலைப் பிரிவும் தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதற்காக தற்போது நான்கு தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் இரு கொட்டகைகள் இன்னும் நிலம் சிமெந்து இடப்படாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-405)

# கூரையில்லாத வீடுகளைப் புனரமைக்க ஐ.நா. நிறுவனம் உதவி வழங்குகிறது

கண்டாவளை , ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தில் பகுதியளவில் சேதமடைந்த கூரையில்லாத வீடுகளைப் புனரமைக்க ஐ.நா ஹபீட் நிறுவனம் உதவி வழங்கி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியளவில் சேதமடைந்த கூரையில்லாத வீடுகளைப் புனரமைப்பதற்காக அந்த நிறுவனம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரையில் கொடுப்பனவாக வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள பகுதியளவில் சேதமடைந்த கூரையில்லாத பல வீடுகளுக்கு உதவிகள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-432)

# மீளக்குடியமர அனுமதிக்காத பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் படையினரால் கைது

கிளிநொச்சி , ஜூலை 29

மீள்குடியேற்றம் செய்யப்படாத பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கடந்த 21ஆம் திகதி மீள்குடியேற்றம் இடம்பெறாத விசுவமடுப் பகுதிக்குள் சென்ற இருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் மீள்குடியேற்றப்படாத இடங்களுக்குள் சென்று அப்பகுதியில் உள்ள மக்களது சொத்துக்களை சூறையாடிவரும் செயற்பாடுகள் அதிகரித்துள்ள இந்தக் காலத்தில் இவ்வாறான கைதுகள் மக்களது சொத்துக்களை ஓரளவேனும் பாதுகாக்க உதவியாக இருக்கும் என மக்கள் கூறுகின்றனர். (ஐ - 405)

# பளை நூலகம் மீள இயங்குகிறது

பளை , ஜூலை 29

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பளையில் மீள இயங்க ஆரம்பித்துள்ளது. சேதமடைந்த பழைய நூலகக் கட்டடம் சபை நிதியிலிருந்து புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்பு செய்யப்பட்ட இக் கட்டடம் கடந்த வாரம் நடைபெற்ற உள்ளூராட்சி வார நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபைச் செயலாளர் சிவப்பிரகாசத்தினால் நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

இதையடுத்து நூலகச் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (த-131)

# வட்டக்கச்சி, இராமநாதபுரத்துக்கு இரணைமடுத் தண்ணீர் திறக்கப்பட்டது

கிளிநொச்சி , ஜூலை 29

இரணைமடுக்குளத்தில் இருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளுக்கு நீர் செல்லும் வாய்க்காலில் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த வாய்க்கால், குளத்திற்கு அண்மையில் இரு இடங்களில் உடைக்கப்பட்டிருந்ததால் இதுவரை நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் இப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட நிலையில் இதுவரை இவ்வாய்க்காலில் நீர் வராமையால் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதி கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்திருந்ததுடன் கால் நடைகளும் நீருக்காக நீண்டதூரம் அலைந்து திரிந்தன.

தற்போது இவ்வாய்க்காலில் இருந்து உடைப்புகள் அடைக்கப்பட்டு நீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனினும் வாய்க்கால் துப்புரவுப் பணிகள் பூர்த்தியடையாதுள்ளதால் நீர் முறையாகச் செல்வதில் இடையூறுகள் உள்ளன.

வாய்க்கால் முறையாக துப்புரவு செய்யப்பட்டு முறையான நீர் வழங்கலுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

இவ்வாய்காலில் நீர் திறந்துவிடப்படாமை தொடர்பாகக் கடந்த மாதம் உதயனில் செய்தி வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-405)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




01.04.1993

★ கிளாலிக் கடலில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பொது மக்களை படுகொலை செய்யும் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தியதாகத் தெரிவிப்பு.

★இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முன் முயற்சிகளை தொடர்ந்து மேற் கொள்வதற்காக ''குவேக்கர்'' சமா தானக் குழு யாழ்ப்பாணம் வரஇருப்பதாகத் தெரிவிப்பு.

02.04.1993

★ வவுனியா - நொச்சிமோட்டையில் புளொட் இயக்க உறுப்பினர்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 6 புளொட் இயக்க உறுப் பினர்கள் கொல்லப்பட்டதாகத் தெரி விப்பு.

★ நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து வெளியேறிய தமிழ்க் கட்சிகளில் மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி பிரேமதாஸ சந்தித்து அரசியல் நிலை குறித்துப் பேசியதாகத் தெரிவிப்பு.

03.04.1993

★ வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களால் 109 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★வடக்கில் பாதுகாப்புப் படையி னருக்கு எதிராக பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக கொழும்பில் இரா ணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு.

04.04.1993

★ மட்டக்களப்பு - மயிலந்தனையில் 35 தமிழ் பொது மக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த வழக்கு திடீரென பொலன்னறுவை நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★ ஈழத்தமிழரின் பிரச்சினையை சர்வதேச மட்டத்துக்கு தாம் எடுத்துச் செல்லப் போவதாக மன்னார் ஆயர் அதி .வண ராயப்பு ஜோசப் ஆண்டகை அறிவிப்பு.

05.04.1993

★பூஸா தடுப்பு முகாமில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கைதிகளின் உடல் நிலை மோசமடைந்து வருவதாகத் தெரிவிப்பு.

★மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 827 தமிழ் இளைஞர்கள் தென்னிலங்கைச் சிறைகளில் விசாரணை ஏதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிப்பு.

06.04.1993

★கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக மூன்று இராணுவ வலயங்கள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிப்பு.

★இனப்பிரச்சினைக்கான தீர்வை மக்களின் ஆணைக்காக முன்வைக்க இடம் பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலை பயன்படுத்தப் போவதாக விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

07.04.1993

★இன்னமும் மூன்று நாள்களில் பங்களாதேஷில் இடம் பெறவுள்ள சார்க் நாடுகளின் உச்சிமாநாட்டுக்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

★மன்னார் இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் ரோந்து சென்ற படையினரின் வாகனம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் உயர் அதிகாரி உட்பட மூன்று படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

08.04.1993

★ மேல் மாகாணச் சபைத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் ஒருவர் இனந்தெரியா தோரால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

★ தமிழீழ காவல்துறையின் மூன்றாவது அணியினர் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் நிகழ்வு நேற்று நடத்தப்பட்டதாகத் தெரிவிப்பு.

09.04.1993

★ வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பாகங்களில் நேற்று நள்ளிரவு முதல் அவசரகாலப் பிரமாணங்கள் சில ஜனாதிபதியால் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★அதிகாரிகள் உட்பட 52 படையினருடன் இரத்மலானையில் இருந்து பலாலிக்கு வந்த அவ்ரோ விமானம் பெரும் விபத்து ஒன்றில் இருந்து தப்பியதாகத் தெரிவிப்பு.

10.04.1993

★ மணலாறில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 19 படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

★நேற்று ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளை இப்போதைக்கு இலங் கைக்கு திருப்பி அனுப்புவது இல்லை என ஜேர்மன், பிரிட்டன், பிரான்ஸ் உட்பட மற்றும் சில நாடுகள் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

11.04.1993

★அச்சுவேலிப் பகுதியில் நேற்று இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை களின் போது காயமுற்ற பொதுமக்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உப தலைவர் விமானக் குண்டுவீச்சில் சிக்கி உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

★ஏழாவது சார்க் மாநாடு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிப்பு.

12.04.1993

★மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டில் 3 ஆயிரம் சிங்களக் குடும்பத்தினர் குடியமர்த்தப்படுவார்கள் என மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் தகவல் தெரிவிப்பு.

★பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதியில் தற்போது இராணு வத்தினர் மேற்கொண்டு வரும் நட வடிக்கைக்கு ''சூறாவளி - ஒன்று'' எனப் பெயரிடப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

13.04.1993

★கடந்த ஆண்டு வடபகுதியில் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த் தப்பட்ட சகடை விமானத்துக்குப் பதிலாக அதேரக புதிய விமானம் ஒன்றை வாங்க அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

★மாகாண சபைத் தேர்தலின் பின்னர் விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேச நாடாளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யக் கூடும் என ஊகம் தெரிவிப்பு.

14.04.1993

★ யாழ்.பல்கலைக்கழக மாணவன் தொடுத்த வழக்குத் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய பல்கலைக்கழக அனுமதி தொடர்பான நடைமுறை திருத்தப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

★கிழக்கு மாகாணத்துக்கு என தனியாக ஒரு மாகாண சபை அமைக்கப்பட்டு அதற்காக நடத்தப்படும் தேர்தலில் போட்டியிடத் தாம் விரும்புவதாக வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதல் அமைச்சர் வரதராஜப் பெருமாள் விருப்பம் தெரிவித்துள்ளதாகப் பேட்டியொன்றின் போது அவர் தெரிவிப்பு.

★எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க வெற்றியீட்டுமா னால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிப்பு.

# உலக மாந்தரின் வழிபாட்டு முறைகள் மாறுபட்டாலும் இலக்கு ஒன்றே

*தெய்வத்துவத்தின் தன்மையை யாரும் தீர்மானிக்க இயலாது. இறைவனது தன்மைகள் இவை மட்டுமே, மற்றவை அல்ல என்று கூறுபவன் அறிவிலி. காரணம் என்ன? மமாத்மா சர்வ பூத அந்தராத்மா. ஒரே ஆத்மா எல்லா இடத்திலும் உள்ளது. மின்குமிழில் (Bulb) செல்லும் மின் சக்தி ஒன்றே. இனிப்புக்கள் அனைத்திலும் இருக்கும் சர்க்கரை ஒன்றே. நகைகள் அனைத்திலும் இருக்கும் தங்கம் ஒன்றே. நகைகள் பல தங்கம் ஒன்றே. பசுக்கள் நிறம் வேறு பால் ஒன்றே. ஜீவர்கள் பல உள்ளிருப்பது ஒன்றே. மலர்கள் பலவகை வழிபாடு ஒன்றே. அறிவுக்கூர்மை இல்லாது அறிவிலியாக இருந்து வாழ்க்கை நடத்தப் போராடுகிறார்கள்.*

*ரோஜா, மல்லிகை, சம்பங்கி போன்ற பூக்களால் அர்ச்சித்தாலும் வழிபாடு ஒன்றே. வெறும் வாழ்க்கை நடத்துவதற்கு வேறுபட்ட முறைகள் தேவைப்படுகின்றன. பல்வேறு நியமங்களை அனுஷ்டிப்பது உடற்கூற்றைப் பொறுத்தது. இது தற்காலிக இயல்பைக் கொண்டது. ஆத்ம தத்துவமோ என்றும் மாறாத ஆனந்த, அமுத உண்மையாகும். தெய்வத்துவம் மனிதத்துவத்துக்குள் உறைந்து கிடக்கிறது. அவரவர் தம் புத்தியை அனுசரித்து தெய்வத்துவம் கூடுதலாகவோ, குறைவாகவோ இருப்பதாகக் கருதுகிறார்கள்.*

*காற்று நம்மைச் சுற்றி இருக்கிறது. இருப்பினும் கண்ணுக்குத் தெரிவதில்லை. கையில் பிடிக்கவும் முடிவதில்லை. ஆனால் காற்றே இல்லை என்றால் நமக்கு வாழ்வே இல்லை. அதனால் இந்தக் காற்றும் ஒரு மாயை எனக் குறிப்பிடலாம். அது நன்மை செய்யுமா அல்லது கெடுதல் செய்யுமா என நினைக்கக்கூடும். ஒன்று மட்டும் தெரிந்து கொள்ளுங்கள். மாயை எப்போதும் தீங்கு செய்யாது. எத்தனையோ முறை மாயையினால் அவதிப்படுவதாகத் தோன்றுகிறது. மாயை யாரைப் பற்றுகிறது? அதற்கு கையும், காலும் கிடையாது. உனக்குத்தான் கையும், காலும் இருக்கின்றன. அதனால்தான் நீ மாயையைப் பற்றிக் கொள்கிறாயே தவிர, மாயை உன்னைப் பற்றுவதில்லை. எப்படி மாயையைப் பற்றிக் கொள்கிறாயோ அதே போல பிரமனையும் (தெய்வீகத்தையும்) பற்றிக்கொள்.*



## சாயி சிந்தனை

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

கச்சாய் வடக்கு, கொடிகாமம் ஒட்டங்கேணி மகா கணபதி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 7ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(204)

## ஆனைக்கோட்டையில் சிறுவர்கழகம் அமைப்பு

நவாலி, ஜூலை 29

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக் கோட்டை பொது நூலகம் என்பன இணைந்து சிறுவர் நூல் கண்காட்சியையும், சிறுவர் கழக மொன்றையும் ஆனைக்கோட்டை பொது நூலக மண்டபத்தில் அமைத்துள்ளன.

மானிப்பாய் கிராம பொறுப்பதிகாரி கு.இரத்தினராசா தலைமையில் நடந்த இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஆனைக் கோட்டை பாலசுப் பிரமணிய வித்தியாசாலை அதிபர் த.சிவகடாட்சம் கலந்து கொண்டார்.

(ஐ-100)




அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி இலக்கங்கள்
1211 நீலம்
மிதுனம் 11 17 20 45 27-07-2010
ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 224,946 | 20/- | 4,498,920/- |
| 2 இலக்கங்கள் | 20,673 | 40/- | 826,920/- |
| 1 இல. + லக்கினம் | 20,440 | 60/- | 1,226,400/- |
| 2 இல. + லக்கினம் | 1,873 | 200/- | 374,600/- |
| 3 இலக்கங்கள் | 541 | 1000/- | 541,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,647,840/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 608 | | 602,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 269,142 | | 9,250,340/- |


இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,005,450/-

இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
மகரம் 02 09 25 33 ஜக்பொட் பரிசு ரூபா. 500,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 605 | 500/- | 302,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 500,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 608 | | 602,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.600,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட கராத்தே சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய 2010 ஆம் ஆண்டுக்கான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெற்ற கராத்தே சுற்றுப்போட்டியில் கலந்துகொண்ட வீரர்கள் மோதிக்கொள்ளும் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்: தமிழினியன்)*

# வடக்கு மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுவிழா வவுனியாவில் சனி ஆரம்பம்

## மாகாண ஆளுநர் தொடக்கி வைப்பார்

வவுனியா, ஜூலை 29

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டங்களின் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர்கள் பிரிவுகள் ஆகியவற்றுக்கு இடையேயான விளையாட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் மூன்று தினங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அன்று பிற்பகல் 2 மணிக்கு விளையாட்டு விழாவை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸ், வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

முதல்நாள் நிகழ்வாக வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற வவுனியா றம்பைக்குளம் அரசினர் மகா வித்தியாலய மாணவியரின் உடற்பயிற்சிப் போட்டியும், மன்னார் கருங்கண்டல் மகா வித்தியாலய மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மாலை 5 மணியளவில் வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியும்-

மாலை 5.30 மணியளவில் வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட மைதானத்தின் திறப்புவிழா நிகழ்வும் இடம் பெறும். இந்த நிகழ்விலும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

இதனைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத் திடலில் மின்ஒளியில் கூடைப்பந்தாட்டப் போட்டியும், 6 மணியளவில் வவுனியா சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் மின்ஒளியில் வலைப்பந்தாட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குகொள்வதற்காக யாழ்.மாவட்டத்திலிருந்து 479 வீர, வீராங்கனைகளும், 21 பொறுப்பாளர்களும் நாளை வெள்ளிக்கிழமை வவுனியா புறப்படவுள்ளனர். (ஐ-23-86)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

நவாலி வடக்கு கலைமகள் முன்பள்ளி பாடசாலை விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 2 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் இடம் பெறும்.

நவாலி வடக்கு ச.ச.நிலையத் தலைவர் சி.ஆனந்தன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வலி.தென்மேற்கு பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி அதிகாரி திருமதி ஹே.சிவசோதி கலந்துகொள்வார்.

அன்றையதினம் மாலை 5.30 மணிக்கு 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றிபெற்ற (1ஆம், 2ஆம், 3ஆம் இடம்) மூவருக்கு சிறப்புப் பரிசில் வழங்கப்படும்.

முதலாம் பரிசு புதிய துவிச்சக்கர வண்டி வழங்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ-302)

# பழைய மாணவர் அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டம்; சென்.ஜோன்ஸ், யாழ்ப்பாணக் கல்லூரி, மகாஜன வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.மத்திய கல்லூரி நிறுவுநர் தினத்தை முன்னிட்டு யாழ்.மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திவரும் 6 பேர் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி, யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி, மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் அணி ஆகியன வெற்றிபெற்றன.

முதல்இடம்பெற்ற ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணியை எதிர்த்து ஸ்ரான்லிக் கல்லூரி பழைய மாணவர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணியினர் 5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.

குமணன் 22 ஓட்டங்களையும், கிருசான் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

இனேஷன் 3 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 56 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய ஸ்ரான்லிக் கல்லூரி பழைய மாணவர் அணியினர் 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

செல்வராஜா 21 ஓட்டங்களையும், கணேஷன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

லவேந்திரா 10 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவ அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவ அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் பழைய மாணவ அணி 5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது.

சபானந்தன் 14 ஓட்டங்களையும், வல்லவக்குமரன் 16 ஓட்டத்தினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஜெயசதன் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், திலீபன் 2 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் ஜோய்ல் செரன் ஏழு விக்கெட்டுகளைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவ அணி 5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது. ஜோய்செரன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும், ஜெயசதன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். கிருபன் 5 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், வல்லவக் குமரன் 9 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யூனியன் கல்லூரி பழைய மாணவ அணியும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவ அணியும் மோதின. துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி பழைய மாணவ அணி 5ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றது.

சுயந்தன் 7 ஓட்டங்களையும் கபில்ராஜ் ஒன்பது ஓட்டங்களையும், கிருபா 5ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். கஜதீபன், துசியந்தன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி பழைய மாணவ அணி 2.3 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 31 ஓட்டங்களைப் பெற்றது. காந்தசீலன் 19 ஓட்டங்களையும், துசியந்தன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். (ஐ-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### முன்பள்ளிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 29

சங்கானை இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச சபை நிர்வாக அதிகாரி க.பாலசுப்பிரமணியம் கலந்துகொள்வார். (ஐ-302)

## இரத்ததானத்தை ஊக்குவிக்கும் மென்பந்தாட்டம் சனி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

இரத்ததானத்தை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி, யாழ்.மருத்துவ பீட சமுதாய மருத்துவத்துறை ஆகியன இணைந்து மருத்துவ பீட 29ஆம் அணியினர் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அணிகளுக்கான போட்டிகள் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்திலும்-

வலிகாமம் பிரதேச செயலக பிரிவுகள் உட்பட்ட அணிகளுக்கான போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இணுவில் சென்றல் கல்லூரி மைதானத்திலும்- இடம்பெறவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-23)




வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 12 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியையும், இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியையும் படங்களில் காணலம்.

*(படங்கள்:நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி, வீடு விற்பனைக்கு

சாட்டி வீதி மாதா கோயில் அருகில் கொம்மட்டி புலம், வேலணையில் 6 பரப்புக் காணியில் அமைந்த வீடும் அதற்கு அருகில் 5 பரப்புக் காணியும் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

*6 பரப்பு வீட்டின் விலை - 950000/-*
*5 பரப்புக் காணியின் விலை 450000/-*

தொடர்பு: K.**தியாகராஜக் குருக்கள்**
*61/10, மில்லேன், பிரம்படி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தொ.பே.: 0214905679, 0774548184*


## மரண அறிவித்தல்கள்

### *திருமதி நடராசா சுந்தரேஸ்வரி*

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொட்டடி மற்றும் ஸ்காபரோ, கனடாவை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா சுந்தரேஸ்வரி கனடாவில் 27.07.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் சிவரஞ்சினி, கௌசல்யா, அங்கயற்கண்ணி, மங்களச்செல்வி, அன்பரசி, இளங்கோ ஆகியோரின் அன்புத் தாயும் நடராசபதி, தவராசா, ஸ்ரீரங்கன், ஸ்ரீகாந்தன், சிவமதி ஆகியோரின் அன்பு மாமியும் நடராசா, தியாகராசா, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் இரத்தினராசா, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இரத்தினம் ஒழுங்கை,
473/4, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 2227222 (101084)

*தகவல்:*
இ.இரத்தினராசா-
(சகோதரன்).

### *திருமதி மங்கையர்க்கரசி விஜயரட்ணம்*



மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி விஜயரட்ணம் நேற்று முன்தினம் (27.07.2010) செவ்வாய்க்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற விஜயரட்ணத்தின் ( கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும், சாவகச்சேரி வடக்கு காலஞ்சென்றவர்களான நடராசா-தங்கராணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் மீசாலை மேற்கு காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை விதானையார்-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் மருமகளும், விஜயகுமார், விஜயகுமாரி, விஜயநந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும். சுபத் திரா, ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமியாரும், சுபிரிந்தா-சாயிசாரதி ஆகியோரின் பேர்த்தியும் சந்திரசேகரம், பரமேஸ்வரி, இராசேஸ்வரி, மங்களேஸ்வரி, சந்திரேஸ்வரி, இராசேந்திரம், தெய்வேந்திரம், குலேந்திரம், ஞானேஸ்வரி, இரவீந்திரன், குலேஸ் வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் நவரத்தினம், இரத்தினம், செல்வரத்தினம், தங்கரத்தினம் (நியூசிலாந்து) யோகரத்தினம்- செல்லையா (கனடா), இராசரத்தினம் (குட்டி விதானை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று புதன்கிழமை கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (101077)

தகவல்: **ப.வே.இராசரத்தினம்**
**(குட்டி விதானை).**

## மரண அறிவித்தல்

### *முத்தையா ஜெகசோதி*



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முத்தையா ஜெகசோதி 25.07.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு– சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் பகவதி, காலஞ்சென்ற திலகவதி மற்றும் கருணாவதி, இரத் தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற பத்மராணி மற்றும் செல்வ ராசா காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் பாக் கியவதி, தவேந்திரன், மகேந்திரன், ஸ்ரீ தரன் (கனடா), கலாரஞ்சினி (கனடா), நிசாகரன் (சவுதி), ஐங்கரன் (கனடா) , உதயகுமார் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தம்பிராசா, புனிதவதி, கௌஷல்யா, வன்னியகுல சிங்கராசா, துவாரகாதேவி, வசந்தாதேவி, துஸ்யந்தினி (கனடா), சிவனேசன் (கனடா), லதா, சிவாஜினி (கனடா), புஸ்பராணி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு.திருமதி மகேந்திரன் உதயகுமாரி, திரு.திருமதி பாலகுமார் ஜெயகுமாரி குகாநந், யாழினி, நிரோஜன், சங்கீதா, திரு.திருமதி சர்வானந்தம் ஜெனார்த்தனி, கஜேந்திரன், பிர சாந்தன், மதுசன், நிவேதா, பிரசாந், ரிசாந், திசாந் (கனடா), நிறஞ்சன், பவி தனுஷன், நிருஷன், அர்ச்சனா, சதுஷன், டிலக்சனா, விதுஷா, மகிஷா (கனடா), தனுசன், சசிகரன் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியாரும், சவீதா, சவிந்தன், நிருஷன், சதுஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.07.2010) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: 077 2293382
077 3150812, 077 8995770
0091054977350 (கனடா - மருமகன்) (101078)

**தகவல்:**
**குடும்பத்தினர்**


## தேவை

நல்லூரில் இயங்கும் நிறுவனத்தின் விடுதிக் காப்பாளராகப் பணிபுரிவதற்கு சமையல் தெரிந்த ஆண், பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
**விளம்பர இல. 4050**
**சே/பா உதயன்**

## தேவை

1. டிசைனர் (Photoshop)
(முன் அனுபவம் உள்ளவர்கள்)
2. உதவியாளர்கள் (இருபாலாரும்)

**மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்**
**62/17, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ021 222 1358**


## நன்றி கூறுகின்றேன்

தவறவிடப்பட்ட எனது கையடக்கத் தொலைபேசியை கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்த மனோகராச் சந்தி பாதுகாப்புப் படையினருக்கு மனதார நன்றி கூறுகின் றேன்.

திருநெல்வேலி.

*தகவல்:*
**ரீ.மோகன்**


## பஸ் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு பஸ் சேவை ஆசனங்கள் பதிவு செய்ய
**எஸ்.கே.உணவகம்**
கண்டி வீதி,
சாவகச்சேரி.
(சி-569506) T.P: 0770782638

## காணிகள் விற்பனைக்கு

I. கொய்யாத்தோட்டம்.
கடற்கரை வீதியில் உள்ள வீடு.
(Bar, Restaurant, Tourist Resident)
ஆகப் பயன்படுத்தக்கூடியது 2பரப்பு.
II. சுவாமியார் வீதி.
பாஷையூர் அந்தோனியார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்பு : 0772492268**


## வை. டபிள்யூ சி.ஏ.
## மீண்டும் இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணத்தில் வை.டபிள்யு.சி.ஏ. (இளம் பெண்கள் கிறிஸ்தவ கழகம்) மீண்டும் செயற்படவுள்ளது.

கடந்த போர் அனர்த்தத்தினால் செயற்பாடுகளை இழந்த இக்கழகம் பதினைந்து வருடங்களின் பின் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கான முதலாவது கூட்டம் பரியோவான் ஆரம்பப் பள்ளியில் கிறிஸ்தவ சங்கத்தின் தலைவர் மானல் ஜெயசிங்க தலைமையில் நடைபெற்றது.

இக் கழகம் எல்லா மதத் தைச் சார்ந்த மக் களுக்கும் தனது சேவையைவழங்க முன்வந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-310311-312)

### சிறந்த இதழியலாளன் விருதை பல்துறை வீரர் பெற்றார்



யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழக நீண்டகால உறுப்பினரும், யாழ். இந்துக் கல்லூரியின் உதைபந்தாட்ட, துடுப்பாட்ட, ஹொக்கி, கூடைப் பந்தாட்ட அணிகளின் முதன்மை வீரருமான ந. வித்தியாதரன் அவர்களுக்கு இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கைப் பத்திரிகை சம்மேளனம் ஆகிய அமைப்புகள் 2009 ஆம் ஆண்டின் துணிச்சல்மிக்க இதழியலாளனாகப் பிரகடனப்படுத்திப் பாராட்டியமையை வாழ்த்தி வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஜொலி ஸ்ரார் ஸ்போட்ஸ் கழகம்

## வித்தியாதரன் எம் பாராட்டுக்குரியர்



இதழியலாளன்
*ந. வித்தியாதரன்* 2009 ஆம் ஆண்டின் சிறந்த துணிச்சல்மிக்க இதழியலாளனாக இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை பத்திரிகை சம்மேளனம் ஆகிய நிறுவனங்களால் கௌரவிக்கப் பெற்றமைக்கு எமது நன்றியையும் ந. வித்தியாதரனுக்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,


தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
பிராந்திய காரியாலயம், கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

## கேள்வி அறிவித்தல்
### கேள்வி இல - O&M/N/RM/KILI/2010/92

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டத்திற் கான நீர்த்தாங்கிக் கோபுரம் போர்க்கால சூழ லினால் இடிந்து விழ்ந்துள்ளது. அதனை அவ் விடத்தில் இருந்து அகற்றுவதற்குத் தகுதியான ஒப்பந்த காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| வேலைவிவரம் |
|---|
| இடிந்து விழுந்துள்ள புதிய நீர் தாங்கி கோபுரத்தினை அகற்றுதல். |
| இடிந்து வீழ்ந்துள்ள பழைய நீர்த்தாங்கி கோபுரத்தின் நீர் சேக ரிக் கும் பகுதியை அகற்றுதல். |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி 2010. 07.29 தொடக்கம் 2010.08.09 காலை 10 மணி வரை.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி 2010. 08.09 காலை 10.05 மணி.

குறிப்பு: பொறியியலாளரின் அறிவுறுத்தலுக் கமைய இடிபாடுகள் மற்றும் இரும்புக் கம்பிகள் வெட்டி தளத்தில் இருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வேலைகளிற்குரிய கேள்விப் பத்திரங்களை சுயமாகத் தயாரித்து பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டவேலையின் கேள்விப்பத்திர இலக் கத்தைக் குறிப்பிட்டு பிராந்திய முகாமையாளர் (யா), பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங் கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப் பாணம். எனும் முகவரிக்கு நேரில் அல் லது பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிராந்திய முகாமையாளர் (யா),
பிராந்திய காரியாலயம்,
தே.நீ.வ.வ.சபை,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல:
021 222 3742
*2010.07.29* (சி/569517)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர் விருதுக்கு அணி சேர்த்த உதயனின் பிரதம ஆசிரியர்


உதயன் பிரதம ஆசிரியர் நேற்றுமுன்தினம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது....

- ஊடகத்துறையில் 48 ஆண்டுகளாக அரும் பெருஞ்சேவை ஆற்றி வருபவர்.
- உதயன் பத்திரிகையின் ஆரம்ப காலம் முதல் இற்றைவரை தொடர்ச்சியாக அதன் பிரதம ஆசிரியராக இருந்து உதயனை வழி நடத்திச் செல்பவர்.
- ஈழத்தின் தமிழ்த் தினசரிகளான ஈழநாடு, தினபதி, வீரகேசரி பத்திரிகைகளில் பணி புரிந்த அனுபவம் வாய்ந்தவர்.
- புகழ் பூத்த பத்திரிகைத்துறை முன்னோடிகளான கே.பி.ஹரன், இராஜ. அரியரத்தினம், எஸ்.டி.சிவநாயகம் மற்றும் டி.பி.தனபால போன்றோருடன் இணைந்து செயலாற்றிய அனுபவம் கொண்டவர்.
- நேர்மையான பத்திரிகைத்துறைச் செயற்பாட்டை ஜீரணிக்க இயலாத சக்திகளால் பல தடவைகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளானவர். அவர்களது படுகொலை முயற்சிகளிலிருந்து அதிர்ஷ்ட வசமாகத் தப்பிப் பிழைத்தவர்.
- உதயனின் வார இறுதி வெளியீடாக 'சஞ்சீவி'யையும், துணை வெளியீடுகளாக அர்ச்சுனா, ஞானக் கதிர், ஜோதிடஜோதி சஞ்சிகைகளையும் வெளியிட்டுச் சாதனை புரிந்தவர்.
- துணிச்சலான பத்திரிகைக்கான விருது, சிறந்த இதழியல் பெறுபேற்றுக்கான விருது, மக்கள் சேவை ஊடகம் மற்றும் சகிப்புத் தன்மைக்கான விருது என்பவற்றை ஈட்டிக் கொள்ள வழி வகுக்கும் விதத்தில் உதயனை வளர்த்து வழிகாட்டிச் செல்பவர்.
- எதிர்ப்பட்ட சவால்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், கொலை முயற்சிகளுக்கும் அஞ்சாது முகம் கொடுத்து சளைக்காது பத்திரிகைக் களத்தில் நின்று நிலைத்து இன்று செயற்பட்டு வருபவர்.

# ஈழத்தமிழருக்குச் சுயாட்சி வழங்குமாறு இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை



டில்லி, ஜூலை 29

முகாம்களிலுள்ள தமிழ் அகதிகளைப் பார்வையிடுவதற்காக இலங்கைக்கு சர்வகட்சிக் குழுவை அனுப்பி வைக்க வேண்டும் - என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய அரசை வற்புறுத்தியுள்ளது.

இலங்கையில் தமிழர் பகுதிகளின் நிலைவரங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவரை சிறப்புத் தூதராக அனுப்பி வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரான சீதாராம் யெச்சூரி, இலங்கையில் முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலையைப் பார்வை யிடுவதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்து இருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கவும், இலங்கை அரசின் அரசமைப்புக்கு உட்பட்டு தமிழர் பிராந்தியங்களுக்கு முழு சுயாட்சி உரிமை வழங்கவும் இலங்கை அரசை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்றும் சீதாராம் யெச்சூரி கோரியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

விலைவாசி உயர்வுப் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புடன் கூடிய ஒத்திவைப்புத் தீர்மானம் - விவாதத்துக்கு அனுமதி கோரி இடதுசாரிக் கட்சிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஏற்கனவே கடந்த 2000 ஆம் ஆண்டில் இதுபோன்ற ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே வாக்கெடுப்புடன் கூடிய விவாதத்துக்கு அனுமதி அளிக்க முடியாது என்ற அரசின் வாதத்துக்கு எந்த முகாந்திரமும் இல்லை.

இந்தப் பிரச்சினையில் நாடாளுமன்றத்தில் இணைந்து செயற்படுவதற்காக தெலுங்கு தேசம், அ.தி.மு.க. ஆகிய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறோம். சமாஜ்வாடி, ராஷ்டிரீய ஜனதா தளம் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்த விருக்கிறோம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# தொடர்ந்து தனிமைச்சிறையில் அடைப்பு உயர்நீதிமன்றத்தில் சீமான் மனுத் தாக்கல்

சென்னை, ஜூலை 29

என்னைத் தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றனர் - என்று இயக்குநர் சீமான் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

தமிழக மீனவர் மீதான இலங்கையின் தாக்குதலைக் கண்டித்து சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் என்ற குற்றச்சாட்டில் நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் அவர் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றில் ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் தன்னைத் தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றனர் என சீமான் கூறியிருந்தார்.

இதுதொடர்பாக விளக்கம் அளிக்கும் படி வேலூர் சிறைக் கண்காணிப்பாளருக்கு உயர்நீதிமன்று உத்தரவிட்டது. அதற்குச் சிறைக் கண்காணிப்பாளர் அறிக்கை ஒன்றை அளித்தார். அதில் சீமான் 15 கைதிகளுடன் சேர்த்து அடைக்கப்பட்டிருக்கிறார் எனக் கூறியிருந்தார். இதற்கு மறுப்புத் தெரிவித்து சீமான் சென்னை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.



கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட 12 ஆம் திகதியிலிருந்து இதுவரை ஒரு தனி அறையில் தான் நான் அடைக்கப்பட்டிருக்கிறேன். நான் இருக்கும் பகுதியிலுள்ள மற்ற அறைகளில் ஒருவர் கூட இல்லை. உயர்நீதிமன்றில் ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்த பிறகுதான் பக்கத்து அறையில் 15 கைதிகளைக் கொண்டுவந்து அடைத்தனர். ஆனாலும் நான் தனிமைச் சிறையில் இருக்கிறேன். முதல் வகுப்புச் சிறைக்கைதி என்றாலும் எனக்கு நடைப்பயிற்சி உள்ளிட்டவற்றுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. எனது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்று அந்த மனுவில் அவர் கூறியுள்ளார்.

நீதிபதிகள் சி.நாகப்பன், பி.ஆர்.சிவகுமார் ஆகியோர் இந்த மனுவை விசாரித்தனர். இதற்குப் பதில் தாக்கல் செய்யும்படி வேலூர் சிறைக் கண்காணிப்பாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# இந்தியச் செய்திகள்

## இலங்கைப் பிரச்சினையில் அக்கறையற்ற தி.மு.க. ஆட்சி

சாடுகிறது தே.மு.தி.க.

மதுரை, ஜூலை 29

தே.மு.தி.கவுக்கு 71 ஆவது இடம்தான் என்று பேசி வந்த முதல்வர் கருணாநிதி இப்போது முதல் ஆளாக எங்களைக் கூட்டணி குறித்துப் பேசக் கூப்பிடுகிறார் - என்று கூறியுள்ளார் தே.மு.தி.க. அவைத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன்.

மேலும் அவர் கூறுகையில் -

இலங்கைப் பிரச்சினையில் அக்கறை இல்லாத ஆட்சி தி.மு.கவின் ஆட்சி.

தமிழகத்தைச் சேர்ந்த அப்துல் கலாம் இரண்டாவது முறையாக ஜனாதிபதிக்கு போட்டியிட்டபோது எதிர்ப்புக் குரல் கொடுத்தவர் கருணாநிதி. செம்மொழி மாநாட்டிற்கும் அந்தத் தமிழரை அழைக்கவில்லை - என்று கூறினார்.

# 10 வயதில் கணனிப் பொறியியலாளர்; மதுரையைச் சேர்ந்த சிறுமி சாதனை



மதுரை, ஜூலை 29

பத்து வயதில் 'ரெட் ஹாட் இன்ஜினியரிங் சான்றிதழ் - லைனக்ஸ் 5' தேர்வில் வெற்றி பெற்று மதுரைச் சிறுமி சாதனை படைத்துள்ளார்.

மதுரையைச் சேர்ந்தவர் முனியசாமி. இவரது மனைவி இந்துலேகா. இவர்களது இரண்டாவது மகள் லவிநாஸ்ரீ. தற்போது 10 வயதாகும் லவிநாஸ்ரீ, டி.வி.எஸ். லட்சுமி பாடசாலையில் படிக்கிறார். ஏற்கனவே 8 ஆவது வயதில் 'மைக்ரோசொப்ட்' சான்றிதழ் தேர்விலும், 9 ஆவது வயதில் 'மைக்ரோசொப்ட் வின்டோஸ் சர்வர்' தேர்விலும் வெற்றி பெற்றுச் சாதனை படைத்தார். இப்போது மிகக் கடினமான 'ரெட் ஹாட் இன்ஜினியரிங் சான்றிதழ்' ஒன் லைன் தேர்விலும் வெற்றி பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இத்தேர்வில் இவ்வளவு குறைந்த வயதில் உலகில் முதன் முதலாக வெற்றி பெற்றவர் இவர்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் அவர்களின் அன்புக் கணவர்

### திரு. கணேசலிங்கம் ரமேஸ்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர், ஊழியர்கள்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்)

(சி/569533)

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி அவர்களின் அன்புத் துணைவர்

### திரு. கணேசலிங்கம் ரமேஸ்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆணையாளர்,
செயலாளர்,
பணியாளர்கள்.

கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.க.கணேஸ்வரன்
B.A, Dip. in Ed.



திரு.ந.தயாளன்
M.A, M.Ed.

எமது பாடசாலையில் ஆசிரியர்களாக
அளப்பரிய சேவைகள் புரிந்த
**திரு.க.கணேஸ்வரன், திரு.ந.தயாளன்**
ஆகியோர் இலங்கை அதிபர் சேவை SLPS 2-II இற்கு
பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளனர்.
அவர்கள் மேலும் சிறப்புக்கள் பெற
வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/கொழும்புத்துறை ம.வி.

(101073)

## வேலைக்கு ஆள் தேவை

*சாவகச்சேரியில் இயங்கும் பிரபல உணவகத்திற்கு வேலை ஆள்கள் உடன் தேவை. சப்பிளையர், ரீ.மேக்கர், ரொட்டி தயாரிப்பாளர், சமையலாளர் (ஆண், பெண்)*

தொடர்பு: T.P. No. 0775591366

## கடை விற்பனைக்குண்டு

*பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் கடை விற்பனைக்குண்டு. கிணறு வசதியும் உண்டு. தரகர் தேவையில்லை*

உடன் தொடர்பு கொள்ள:-
0770760856

## தேவை

கல்பேட் 1Kg 350 ரூபாவுக்கும் ஊர்ச்சேவல் 450 ரூபாவுக்கும் மற்றும் புறோயிலரும் கொள்வனவு செய்யப்படும்.

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
158/4, தாசன் பாம், கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

**மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்புடன் கூடிய சகல வசதியுடைய வீடு விற்பனைக்குண்டு.**

தொடர்பு :-
T.P. : 0716578036
0773810461

## கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை

1. விற்பனையாளர்
2. கணக்காளர்
3. சிட்டை எழுதுநர்
4. பஸ் ஆசனப் பதிவாளர்
5. விடுதி மேற்பார்வையாளர் (சிங்களம் தெரிந்தவர்)
6. றூம் போய்

நேரில் வரவும்.

**தொ.பே.இல. 0773611282**
**யாழ் போன் சொப்,**
10, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## யாழ்.மாவட்ட கேபிள் T.V. உரிமையாளர்களுக்கு

இலங்கையில் கேபிள் T.V. சேவையை வழங்கும் அரச அனுமதி பெற்ற LVN நிறுவனம் நடத்தும் கலந்துரையாடல் நாளை (30.7.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இல.874, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள U.S கேபிள் T.V. நிறுவனத்தில் நடைபெறும்.

ஆர்வமுள்ளோர் கலந்துகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: T.P.: 077 5590492
021 5677779
077 3105921

(சி-56953)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் மஹா சபைக் கூட்டம்

*காலம்: இன்று (29.07.2010) வியாழன் பிற்பகல் ஒரு மணி*
*இடம் : தலைமைச் செயலக மண்டபம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.*

*புதிய நிர்வாக சபைத் தெரிவு, குரு பீடாதிபதி தெரிவு இடம் பெற இருப்பதால் அனைத்து அந்தணப் பெருமக்களையும் தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி கூட்டத்தில் கலந்து சிறப்பிக் குமாறு அன்புடன் அழைக் கின்றோம்.*

*மஹோற்சவ காலத்தில் இடம்பெறும் வசந்தோற்சவம் நூல் இலவசமாக வெளியிடப்படும்.*

*முக்கிய குறிப்பு:*

தனிப்பட்ட அழைப்பு கிடைக்காத அனைத்து அந்தணப் பெருமக்களையும் இந்த அழைப்பை ஏற்று சமுகம் தந்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

- செயலாளர்.

(107092)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா பரமேஸ்வரி (பரம்)



காரைநகர், கருவியாத்தனை, களபூமியைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பரமேஸ்வரி (பரம்) 27.07.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் (இ.போ.ச. சாரதி, காரைநகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், லீலாம்பிகை, பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நல்லையா, காலஞ்சென்றவர்களான இராசம்மா (பாக்கியம்), சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அன்பழகன் (லண்டன்), வளர்மதி (லண்டன்), மலர்விழி, சோமநிதி (ஆசிரியை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), அன்பரசன், அன்புமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவலிங்கம் (லண்டன்), கலைச்செல்வி, விக்னேஸ்வரன், சுபரூபன், நவமலர், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவஅன்பு, சியாமளா, கரிசுதன், சிவகரன், துஸ்யந்தினி, ஜெயராஜா, பகிர்ரதன், நேருஜன், டயானா, சிவதீபன், கிரிசாந், தர்சினி, இராதாகிருஷ்ணன், உருத்திர கேசவன், கேனுஜா, பிரபா, பவித்திரா, சாருஜென் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் டினுஜன், நிலானி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தொல்புரம் மேற்கில் உள்ள சுபரூபன் (மருமகன்) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் தில்லை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

(101070)

### T.A.J. மதுரநாயகம் அடிகளார்



யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை T.A.J. மதுரநாயகம் அடிகளார் 27.07.2010 அன்று கொழும்பில் காலமானார்.

அடிகளாரின் இறுதி நல்லடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை (31.07.2010) மாலை 4 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குருமுதல்வர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(சி/569534)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சதாசிவம் (ஆசாரி)



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, முருகனூர், மருதங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சதாசிவம் 27.07.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கண்மணி தம்பதியரின் மகனும் வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரகுலேந்திரன் மற்றும் இராசேந்திரம் (ராசு), இந்திராணி, சரோஜினிதேவி, பாலச்சந்திரன், மனோன்மணி, யசோதரன், கலாவதி, கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மலர், பவளம், மகேந்திரன், சசிகரன், சத்தியசீலன், சிந்து, சுரேஸ் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றசிவக்கொழுந்து மற்றும் தங்கலட்சுமி காலஞ்சென்ற வைரவநாதன் (சின்னையா) மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பகவதி, இராணி ஆகியோரின் சகோதரனும் மகாலட்சுமி, காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, தவமணி, கந்தசாமி, ஆகியோரின் மைத்துனரும் திலிபன், சரிதா, விஜி, ரஞ்சன், பிரியா, தீபன், ஆஷா, சாரு, நிலக்ஷன், நிருஷன், சரணியா, லக்சியா, யாதவன், தனு, தர்ஷன், யனு, யாபேஸ், சுரேஸ் ஆகியோரின் பேரனும் துசி, கிசான் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சமணங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

முருகனூர்,
மருதங்குளம்,
வவுனியா.

(101091)

## யோகா வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

சிவானந்த மகரிஷி யோகா நிலையத்தில் புதிய யோகா வகுப்புக்கள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. இந்தப் பயிற்சியில் நோயாளிகளுக்கு விசேட கவனமெடுத்து யோகா குறித்துக் கற்பிக்கப்படவுள்ளது என்று நிலையத்தினர் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்துகொண்டு பயன் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)




றோயல் ரெஸ்ரோரன்ட்
212, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.மண்ணின் பாரம்பரிய உணவான
ஒடியல் கூழ்
சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பெற்றுக்கொள்ளலாம்
மதியம் 1 மணிவரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் - ரெய்னா ஜோடி இணைப்பாட்டம்; நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது



கொழும்பு, ஜூலை 27

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், மூன்றாம் நாளான நேற்று ஷேவாக் ஓர் ஓட்டத்தால் சதத்தைத் தவறவிட, சச்சின் சதமடித்து அசத்த, இந்திய அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 382 ஓட்டங்களைச் சேர்த்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, முதலாவது இன்னிங்ஸிற்காக 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 642 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர், தனது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவின்போது, விக்கெட் இழப்பின்றி 95 ஓட்டங்களைப் பெற்றது.

முரளி விஜய் 22 ஓட்டங்களுடனும், ஷேவாக் 64 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்றுத் தனது இன்னிங்ஸை மீண்டும் தொடர்ந்த இந்திய அணி, 165 ஓட்டங்களைச் சேர்த்தபோது சதமடிக்கும் தருவாயிலிருந்த ஆரம்ப வீரரான ஷேவாக்கை (99) இழந்தது. அவரைத் தொடர்ந்து முரளி விஜய் (58), டிராவிட் (3), லக்ஷ்மன் (29) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சச்சின்-ரெய்னா ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சச்சின் சதம் கண்டார்.

இறுதியில் நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 382 ஓட்டங்களைச் சேர்த்தது இந்திய அணி.

சச்சின் 108 ஓட்டங்களுடனும், ரெய்னா 66 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில், ரண்டிவ், மென்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இலங்கை அணி வீரர்கள் சதங்களை அடித்ததுபோல, இந்திய வீரர்களும் பதிலுக்குச் சதமடித்து அசத்துவதாலும், இலங்கை அணி குவித்த ஓட்ட இலக்கு நோக்கி இந்திய அணி நகர்ந்துகொண்டிருப்பதாலும் கொழும்பு டெஸ்ட் அரங்கம் ஓட்டக் கணைகளால் அதிரத் தொடங்கியுள்ளது.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும். (சி)

# பேடிக்கு முரளி பதிலடி !

உலக சாதனை சுழற்பந்து வீச்சாளரான முரளிதரனை ஈட்டி எறிபவர் என்று கேலி செய்துவந்த இந்திய முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான பஷன் சிங் பேடி, ஒரு சாதாரண பந்து வீச்சாளர் என்றும் சச்சரவுப் பிரியர் என்றும் முரளிதரன் எதிர்த்தாக்குதல் தொடுத்துள்ளார்.

முரளிதரன் வீசுவது பந்து வீச்சே அல்ல. அவரது துஸ்ராவைத் தடை செய்யவேண்டும். அவரது சாதனைகளை முடக்க வேண்டும் என்றெல்லாம் பஷன் சிங் பேடி தொடர்ந்து கூறிவந்துள்ளார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் முரளிதரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பேடி இப்போது பந்து வீசினால் அவரது ஒவ்வொரு பந்தையும் துடுப்பாட்ட வீரர்கள் வெளுத்துக் கட்டிவிடுவார்கள்.

இந்திய வீரர்களான சந்திரசேகர், பிரசன்னா, கும்ளே ஆகியோருக்கருகில் கூட பேடியால் வர முடியாது.

மேலும், பேடி சர்ச்சைக்குரிய நபர். உலகில் பல சச்சரவுகளுக்குரியவர். இவர் தம்மைப் பற்றி யோசிப்பதை விடுத்து அடுத்தவர்களைப் பற்றி கருத்துக் கூறுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

அவரது பந்துவீச்சில் நுணுக்கமான மாற்றங்கள் இல்லை. இதனால் 'துஸ்ரா' போன்ற புதிய பந்துவீச்சு முறையைக் கண்டு அவர் காய்கிறார். - இப்படிக் கூறினார் முரளி. (சி)

# பள்ளேகல மைதானத்திற்கு முரளியின் பெயரைச் சூட்டவும்

கண்டி, ஜூலை 29

''முரளிதரன் 800 விக்கெட்டுகளை வீழ்த்திச் சாதனை. படைத்தமையைக் கௌரவிக்கும் விதமாக, அடுத்த வருடம் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ள மைதானங்களில் ஒன்றான பள்ளேகல கிரிக்கெட் மைதானத்திற்கு முரளிதரனின் பெயரைச் சூட்டவேண்டும்.''

- இவ்வாறு மத்திய மாகாண சபை உறுப்பினரான அநுர பெர்னாண்டோ (ஐ.ம.சு.மு.) கோரிக்கை விடுத்துள்ளார்.

பள்ளேகல மாகாண சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மத்திய மாகாண சபைக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எவராலும் எட்ட முடியாத மிகப்பெரிய சாதனையை நிலை நாட்டியிருக்கும் முத்தையா முரளிதரனைக் கௌரவிப்பது எமது கடமை. அதற்கமைய, அடுத்த வருடம் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ள மைதானங்களில் ஒன்றான பள்ளேகல மைதானத்திற்கு அவரது பெயரைச் சூட்ட வேண்டும். இது சிறுபான்மை இனத்தவர்களுக்கு நாம் கொடுக்கும் கௌரவமாக அமைவதோடு, உலகுக்கும் எடுத்துக் காட்டாக அமையும்'' - என்றார். (சி)

# 150 பேருடன் பாக். பயணிகள் விமானம் மலைப்பகுதியில் விழுந்து நொறுங்கியது

## பெரும் சிரமத்தின் மத்தியில் மீட்புப் பணிகள்

இஸ்லாமாபாத், ஜூலை 29

150இற்கு மேற்பட்டோருடன் சென்ற விமானமொன்று பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்துக்கு வடக்கே அமைந்துள்ள மலைப்பிராந்தியத்தில் மோதி நொறுங்கி விபத்துக்குள்ளானது.

மீட்புப் பணியாளர்களால் உடனடியாக ஐவரின் சடலங்கள் மீட்கப்பட்டன. மற்றும் மூவர் கடுங்காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

துறைமுக நகரமான கராச்சியிலிருந்து தலைநகரான இஸ்லாமாபாத்தை நோக்கி வந்த இந்த விமானம், தலைநகருக்கு வடக்கே, மலைப்பிராந்தியத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும் அவர்கள் குறிப் பிட்டார்கள்.

எயாபஸ் ஏ 321 என்னும் இவ்விமானத்தில்.146 பயணிகளும், 6 சிப்பந்திகளும் இருந்துள்ளனர். இவ்விமானம் விபத்துக்குள்ளாவதற்கு முன்னரே கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இழந்துள்ளது என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

அடர்த்தியான மலைப்பிராந்தியத்தில் விமானம் விழுந்துள்ளது. பனி மூட்டங்கள் எங்கும் கவிழ்ந்துள்ளன. அதனால் மீட்புப் பணியாளர்கள் சிரமத்தோடு பணியில் ஈடுபட்டுள்ளார்கள். நான் 15 சடலங்களைக் கணக்கிட்டுள்ளேன் என அப்பகுதியை சென்றடைந்துள்ள ஊடகவியலாளர் சபூர் அலி செய்யத் தெரிவித்தார்.

சடலங்கள் எரிகாயங்களுடன் காணப்பட்டன. மரணித்தோரில் இரு பெண்களும் அடங்குவர். விமானம் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது. அதன் பாகங்கள் ஆங்காங்கு சிதறிக்கிடக்கின்றன. சில பாகங்கள் எரிந்த வண்ணமுள்ளன என்றும் அவர் கையடக்கத் தொலைபேசி வாயிலாக அறிவித்தார்.

மார்கலா மலைப்பிராந்திய பாதுகாவலர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களால் ஐந்து சடலங்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மரணித்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அதிகாரிகள் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்கள். (சி)

# 2050இல் ஆர்க்டிக் துருவத்தில் பனிக்கட்டிகள் இருக்கமாட்டா!

## ரஷ்ய வானிலை ஆய்வாளர் தெரிவிப்பு

மாஸ்கோ, ஜூலை 29

''2050ஆம் ஆண்டில் ஆர்க்டிக்துருவப் பகுதியில் பனிக்கட்டிகள் இருக்கமாட்டா'' என ரஷ்ய வானிலை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் அலெக்சாண்டர் ப்ரொலொவ் தெரிவித்துள்ளார்.

வட துருவமான ஆர்க்டிக் பகுதியில் ஒரு கோடியே 10 இலட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு பனிக்கட்டி இருந்தது. தற்போது ஒரு கோடியே 80 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு பனிக்கட்டியின் அளவு குறைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வர்த்தக கப்பல்களின் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இப்பகுதியில் ஹைட்ரோ கார்பன் அளவு கூடியதால், வெப்பம் அதிகரித்து பனிப்பாறைகள் உருகிவிட்டன. இதே நிலை நீடித்தால் இன்னும் 30 அல்லது 40 ஆண்டுகளில் கோடை காலத்தில் இப்பகுதியில் பனிப்பாறைகளே இல்லாத நிலை ஏற்படும் என்றும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆர்க்டிக் துருவப் பகுதியை கண்காணிப் பதற்காகவே 10 ஆயிரம் கோடி ரூபாயில் விண்வெளித் திட்டம் ஒன்றை உருவாக்கி உள்ளோம். இதன் ஒரு கட்டமாக ஆர்க்டிக் பகுதியில் சேரும் ஹைட்ரோ கார்பன் அளவை கணக்கிடுவது உட்பட பல்வேறு விடயங்களை ஆராய செயற்கைக் கோள்களை ஏவ திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக ரஷ்யா, அமெரிக்கா, கனடா, நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளுடன் விவாதித்து வருகிறோம் என்றும் அலெக்சாண்டர் ப்ரொலொவ் கூறியுள்ளார்.

# தலிபான்களுக்கு உளவுத்துறை உதவியதா? குற்றச்சாட்டை அடியோடு மறுக்கிறது பாக்.

தலிபான்களுக்குப் பாகிஸ்தான் உளவுத்துறை உதவி செய்கிறது என ஓர் இணையத்தளம் வெளியிட்ட தகவலை பாகிஸ்தான் அரசு மறுத்துள்ளது. இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் மலைப்பகுதிகளில் ஒளிந்து இருந்தவாறு கெரில்லா தாக்குதல்களை நடத்திவரும் தலிபான் தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்க இராணுவம் கடந்த 9 ஆண்டுகளாகப் போராடிவருகிறது. ஆனால், தலிபான்களை ஒழிக்கமுடியவில்லை.

இதற்கு முக்கிய காரணம், தலிபான் தீவிரவாதிகள் பலர் பாகிஸ்தான் எல்லையில் பதுங்கி இருந்துகொண்டு அடிக்கடி எல்லை கடந்து தாக்குதல் நடத்திவிட்டு பாகிஸ் தானுக்குத் தப்பிவிடுவதுதான்.

எனவே, தலிபான்களை ஒடுக்குவதற்காகப் பாகிஸ்தானின் உதவியை அமெரிக்கா நாடியது. இதற்காகப் பல ஆயிரம் கோடி ரூபாயையும், நவீன ஆயுதங்களையும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்து வரு கிறது.

இப்படி ஒருபக்கம் அமெரிக்காவிடம் உதவிகளை அபகரித்துக்கொண்டு, இன்னொரு பக்கம் தலிபான்களுக்குப் பாகிஸ்தான் உதவி செய்து வருகிறது. பாகிஸ்தானின் இந்த கபட நாடகத்தால் தான் தலிபான்களை அமெரிக்காவால் ஒடுக்க முடியவில்லை என முறைப்பாடு எழுந்துள்ளது.

பாகிஸ்தானின் கபட நாடகத்தைப் பற்றி சில மாதங்க[illegible] விடம் இந்தியா முறையிட்டது. அதை அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை.

இப்போது 'விக்கி லீக்ஸ்' என்ற இணையத்தளம் 92 ஆயிரம் ஆவணங்களின் ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டு, இந்த கபட நாடகத்தை வெளிப்படுத்தியுள்ளது. அதனால், தலிபான்களுக்குப் பாகிஸ்தான் இரகசிய உதவி செய்வது முழுமையாக வெளிச் சத்துக்கு வந்துள்ளது.

இந்த ஆவணங்கள் 2004ஆம் ஆண்டு முதல் சமீபகாலம்வரை சேகரிக்கப்பட்ட தொகுப்புகளாகும். இந்தத் தொகுப்புகளை ஆப்கான் போர் குறிப்பு என்ற பெயரில் அந்த இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் சாலைபோடுதல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்ட இந்திய ஒப்பந்தக்காரர்களைக் கொல்வதற்குத் தலிபான்களுக்கு ஐ.எஸ்.ஐ. 10 முதல் 15 இலட்சம் ரூபா வரை கொடுத்தது. இதுதவிர, இந்திய தூதரகத்தை தகர்க்கவும் தலிபான்களுக்கு ஐ.எஸ்.ஐ. பணம் கொடுத்துள்ளது என்றும் இந்த இணையம் தெரிவித்துள்ளது.

2007ஆம் ஆண்டு காபூல் ஜலலாபாத், ஹெராட், காந்தகார் ஆகிய நகரங்களிலுள்ள இந்திய அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்த தலிபான்களுக்கு ஐ.எஸ்.ஐ. ஆயுதங்களையும், பணத்தையும் கொடுத்தது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

[illegible] ஆண்டு காபூலிலுள்ள இந்திய தூதரகம் மீது தலிபான்கள் தற்கொலைத் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 2 தூதரக அதிகாரிகள் உட்பட 41 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ. ரூ.75 இலட்சம் செலவு செய்தது என்றும் இந்த இணையம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள இந்தியர்களுக்கு எதிராக மட்டுமின்றி, அமெரிக்க இராணுவச் சிப்பாய்களையும் ஒழிப்பதற்குத் தீவிரவாதிகளை ஐ.எஸ்.ஐ. தூண்டிவிட்டுள்ளது. அமெரிக்காவிடம் நிதி உதவி பெற்று அவர்களது இராணுவச் சிப்பாய்களையே கொல்வதற்குப் பாகிஸ்தான் தூண்டிவிட்டுள்ளது என்றும் இந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவல்கள் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இதற்கிடையில் இந்த இணையத்தள தகவல்கள் ஆதாரம் இல்லாதவை. கற்பனையானவை என்று கூறி பாகிஸ்தான் மறுத்துள்ளது. பார்கிஸ்தானின் வெளிவிவகார அமைச்சின் செய்தித்தொடர்பாளர் அப்துல் பஸிட் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார்.

இதுபோன்ற பொய்யான தகவல்களால் ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பாதிக்கப்படமாட்டா என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் நிறுத்திவைக்கப்படும் வாகனங்களில் ''பார்க் லைற்'' கட்டாயம் போட வேண்டும்

## சரா எம்.பியின் கோரிக்கையை அடுத்து எஸ்.எஸ்.பி. நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். நகர்ப்பகுதியிலும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் இரவு நேரங்களில் வீதிகளில் நிறுத்திவைக்கப் படும் வாகனங்களில் ''தரிப்பு சமிக்ஞை வெளிச்சம்'' ('பார்க் லைற்') போடப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத வாகனங் களின் சாரதிகள், உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவனுக்கும் அவருக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் நடந்த சந்திப்பின் போதே பத்மதேவ இப்படிக் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவண பவன் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்தார்.

★ நகர வீதிகளில் இரவு நேரங்களில் வாகனங்கள் 'பார்க் லைற்' இன்றி நிறுத் தப்படுவதால் பொதுமக்கள் பெரும் அசௌ கரியங்களுக்கு உள்ளாகிறார்கள். தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள் அந்த வாகனங்க ளில் மோதுண்டு காயமடைகின்றனர் என்று யாழ். ஆஸ்பத்திரி புள்ளிவிவரங்கள் மூலம் அறியமுடிகிறது. எனவே இரவில் தரித்துநிற்கும் வாகனங்களில் 'பார்க் லைற்' போடுவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

★ தெற்கில் இருந்து பொருள்களுடன் வரும் 'கொன்டெய்னர்' போன்ற பெரிய, நீண்ட வாகனங்களை வீதிகளில் நிறுத்தா மல், பொது இடம் ஒன்றில் நிறுத்த ஏற் பாடு செய்ய வேண்டும்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இது தொடர் பாக உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் - 'பார்க் லைற்' இல்லாது நிறுத்தப்படும் வாகனச் சாரதிகள், உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் - நாடா ளுமன்ற உறுப்பினர் ஈ.சவரணபவனிடம் தெரிவித்தார். (ஒ-ஐ)

# ஐந்து பிரிகேடியர்களுக்கு பதவி உயர்வு

கொழுமபு, ஜூலை 29

இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட பிரிகேடியர்கள் ஐவர், மேஜர் ஜெனரல்க ளாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என இராணுவச் செயலகம் அறிவித்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் யூ.ஏ.பி. மெதவலவும் பதவி உயர்த்தப் பட்டுள்ளவர்களில் ஒருவராவார்.

பிரிகேடியர்களான 52ஆவது படையணியின் முன்னாள் கட்டளைத் தளபதி எஸ்.ஏ.ஏ.எல். பெரேரா, ஈ.கே.ஜே.கே. விஜயசிறி, வி.யூ.பி. நாணயக்கார, எம்.எச்.எஸ்.பி. பெரேரா ஆகியோரும் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (சி)

# மங்கள சமரவீரவைக் கொலை செய்வதற்கு புலிகளுக்குத் தகவல் வழங்கியவர்களுக்குச் சிறை!

மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக பணியாற்றிய காலப்பகுதியில் அவரை கொலை செய்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ரகசிய தகவல்களை வழங்கிய குற்றத்திற்காக இருவருக்கு தலா 11 வருட கால கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

தண்டனை பெற்றவர்கள் இருவரும் வவுனியாவைச் சேர்ந்த பெரும்பான்மை இனத் தத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த 2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஒக்டோபர் மாதம் முதல் மங்கள சமரவீரவின் கொழும்பு மற்றும் மாத்தறைப் பிரதேசங்களில் உள்ள வதிவிடங்கள் தொடர்பான தகவல்களை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கியமை தெரிய வந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ரஹீம், கமலின் மற்றும் டேவிட் ஆகிய மூவர் தொடர்பாக பாதுகாப்பு தரப்பினர் தகவல் சேகரிப்பு தொடர்பாகவும் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தகவல் வழங்கினர் எனவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (சி)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆய்வுகளை நடத்த இலங்கை விஞ்ஞானிகளுக்கு அனுமதி

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை, 29

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் நாட் டில் அமைதியான சூழல் நிலவுவதால் இலங்கையில் உள்ள விஞ்ஞானிகள் வடக்கு, கிழக்கிற்கு சென்று தமது ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறந்த ஆய்வுகள் மற்றும் விஞ்ஞானத் திற்கு வழங்கப்படும் சிறந்த ஆய்வுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் விழா நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவிக் கையில்,

விஞ்ஞானிகளது அறிவு இல்லாமல் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியாது. ஆராய்ச்சியாளர்களது உதவியின்றி நாட்டில் எந்தத் துறையை யும் முன்னேற்ற முடியாது. இவர்கள் மூலம் தனியார் துறையினரே பெருமள வில் நன்மையடைகின்றனர் எனத் தெரி வித்தார்.

ஆய்வு மற்றும் அபவிருத்தி பணிகளுக் காக 475 விஞ்ஞானிகள் ஆராய்ச்சியாளர் கள் ஜனாதிபதியினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (சி)

## வன்னியில் நீண்ட காலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனை அடிப்படையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் மடு கல்வி வலயம், வவுனியா வடக்கு வலயம் ஆகியவற்றுக்கு இடமாற்றம் செய்யப்பட் டுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு வலயத்தின் ஒருபகுதி, மடு கல்வி வலயம் ஆகியவற்றில் இருந்து 232 ஆசிரி யர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு விடு விக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பட்டியல் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளை வலயக் கல்விப்பணிப்பாளர்கள் வழங்குவார்கள்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தற்பொழுது கடமைபுரியும் மாவட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டிருப்பது தொடர்பாக சம் பந்தப்பட்டவர்களுக்கு தனித்தனியாக அறி விக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து வன் னிப் பெருநிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் மூன்று வருடங்களுக்கு மட்டும் சம்பந்தப்பட்ட பாடசாலையில் கடமைபுரிய வேண்டும் என்று காலம் குறிப்பிட்டே இடமாற்றக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. மூன்று வருடங்கள் முடிவடைந்ததும் சம்பந்தப் பட்ட ஆசிரியர்கள் விரும்பிய இடங்க ளுக்கு பணியாற்ற அனுமதிக்கப்படுவர்.

சகல ஆசிரியர்களும் மேற்படி இட மாற்ற வேலைத்திட்டத்துக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் தமது பங்களிப்பை வழங்கவேண்டும் - என்றார். (ஒ-11)


**A/L 2010 விசேட கருத்தரங்கு**

**பொதுச் சாதாரணப் பரீட்சை**

கலை, வர்த்தக, கணித, உயிரியல்துறை மாணவர்களுக்கானது

ஆரம்பம்: நாளை (30.7) பிற்பகல் 2 மணி

ஏனைய நேரங்கள் வகுப்பில்

இப் பரீட்சைக்கான தவசேகர் ஆசிரியரின் வழிகாட்டல் நூல் (150/=) பிரபல புத்தக நிலையங்களிலும் வகுப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்.

101090 D.M.I. ஆரியகுளம் சந்தி

**கருத்தரங்கு**

**இந்துநாகரிகம்**

திரு.S.ஜெயக்குமார்

31.07.2010 சனி
01.08.2010 ஞாயிறு } 9.30 a.m

வெளி மாணவருக்கும் அனுமதி

**யூனிவேர்சல்**

இந்து மகளிர் கல்லூரி அருகே

**பிற்போடப்பட்டுள்ளது**

29.07.2010 நடைபெறவிருந்த வணிகக் கல்வி ஆசிரியர் திரு. எஸ்.மயூரன் அவர்களின் கருத்தரங்கு அதே நாளில் உயர்கல்வி நிறுவனத்தில் வேறொரு கருத்தரங்கு நடைபெற உள்ளதால் பிற்போடப்பட் டுள்ளது. ஓரிரு தினங்களில் திகதி அறிவிக்கப்படும்.

மேலதிக தொடர்புக்கு: 0772487662

**விற்பனையாகின்றது**

**Royal College Papers**

★வணிகக்கல்வி
★கணக்கீடு
★பொருளியல்
★இரசாயனவியல்
★பௌதீகவியல்
★உயிரியல்

அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2229881


## மேஜர் ஜெனரல் பிரசன்ன டீ சில்வா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராக அனுப்பப்படவுள்ளதாகக் கூறப்படும் நிலையில் இதுதொடர்பாக உங்களின் கருத்து என்ன என கேட்கப்பட்டது.

இந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கை யில் அவர் கீழ்கண்டவாறு தெரிவித்தார்.

''சிவந்தனின் ஐ.நா. நோக்கிய நடைப் பயணம் மிகச்சிறந்தது. அத்துடன் பாராட் டுக்கும் உரியது. இவ்வாறான செயற் பாடுகள் மிகச்சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும். அத்தோடு தொழிற்கட்சி யின் சகோதரக் கட்சிகள் உலகெங்கும் பரவியுள்ளன. அதனால் சிவந்தன் மேற் கொள்ளும் நடைபயண வழிகளில் எமது சகோதர கட்சிகளின் ஊடாக அதன் உறுப்பினர்களும், ஐரோப்பிய நாடாளு மன்ற உறுப்பினர்களும் அந்தந்த பிரதே சங்களில் சிவந்தனைச் சந்தித்து வரவேற்பு கொடுத்து உற்சாகப்படுத்த முடியும்'' - எனவும் கூறினார்.

**கூட்டத்துக்கு மில்லிபாண்டின் பிரதிநிதியும் வருகை**

இக்கூட்டத்தில் டேவிட் மில்லிபாண்டின் பிரதிநிதியாக வருகை தந்திருந்த டோன் என்பவர் இது தொடர்பாக உடனடியாக டேவிட் மில்லிபாண்டின் கவனத்துக்குக் கொண்டுசென்று ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

அடுத்து மேஜர் ஜெனரல் பிரசன்ன டீ சில்வாவின் பிரித்தானிய வருகை தொடர் பாக காடினர் பதிலளிக்கையில், ''நீங்கள் கூறுவது போன்ற செய்தியை நான் அறியவில்லை. இது மிகவும் வியப்பாக உள்ளது. போர்க்குற்றம் புரிந்த ஓர் இராணுவ படைப்பிரிவின் தளபதி தூதரக அதிகாரி யாக பிரிட்டன் வருவது உண்மையானால் அவர் நிச்சயமாக கைதுசெய்யப்படுவார். ஆனால் அதற்கான ஆதாரங்களை நீங்கள் எமக்குத் தரவேண்டும்'' என்றார்.

அதாவது அவரின் முழு விவரம், அவர் பணிபுரிந்த படைப்பிரிவின் பெயர், அவர் பதவி வகித்த காலம், அவரின் படை நடவடிக்கையின்போது மக்கள் கொல்லப் பட்டதற்கான சான்றுகள் என்பவற்றை விரைவில் தந்து உதவினால் அவர் சட்டத் திடம் இருந்து தப்பிக் கொள்ளாமல் நிச்ச யம் கைது செய்யப்படுவார் என்று அவர் கூறினார்.

இத்தரவுகளையும், ஆதாரங்களையும் பிரிட்டனில் வாழும் தமிழர்கள் திரட்டித் தரும் பட்சத்தில் அதனை நாடாளுமன்றம் வரை எடுத்துச்செல்வது மட்டுமன்றி பிரிட்டனுக்குள் அவர் கால் பதிக்கும் போதே கைது செய்யவும் முடியும். அதற்கு சட்டத்தில் இடமுண்டு எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)


**CLOSING DATE**

**ON 31-07-2010**

கொழும்பு பல்கலைக்கழகத்தின்

**BIT Registation**

**On or before**

**31-07-2010**

**@**

**Esoft Computer Studies**

**114, Navalar Road, Jaffna.**

**T: 021 222 4142, www.esoft.lk**


## சிவந்தன் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி ஆரம்பமானது.

பாதயாத்திரைக்குத் தலைமை வகித் துச் செல்லும் சிவந்தனுடன் பிரான்ஸைச் சேர்ந்த தமிழர்களும் இணைந்துகொண்ட னர்.

இந்தப் பாதயாத்திரை எதற்காக நடை பெறுகிறது என்பதை அறிந்துகொண்ட பிரான்ஸ் பொதுமக்களும் பொலிஸாரும் இந்தப் பாதயாத்திரைக்கு ஆதரவு வழங்கி வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)

## கூட்டமைப்பு விரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் ஆர். சம்பந்தனுக்கு அனுப்பி வைக்கவும் நேற்று முடிவெடுக்கப்பட்டது என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ் கட்சிகளின் அடுத்த சந்திப்பை எதிர்வரும் 14 ஆம் திகதி மட்டக்களப்பில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (ஒ)

## மீளக்குடியமர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உலக உணவுத் திட்டத்தின் நிரந்தரப் பிரதிநிதி ஆத்நாத் கானிடம் கோரினார்.

பருப்பு, மரக்கறி எண்ணெய், மா ஆகியன அமெரிக்காவி லிருந்து தருவிக்கப்படுகின்றன எனவும், சீனி, அரிசி, வெங் காயம் நிதியுதவி மூலம் அரபு நாடுகளிலிருந்து தருவிக்கப்படு கின்றன எனவும் கூறிய அவர், இவற்றை திட்டப் பிரதிநிதி சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் டெண்டர் மூலம் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொண்ட பின்னர், உணவுப் பொருள்களின் அளவை அதிகரிக்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார் என மீள்குடியேற்ற அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.